சுதந்திரன்

SUTANTHIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

வார இதழ் விலை 40 சதம் 10

புத்தகம் 8 ஜய ஜ மாசி மீ 29ஒ [13-3-8ல] கொழும்புக்கிழமை ரஜப் பிறை 7 இதழ் 41

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோத மாக்கப்படலாம்!

வேலையிலிருந்து நீக்கப்படுவதுடன் தேசத் துரோகக் குற்றமும் சாட்டப்படும்

புதிய மசோதா தயாரிக்கும்படி நிதி மந்திரிக்கு பிரதமர் ஆக்ஞை

(நமது நிருபர்)

அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமானது என அரசாங்கம் பிரகடனம் செய்ய இருக்கிறது என்று நம்பகமான ஒரு அந்தரங்கச் செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்கள்மீது பாரதூரமான தேசத்துரோக குற்றச் சாட்டு சுமத்தி அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இன்றுள்ள சட்டத்தின் கீழ் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களை அரசாங்கம் வேலையிலிருந்து நீக்கம் செய்யலாம்.

வேலை நிறுத்தம் செய்பவர்களை வேலை நீக்கம் செய்யும் தண்டனை போதாதென்றும், அத்தகையோர் மீது கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்றும் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை கருதுவதாகத் தெரிகிறது.

நிதிமந்திரி எம். டி. ஏ. ஜெயவர்தனவுக்குபிரதமர் அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில் மேற் கண்ட அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தேசத் துரோகமான ஒரு குற்றம் என்றும், எனவே இதை சட்டவிரோதமாக்குவதில் நாட்டு மக்கள் தம் பக்கம் நிற்பார்கள் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரசாங்க பயமுறுத்துவதற்கு அரசாங்க ஊழியர்களுக்கு தம்மால் அனுமதிக்க முடியாதென்றும், எனவே அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தங்களை சட்டவிரோதமாக்குவதற்கு வேண்டி சட்டமசோதாவை உடனடியாக தயாரிக்க வேண்டும் என்றும் சேர் ஜோன் கொத்தலாவலை மந்திரியாரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிய சட்டத்தின்கீழ் அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களை வேலையிலிருந்து நீக்குவதோடு தேசத் துரோக குற்றம் சாட்டி நடவடிக்கை எடுக்கப்படும். தேசத்துரோகக் குற்றச்சாட்டிற்கு பல வருட கடுங்காவல் தண்டனை விதிக்க முடியும் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

அரசாங்க ஊழியர்கள் சமீபத்தில் பல கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு தயாரிக்க எண்ணியிருப்பதாக

[9-ம் பக்கம் பார்க்க]

துறைமுகத்தில் பாதுகாப்புப் படை

வேலை நிறுத்தம் நடந்தால் நடவடிக்கை எடுக்க முன் ஏற்பாடு

கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் வெடித்தால் அவற்றை அடக்கி ஒடுக்கும் நோக்கத்தோடு துறைமுகத்தில்ஒருபாதுகாப்புப்படையை நிறுவுவதுபற்றி அடுத்த வாரத்தில் மந்திரி சபை விவாதிக்கும் என்று தெரியவருகிறது.

துறைமுகத்தில் ஏதாவது வேலை நிறுத்தம். அல்லது வேறுவிதமான தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் நடந்தால் உடனே துறைமுகப் பிரதேசத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படும் என்றும் தெரிகிறது.

துறைமுகத்தில் ஜோலியுள்ளவர்களுக்கு விசேஷ அனுமதிச் சீட்டுகளை துறைமுக அதிகாரி வளங்குவார். சாதாரண துறைமுக அனுமதிச்சீட்டு ரத்தாக்கப்படும்.

துறைமுகத் தொழிலாளர்களின் போராட்டங்களை மாத்தனமாடுவதற்கான மேற்படி பாதுகாப்புப் படை போலீஸ் சுங்க இலாகா, துறைமுக கமிஷனைச் சேர்ந்த ஊழியர்கள் மத்தியிலிருந்து திரட்டப்படும் என்று நம்பப்படுகிறது.

துறைமுகத் தொழிலாளிகள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து வருவதாகவும், தமது கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் எந்த நேரத்திலும் போராடமுன்வரலாம் என்றும் தெரிகிறது.

எனவே தொழிலாளிகளின் கோரிக்கைகளை அனுதாபக் கண்ணோட்டத்தோடு அணுகி அவர்களின நியாயமான குறைகளை தீர்க்க விரும்பாத ஆட்சி அடக்குமுறைவழிகளில் இறங்க முனைகிறது என்று கருதப்படுகிறது.

இதுபற்றி துறைமுகத் தொழிலாளர்களின் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியை நமது நிருபர் கேட்டதற்கு "தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அடக்குமுறைகள் ஒன்றும் புதியதல்ல. கொத்தலாவலையிலும் பயங்கரமான பாஸிஸ்டுகளை தொழிலாளி வர்க்கம் கண்டிருக்கிறது. அந்த பாஸிஸ்டுகள் எல்லாம் தொழிலாள வர்க்கத்தின் முன் மண்ணோடு மண்ணாகியதையும் நாம் அறிவோம். எனவே இந்த பயமுறுத்தல்களால் எல்லாம் தொழிலாளரை பயமுறுத்த முடியாது" என்றார்.

சாமர்த்திய முள்ள மாணவர்களுக்கு புதிய திட்டம்

கல்வி அதிபரின் யோசனை

திறமையுள்ளவர்களுக்கு தக்க உதவியளிப்பதில்லை என அவரின் கவலை

திறமையுள்ள மாணவர்களுக்கு விரைவில் தமது படிப்பை முடிக்கக்கூடிய ரீதியில் புதிய வசதிகளை செய்துகொடுக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டுவரவிருக்கிறது.

பள்ளிக்கூடங்களில் திறமையான மாணவர்கள் வெறுமனே மட்டையடிப்பதாகவும் அவர்களின் வளர்ச்சிக்கு எந்தவித வசதிகளும் செய்துகொடுக்கப்படுவதில்லை என்று கல்வி அதிகாரி சமீபத்தில் எழுப்பிய புகாரே இந்த புதிய ஆலோசனைக்கான காரணம் என்று தெரிகிறது.

இந்த திட்டத்தின் பிரகாரம் பள்ளிக்கூடங்களிலுள்ள திறமைவாய்ந்த மாணவர்கள் தமது கல்வியை சீக்கிரத்தில் முடிப்பதற்கு வேண்டிய ரீதியில் விசேஷ கல்வி வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுமுள்ள சிறந்த மாணவர்களை பொறுக்கி எடுத்து அவர்களுக்கு விசேஷ கல்வி வசதிகள் அளிப்பதற்கான நடவடிக்கையில் இறங்குமாறு கல்வி இலாகத் தலைவர் திரு ரி. டி. ஜெயசூரியா கல்வி அதிகாரிகளுக்கும், பள்ளிக்கூடப் பரிசோதகர்களுக்கும், பள்ளிக்கூட அதிபர்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

இந்தக் குழந்தைகள் தமது படிப்பை வெகு சீக்கிரத்திலே முடிக்க வேண்டும் என்று தமது விருப்பத்தை கல்வி அதிகாரி தெரிவித்திருக்கிறார். ஒரு வருடத்திற்குப்பதிலாக அரை வருடத்திலேயே அத்தகைய மாணவர்களுக்கு மற்ற வகுப்புக்கு உயர்வு தருவது வதுபற்றி ஆலோசனை செய்யுமாறு பள்ளிக்கூட அதிபர்கள் சிரத்தை காட்டுவதில்லை என்று கல்வி இலாகா அதிபர் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார் என்று தெரிகிறது.

ஒவ்வொரு மாணவனும் அந்த மாணவனின் மூளை வளர்ச்சிக்குத் தக்கரீதியில் சாதகமாக கல்விமுறை இருக்கவேண்டும் என்றும், ஆற்றலுள்ள மாணவர்கள் மற்றும் சாதாரண மாணவர்களுடன் இருந்து மட்டையடிப்பது தவறானது என்று கல்வி இலாகா அதிபர் மேலும் தமது கருத்தை தெரிவித்திருக்கிறார்.

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மற மறப்பு, மூதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங்கடத்தாமல்

உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

கிரிச்லெட்ஸ் ப்ளட் பியூரியர்

கேட்லாக் இலவம்!

மெளடன் ஏஜென்ஸீஸ், 170, ஆட்டுப்பட்டித்தெரு கொழும்பு. போன்: 2885

அரசாங்க ஊழியத்தில் ஆள் குறைப்பு

இந்த நிதி வருடத்திற்குள் நிச்சயமாக நடைபெறும்

இந்த நிதி வருடத்திற்குள் அரசாங்க ஊழியர்களிடை கட்டாயமாக ஆள் குறைப்பு நடைபெறும் என்பது இப்போது நிச்சயமாகியுள்ளது.

இதற்கான சகல உத்தரவுகளையும் நிதிமந்திரியார் வெளியிட்டிருக்கிறார்.

ஒவ்வொரு அரசாங்க இலாகாவிலும் எத்தனை ஊழியர்கள் இருக்கிறார்கள என்ற முழு புள்ளி விபரங்களையும் தனக்கு சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ள நிதிமந்திரியார், உடனடியாக அமுல் நடத்தக்கூடிய செலவினக் குறைப்பு நடவடிக்கைகள் என்னென்ன என்பதையும் தெரிவிக்குமாறு அரசாங்க இலாகாகளின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

அரசாங்க இலாகாகளில் எந்தெந்த பதவிகளை ஒழிக்கலாம் என்பது பற்றிய அபிப்பிராயத்தையும் தமக்கு அனுப்பி வைக்குமாறு நிதிமந்திரியார் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிரந்தர ஊழியர்களின் கடமைகளை செய்துவரும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குமாறும் நிதிமந்திரியார் அறிவித்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் நிலை என்ன? தமிழன் கதி என்ன?

அரசியல் சட்டம் திருத்தப்படும் என்ற வாக்குறுதி அரையாண்டு கிழமாகிவிட்டது

சாவகச்சேரிப் பிரதிநிதியின் விபீடண வாதம்

கன்ற வருடம் செப்டம்பர் மாதக் கடைசியில் யாழ்ப்பாணத்திற்கு எழுந்தருளிய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை, யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் வழங்கியருளினர்!

"அரசியல் சட்டத்தில் வேண்டிய திருத்தம் செய்து தமிழ் மொழியும் இந்நாட்டின் அரசகரும மொழியாகும் அந்தஸ்து பெறும் வண்ணம் செய்வேன்" என்பதுதான் அந்த வரப்பிரசாதமாகும்.

இந்த வாக்குறுதியளித்து சுமார் அரை ஆண்டு காலம் கடந்துவிட்டது. இதன் பிறகு இதைப்பற்றி எந்த சந்தர்ப்பத்திலும் பிரதமர் வாய்திறக்கவுமில்லை, விரலசைக்கவுமில்லை.

இதுசம்பந்தமாக "கொத்தலாவலைத் தெய்வம் கொடுத்த வரம்" என்று 10-10-54 சுதந்திரன் இதழில் தீட்டிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"இந்த வரப்பிரசாதமான வாக்குறுதியைக் கேட்டு வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் பண்பு படைத்த தமிழ் மக்களில் சிலர் 'தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கிடைத்துவிட்டது. இனி என்ன குறை?" என்று எண்ணுவதாகத் தெரிகிறது.

"பிரதமரின் மேற்படி வாக்குறுதியில் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று நாம் தமிழ் மக்களை எச்சரிக்க விரும்புகிறோம். வெறும் வாக்குறுதிகளில் பயனில்லை; செயலில் நடைபெற வேண்டும். அப்படி நடைபெறுமா? அரசியல் திட்டம் திருத்தம் செய்யப்படுமா? காரியம் முற்றுப் நிறைவேறும் வரை நிலைமை சந்தேகமானதே.....

"யாழ்ப்பாணத்தில் பிரதமர் கொத்தலாவலை கூறிய வார்த்தைகள் யாவும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அங்குள்ள மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே பேசப்பட்டவையென்றே நாம் கருதுகிறோம். அப்படியல்ல என்பதை நிரூபிப்பது ஒத்துழைப்புத் தமிழர்களின் கடமையாகும்.
....."

சுதந்திரனின் தீர்க்கதரிசனமான கூற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை அரையாண்டு கழித்த பின்பாவது தமிழ் மக்கள் உணரக்கூடியதாக இருக்கிறதல்லவா? உண்மை

"தும்பிக்கை" எழுதுவது

யில் சட்டத் திருத்தம் செய்து தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கும் நோக்கம் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு உண்டென்றால், இந்த முக்கியமான விஷயத்தை அவர் கடந்த வாரத் திற்கு முந்தியவாரம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டின் முன்பு சமர்ப்பித்து கட்சியின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். அவர்தான் இப்பிரச்னையைக் கிளப்ப விரும்பாவிட்டாலும், தமிழுக்காக உயிர்விடுபவர்போல் பாசாங்கு செய்துவரும் ஒத்துழைப்பு ஊதுகுழலான மந்திரி நடேசனுவது ஒரு பிரேரணை உருவத்தில் இப்பிரச்னையை ஐக்கிய தேசியக் கட்சி மகாநாட்டிற்கு கொண்டு வந்திருக்கலாம். இதிலிருந்து தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கும் அரசியல் சட்டத் திருத்தம் என்றுமே நடைபெறப்போவதில்லை என்பது ஊர்ஜிதமாகின்றது.

போதாக்குறைக்கு, கடந்த வார சுதந்திரனில் வெளியான முன்பக்க முதல் செய்தி, சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்க அரசாங்கக் கட்சிக்குள்ளே நடைபெற்றுவரும் சூழ்ச்சியை அம்பலப்படுத்தியிருக்கிறது. சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்ற இயக்கம் சிங்கள மக்களிடையே பிரமாண்டமான அளவு செல்வாக்குப் பெற்றுள்ளதாகவும், இது பொதுத் தேர்தலில் யு. என். பிக்குப் பெரும் பிரச்னையாக இருக்கும் என்றும் பூச்சாண்டிகாட்டி, சிங்களத்தை மட்டுமே அரசாங்க மொழியாகத் திணிப்பதற்கு திரு ஜே. ஆர். ஜயவர்த்தனு முயற்சிக்கிறார். இது காரணமாக சிங்களத்தைமட்டுமே இலங்கையின் தேசிய மொழியாக்குவது பற்றி ஆராய்ந்து சிபார்சுகள் செய்வதற்காக மந்திரி சபை ஒரு உபகமிட்டியை நியமிக்க விருக்கிறது என்று தெரிய வருகிறது.

தமிழின் நிலைதான் இதுவென்றால், தமிழனின் கதியும் இதுவாகத்தான் இருக்கிறது. இதற்கு உதாரணம் தேடி அதிக தூரம் போக வேண்டியதில்லை. நமது மதிப்புக்குரிய நீதியரசர் திரு நாகலிங்கம் ஒரு தமிழனாய் இருந்த காரணத்தால் அவருக்கு நடந்திருக்கும் மரியாதை ஒன்றே இந்நாட்டில் தமிழனின் கதி என்ன என்பதை நிரூபிக்கிறதல்லவா?

உண்மை நிலை இப்படி இருக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில், அக்கட்சியில் புதிதாகச் சேர்ந்துகொண்ட வரான சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. குமாரசாமி கூறியிருக்கும் வார்த்தைகள் நகைப்பிற்கிடமானவை. "வகுப்புவாதத்தைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இக்குற்றச்சாட்டிற்கு ஆளானதில்லை. ஆளும் கட்சியான யு. என். பி. தமிழர்களுக்குப் பாதகமாக ஏதாவது ஒரு காரியம் செய்திருக்கிறதென்று இங்கு கூடியிருப்பவர்களில், அல்லது வெளியே உள்ளவர்களில் யாராவது சுட்டிக்காட்ட முடியுமா? அப்படி ஏதாவது நடைபெற்றிருந்தாலும் அது கவனயீனமாக அல்லது அளவுக்கு மீறிய தேசிய உணர்ச்சிகாரணமாக நடைபெற்றிருக்க முடியுமே தவிர, வேண்டுமென்று நடைபெற்றிருக்காது"

திரு குமாரசாமியின் இந்தப் பேச்சை உளறல் மொழி என்று கூறுவதா அன்றி விபீஷணவாதம் என்றுவிவரிப்பதா என்பதை நாமறியோம். தமிழ்ப்பேசும் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL 174, SEA STREET, COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு.

புறொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

ஹாஸ்யக் கட்டுரை:

மறதிக்கு மருந்து!

ரீ. பாக்கியநாயகம்

உலக ஆரம்பத்திலிருந்து மனிதர்களது அன்றாட வாழ்க்கையில் அட்டை போல் ஒட்டிக்கொண்டு வருபவற்றுள் ஞாபக மறதியும் ஒன்று. மனிதருக்கு மட்டுமென்ன உலகத்தையே படைத்த அந்த சாட்சாத் பிரம்மாவுக்குகூட மறதி இருந்ததாமென நம் பாட்டிமார் கூறுவதுண்டு. ஆரம்பத்தில் ஆண்வர்க்கத்தை மட்டும் சிருஷ்டித்த அவர் பெண் ஜென்மத்தைப் படைக்க அடியோடு மறந்துவிட்டாராம். பின்பு ஆண் மகனின் அழுகையையும் அங்கலாய்ப்பையும் பொறுக்க முடியாமல் அவனை ஆற்றித் தேற்றுவதற்காக பெண் வர்க்கத்தையும் படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம் சிருஷ்டி கர்த்தாவுக்கு. ஆனால் காலப்போக்கில் பெண்களது அழுகையை அடக்குவதற்கு அவர்களைப் படைத்த அந்தப் பிரம்மாவாலும் முடியாமற் போயிற்று!

எனக்கு ஒரு நண்பர் இருந்தார். எனக்கும் அவருக்கும் இந்த மறதியென்பது சர்வசாதாரணமான விஷயம். என்னிடம் வாங்கிய கடனைத் திருப்பித்தர அவருக்கு மறதியாகிவிடும். ஆனால் எனக்கோ கொடுத்த கடனைத் திருப்பிக்கேட்க மறதி. இவ்வாறு எங்களிருவருக்குமிடையே மறதி அசுரவேகத்தில் முன்னேறிக்கொண்டிருந்தபடியால் வெகுசீக்கிரத்தில் எனது நிதி நிலமையில் சிறிது நெருக்கடி ஏற்பட ஆரம்பித்தது. அதன்காரணமாக எனது நண்பரது சகவாசத்தையே நான் இழக்க வேண்டிய பாக்கியம் எனக்குக் கிட்டிற்று!

மறதி கல்யாண வீடுகளிலேதான் சரியான தாண்டவமாடு மென்னும் உண்மையை என்னுடன் நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள். உதாரணமாக கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த அந்த அப்பாவி மாப்பிள்ளையைப்பற்றி அறிந்திருப்பீர்கள். அதேபோன்று தான் கல்யாணத்தை தடை செய்ய வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் மணப் பாக்கியைக் கேட்டுப் பெறுகிறோம்.

சற்றேனும் மறந்துவிட முடியாத ஒரு சில காரியங்களும் நமக்கு உண்டு. உங்களுக்கு எப்பொழுதாவது மூச்சுவிட மறதி ஏற்பட்டிருக்கிறதா? அவ்வாறு ஏற்பட்டால் அன்றிலிருந்து உலகம் உங்கள்மீது உரிமை கொண்டாடவும் மறந்துவிடும். இதேபோன்றுதான் நேரத்துக்கு உணவு அருந்தவும் நமக்கு மறதி ஏற்படுவதில்லை.

இனி மறதிக்கு மருந்து என்ன என்பதையிட்டு சற்றுப் பார்ப்போம். எனக்கு ஞாபகமறதி அதிகம் என்னும் உண்மை எனது மனைவிக்கு மட்டுமே இதுகால வரை தெரிந்திருந்தது. எனவே ஆபீஸுக்கு நான் புறப்படுமுன் எனது கைக்குட்டையை எடுத்து அதில் ஒரு சில முடிச்சுக்கள்போட அவள் ஆரம்பிப்பாள். "இங்க பாருங்க இரண்டு முடிச்சுக்கள் போட்டிருக்கிறேன். ஒன்று மாலையிலே கடைவீதி வழியாய் வரும்போது கடுகுவாங்கி வருவதை மறக்காமலிருக்க. மற்றது அப்படியே என் சினேகிதி புஷ்பம் வீட்டுக்கும் போய் நான் நேற்றுக் கொடுத்த தையல் "டிசைன்" புத்தகத்தை அவளிடமிருந்து வாங்கிவர மறக்காமலிருக்க" எனக் கட்டளையிடுவாள் என் சகதர்மினி.

ஆனால் மனைவி அளிக்கும் இந்த முடிச்சு மருந்துக்குக்கூட ஒரு சில சமயங்களில் மறதியை முற்றுக அழிக்க முடிவதில்லை. ஒருதடவை மூன்று முடிச்சுக்கள் போடப்பட்ட எனது கைக்குட்டையில் ஒருமுடிச்சு குலைந்து

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

வீ. நியாகராசா, ஆரப்பற்றை

கே: இளம் பெண்கள் கைப்பந்தாட்டத்தில் பங்கு பற்றலாமா?

ப: அவசியம் பங்குபற்ற வேண்டும். அப்போதுதானே அவர்கள் எதிர்காலத்தில் தங்கள் கணவர்களைக் கைப் பந்தாக எறிந்து விளையாட முடியும்.

கே: சேர் ஜோன் கொத்தலாவலையை பதவியிலிருந்து நீக்கினால் அவர் என்ன செய்வார்?

ப: பாரிஸில் ஒரு பர்ணசாலை அமைத்துக்கொண்டு அங்கு யோக நிஷ்டைகளில் அமர்ந்துவிடுவார்!

ஃ

★க.அ.முகமது திருகோணமலை

கே: விதி என்றால் என்ன?

ப: மதியுள்ளவர்களால் வெற்றிகரமாக மீறப்படுவதற்காக சட்ட நிபுணர்களால் கட்டப்படும் ஒரு ஓட்டை வேலி.

ஃ

இ. அ. குமாரசாமி, புளியங்கூடல்

கே: தண்ணீருக்கு நிறம் இல்லை என்கிறார்களே இது சரியா?

ப: சுத்தத் தவறு. வேண்டுமானால் கொழும்பில் கிடைக்கும் குழாய் நீரை ஒரு கிளாஸில் ஊற்றிப் பாரும். அது எத்தனை அழகான வர்ணங்களோடு காட்சியளிக்கிறது!

கே: தமிழனுக்கு ஆயுதம் எது?

ப: வாய்தான்!

கே: எம். ஆர். ராதாவின் நடிப்பைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நடிப்பை வெறும் நடிப்பு என்று எண்ணும் அளவிற்கு மிகைப்படுத்தி நடிக்கும் ஒரு நடிகர் அவர்.

கே: உங்கள் ஓய்வு நேர உபயோகம் என்ன?

ப: வேலை செய்வது.

கே. வெள்ளையன், அக்கரைப்பற்று

கே: உங்கள் வாழ்க்கைக்கு வேண்டியது எது?

ப: எழுத்து.

கே: ஒரு கெட்டிக்காரப் பெண்ணுக்கு என்ன தெரிந்திருக்க வேண்டும்?

ப: வேண்டும்போது கண்ணீரை வரவழைத்துக்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.

ஃ

தி. நாகராஜன், மட்டக்களப்பு

கே: பெண்ணிடம் காந்த சக்தி இருக்கிறதா?

ப: இல்லாமலா அன்றைய சிசுவாமித்திரர் தொடக்கம் இன்றையப் பெரியார் வரையில் தாடிக் கிழவர்கள்கூட 'ஷொக்' அடித்துக் கஷ்டப் படுகிறார்கள்?

கே: கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற பழமொழிக்கு இன்றைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் யார்?

ப: திரு சிவஞானக் கிராமணியார் கூழ் என்ற காங்கிரஸிற்கும் மீசையென்ற தமிழரசுக்கும் இடையே அவர் தத்தளிக்கிறாரல்லவா?

ஃ

எஸ். ராயப்பு, மட்டக்களப்பு

கே: சுகம் எங்கே உண்டு?

ப: இது வயதைப் பொறுத்த விஷயம். பாலகனாயிருந்தால் பால் புட்டியிலுண்டு, சிறுவனாயிருந்தால் சினிமாவிலுண்டு, வாலிபனாயிருந்தால் வனிதையிடமுண்டு, நடுவயதினனாயிருந்தால் நல்ல வருவாயிலுண்டு, கிழவனாயிருந்தால் மரணத்தைத் தடுக்கும் மாத்திரைகளில் உண்டு.

ஃ

எம். கே. சுந்தரன், யாழ்ப்பாணம்

கே: கேள்வி பதில் என்ற பகுதியை முதன் முதல் தமிழ்ப் பத்திரிகைகளில் துவக்கியவர் யார்?

ப: தமிழ் நாட்டில் முதன் முதல் துவக்கியவர், தமிழ்ப் பத்திரிகைகளில் பல புதிய

பரிசு ரூபா 3

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்ட்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்ய முமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

அம்சங்களுக்கு காலாயிருந்த திருவாளர் 'கல்கி' அவர்கள் தான். இலங்கையில் இப்பகுதியை முதன் முதல் ஆரம்பித்தவர் ஸ்ரீமான் குயுக்தியார் என்றே நம்புகிறேன்

ம. குருச்சந்திரன், திருகோணமலை

கே: குயுக்தியாரே, நீர் ஒட்டப் பந்தயத்தில் வெற்றியடைந்ததுண்டா?

ப: வாழ்க்கை என்ற ஓட்டப் பந்தயத்தில் நான் எத்தனையோ தோழர்களை முந்தி விட்டேன். ஆயினும் எனக்கு கடன் தந்த அரு. முரு. கருசெட்டியாரிடம் மட்டும் என் ஓட்டம் வெற்றியடைந்ததில்லை.

ஃ

எஸ். சிவஞானம், ஆவரங்கால்

கே: ஆழம் தெரியாமல் காலை விடுவது என்றால் என்ன?

ப: விஷயம் தெரியாமல் தேயிலை விலையைப்பற்றி இங்கிலாந்தில் உளறுவது என்று பொருள்.

கே: நாஸ்திகர் என்று சொல்வது யாரை?

ப: வாயினால் கடவுள் பெயரை உச்சரித்துக் கொண்டு மனத்தினால் கசடர்களாக நடப்பவர்களை.

கே: மகிழ்ச்சி எப்போது உண்டாகிறது?

ப: நிறைவு எப்போது உண்டாகிறதோ அப்போது மகிழ்ச்சி உண்டாகிறது

ஃ

ஏ. எஸ். கதிரமலை, பொலிகண்டி

கே: பெண்கள் கூலிங் கிளாஸ் (புகைக் கண்ணாடி) அணிவது எதற்காக?

ப: பிறருக்காக. அதாவது கண்ணில்லாத குருடன் விளக்கு கொண்டு போனது எதற்காக? கண்ணுள்ள குருடர் பலர் இருக்கிறார்கள் அவர்கள் தன்மீது வந்து மோதிக்கொள்ளாமல் இருப்பதற்காக. அதுபோலவே பிறர் கண்கள் தங்கள் கண்களில் மோதி விபத்து ஏற்படாமல் இருப்பதற்காகவே

முகாடி[illegible] பெண்கள் கூலிங் கிளாஸ் அணிகிறார்களாம்.

ஃ

கே. ஆறுமுகம், மீசாலை

கே: 1942ல் [illegible] 48 வரை இலங்கை வாழ் தமிழ் பேசும் பகுதியின் முடிசூடா மன்னனாக விளங்கிய திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் இன்று எப்படி இருக்கிறார்?

ப: முடிசூடா மன்னனாய் விளங்கியவருக்கு 1948ல் ஒரு அடைமுடியைச் சூட்டி அவரை ஒரு ''போலி ராஜா'' வாக்கிவிட்டார் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா. இன்று ''போலி'' மட்டும் மிஞ்சியிருக்கிறது. ''ராஜா'' வும் போய்விட்டது.

ஃ

வெ. அரசரெட்னம், வீரபுரம்

கே: நீர் ஆவியாகுவதை நீங்கள் கண்டதுண்டா?

ப: ஆம் கண்டிருக்கிறேன்: ஆறு ரூபாய் கொடுத்து வாங்கும் எட்டு டிராம் தண்ணீரைச் சிலர் சில நிமிஷங்களில் ஆவியாக்கிவிடுகிறார்களே.

ஃ

டி. சிதம்பரப்பிள்ளை, முள்ளியான்

கே: ஓய் குயுக்தியாரே, எந்த நேரம் பார்த்தாலும் உம்முடைய முகத்தில் இன்பமாய்த்தானிருக்கிறது. உமக்கு துன்பமே வருவதில்லையா?

ப: ஏன் வருவதில்லை? நான் போடும் ஹாஸ்யக் குண்டுகளை ரஸிக்கத் தெரியாமல் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருக்கும் பிரகிருதிகளைக் கண்டால் நான் சகிக்க முடியாத துன்பம் அடைவேன்.

ஃ

த தொண்டன், வவுனியா

கே: நான் உங்களை ஒரு பெரியார் ஆக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் கருத்தெதுவோ?

ப: வேண்டாமையா, வேண்டாம். முதலில் எனக்கு தாடி கிடையாது. இரண்டாவது இரண்டாம் தாரம் செய்யும் நோக்கம் கிடையாது. மூன்றாவது பிள்ளையாருக்கும் எனக்கும் பற்று இல்லாவிட்டாலும் பகை கிடையாது. இந்த மூன்றும் இல்லாத என்னைத் தாங்கள் எப்படிப் பெரியார் ஆக்க முடியும்?

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

சிகரத்தை நான் அமைப்பேன்!

"மஹாகவி"

நன்றுக இல்லையென
நாச்சுவைக்கை வீசுகிறார்;
நண்பா, அறிந்திலரா
நல்லவையை? சிச்சீ! என்
பொன்றுத பச்சை உளம்
பொத்து வெடித் துக் கவியாய்ப்
பூத்து நிறைந்துளதைப்
புவிகவனிக் காவிடினும்,
இன்றப் பழங்கம்பன்
எம்மிடையே மீண்டுள்ளான்
என்றெழுந்து நின்றுடார்
ஏதிலர்கள் எவ்வுலும்,
என் தாளெ லாம் எழுத்தே!
எழுத்துக்கே என் ஆவி!
குன்றுது காண், எதெவர்
கூறிடினும் என்மூச்சு!

★

இல்லாத கற்பனையை
இங்கிழுத்துக் கொண்டு வந்தே,
இனிக்காது தென் மொழியும்
என்றெழுதிக் காட்டி, எமைச்
சொல்லால் உறுத்துபவர்
சூழ்ந்திருக்கும் உன்னுட்டில்,
சும்மா இருக்க முடி
யாமலொரு சோம்பேறி
கல்லாய்ச் சமைந்த தமிழ்க்
கவிதைக் குயிரூட்டிக்
காதைக் கெடுக்காது,
கருத்தை வழங்கிடில், ஆம்,
செல்லாது போய்விடுமே!
ஓ, இதை நான் அறியேனு?
செந்தா மரை மலரைச்
சேறறிய மாட்டாதே!

★

இன்ன இவன் கூறுகிறான்!
இது இத் தகையதென
இங்கெமது 'சிங்களர்கள்'
இன்னும் உண ராவிடினும்,
பொன்னை இது பொன்னென்று
போற்றத் தெரியாதார்
பொய், புகழ்ச்சி யால் என்னைப்
போர்த்தாலும் பொழுதும்,
என்ன? இவையெல்லாம்
இங்கெவர்க்கு வேண்டும், போ!
எழுத்தைப் பிறருக்காய்
இறக்கிட, என் சிந்தனையைச்
சின்ன மனிதர்க்காய்ச்
சிறிதாக்கத் தேவையில்லை!
சிறப்புக் கொருபுதிய
சிகரத்தை நான் அமைப்பேன்!

★

அண்டம் முழுதும் அளந்
தறிவை எடுத் தூட்ட, அதோ
அந்திச் சுடர்வானை
அப்படியே தீட்ட, அயல்
மண்டும் கொடுமைகளை
மாய்த்தறமே நாட்ட, ஒரு
மாசற்ற இன்ப வெறி
மக்களிடை மூட்ட, வரி
வண்டைப் புறங்காண
வார்த்தைகளை மீட்டும், பல்
வாழும் இலக்கியங்கள்
வார்த்துயர்வு காட்ட, மயல்
கொண்டேன்; கொடுக்கின்றேன்;
கொள்ளாவிட் டால் என்ன?
கோதைப் பழமென்போர்
குறைகள் கண் டால் என்ன?

★

பிஞ்சுப் புது நெஞ்சைப்
பீறிட்டுப் பொங்கிவரும்
பேச்சில், பிற நாட்டார்
பெருகு பெரும் பேற்றில், உயிர்
மிஞ்சித் தெறிக்கின்ற
மேம்பாட்டுப் பாட்டில், எனை
மீறிப் பறக்கின்ற
மின்சார வீச்சில், அடடா
கிஞ்சித்து மே அழகு
கிடையாதாம், கேட்டாயா?
கேந்திற் றவரிடையே
கெட்டழியா தென்னிடமே
எஞ்சிக் கிடக்கின்ற
இன்தமிழ் இவ வென்பாக்களை
என்னைக் கொருநாளோ
எத்திசையும் வெல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எழுத்துகள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

சீன அரசியல் திட்டம் 3-4:

அறுபது கோடி மக்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யும் ஆட்சி அமைப்பு

டாம்பீகமான இண்டாம் சபை இல்லாது ஒரே சபை கொண்ட சீன அரசியல் திட்டம்

இலங்கையில் போலல்லாது பிரதமர், மந்திரிகளின் நியமனத்தை மக்கள் சபையே தீர்மானிக்கிறது

சீனாவின் சட்ட நிரூபண, சட்டப் பிரயோக அமைப்பு முறைகள்

புதிய சீனத்தின் ஆட்சி அமைப்பை சரியாக புரிந்து கொள்வதற்கு அதன் விஸ்தீரணத்தை அறிந்து கொள்வது அவசியம். ஐன நாயகத்தின் புதிய சாதனை யாளரான பிரமாண்டமான —ராட்சசமான கஷ்டத்தை உணர்வதற்கு இது உதவும். உலகத்தரவு ஆற்றல் ஒரு பங்கான சோஷலிஸ்ட் குடியரசுக்கு அடுத்தபடியாக உலகத்திலேயே ஆகப் பெரிய நாடு சீனா. அதன் விஸ்தீரணம் 37,50,000 சதுர மைல். ஆசியாவின் ஐந்தில் ஒரு பாகமான சீனா முக்கிய மான ஆசிய நாடுகளுடன் எல்லைத் தொடர்பு கொண்டுள்ளது.

உலக நாடுகளின் ஜனத் தொகையில் முதன்மைவகிப்பது சீனா. பொத்தம் 58 50,00,000. சோவியத் நாட்டிலும் ஜனத்தொகையிலும் மூன்று மடங்கு பெரிது. இதற்கு உலக நாடுகளின் ஜனத்தொகையைப் பார்ப்பது நல்லது சீனா 58 கோடி 50 லட்சம், இந்தியா 36 கோடி 70 லட்சம், சோவியத் யூனியன் 21 கோடி 50 லட்சம், அமெரிக்கா 16 கோடி, ஜப்பான் 8 கோடி 7 லட்சம்

இந்திய அரசியல் திட்டம் வகுக்கப்பட்ட காலத்தில் ஜனநாயகத்தின் ஆகப் பெரிய சோதனை என்று கூறப்பட்டது, ஆனால் அந்த ஸ்தானத்தை சீனா இப்பொழுது எடுத்துவிட்டது. சீனாவில் வருடாவருடம் ஜனத் தொகை அதிகரிப்பு 1,20,00,000 என்று கடைசியாகக் கிடைத்த தகவல் கூறுகிறது.

மனித வர்க்கத்தில் ஒரு பிரமாண்டமான பகுதியான இந்த பகுதியைத்தான் நிர்வகிக்கவேண்டும்; ஆளவேண்டும்; அதன் தேவைகளையும், அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யவேண்டும். சகல மக்களின் தேவைகளையும் திருப்தி செய்யக்கூடியரீதியிலேயே சீனா ஆட்சி அமைப்பு நிறுவப்பட்டிருக்கிறது.

சீன அரசியல் அமைப்பின் தனி விசேஷம் என்னவென்றால் நவீன காலத்து அரசியல் அமைப்புக்கள் போலல்லாது ஒரே ஒரு சபையைத்தான் அது கொண்டுள்ளது. சமஷ்டி அரசியல் திட்டம் உள்ள நாடுகள் எல்லாம் இரண்டு சபைகள் கொண்டுள்ளன. ஆனால் சீனாதான் சமஷ்டி ஆட்சி முறையையும் அதே நேரத்தில் ஒரு சபையும் கொண்ட ஒரே ஒரு நாடு.

என்றாலும் சீனாவின் ஒரு சபை அரசியல் அமைப்பு, அரசியல் திட்டம்பற்றிய நவீன கண்ணோட்டத்துடன் ஒத்துப்போகிறது. இரண்டாவது சபை வெறும் டாம்பீகமே அல்லாது அதனால் பிரயோஜனமில்லை என்பது இன்றைய சித்தாந்தம்.

சீனா ஆட்சியின் ஆக உயர்ந்த அங்கம் சீன தேசிய மக்கள் காங்கிரஸ். ஆட்சியின் சட்டமியற்றும் அதிகாரம் இதற்கு மட்டும்தான் உண்டு.

மாகாணங்கள், பிரதேச சுயாட்சிகள், நகர மாமன்றங்கள், இராணுவம், வெளி நாட்டு சீனர்கள் இங்கெல்லாமிருந்து தேசிய மக்கள் காங்கிரஸுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

சீன தேசிய மக்கள் காங்கிரஸின் காலம் 4 வருடங்கள். எந்தக் காரணத்தை ஒட்டியும் தேர்தலை ஒரு வருடத்திற்கு மேல் தள்ளிப் போட முடியாது. தேர்தலுக்கான இந்த உத்தரவாதம் வேறெந்த நாட்டிலும் அளிக்கப்படவில்லை.

இதன்மூலம் சுதந்திர தேர்தல் அதன் புனித ரூபத்தில் பாதுகாக்கப்படுகிறது.

தேசிய மக்கள் காங்கிரஸ் வருடத்திற்கு ஒரு தடவை கூடுகிறது. இதற்கிடையில் தேசிய மக்கள் காங்கிரஸை கூட்ட வேண்டும் என்று அதன் நிரந்தரக் கமிட்டி விரும்பினால் கூட்டலாம். அல்லது மொத்த அங்கத்தினர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் கோரினாலும் கூட்டப்படவேண்டும்.

ஏ. ஆர். ஆசீர்வாதம்

தேசிய மக்கள் காங்கிரஸ் சட்டம் இயற்றும், சட்டத்தைத் திருத்தும் உரிமை கொண்டது. அதுவே அக்கிராசனரையும், உப அக்கிராசனர்களையும் தெரிந்தெடுக்கிறது. பிரதமரையும், சட்டசபையின் அங்கத்தவர்களையும் நிர்ணயிக்கிறது பிரதான மக்கள் நீதிமன்றத்தின் அக்கிராசனரைத் தெரிவு செய்கிறது. தேசிய பொருளாதார திட்டத்தை நிர்ணயிக்கிறது. வர்வு செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிறது சண்டை, சமாதானத்தை தீர்மானிக்கிறது.

அடுத்த கட்டுரை

சீனாவின் அரசியல் திட்டம் என்ற இந்த தொடரில் சீனாவின் சமஷ்டி ஆட்சி முறையைப்பற்றி திரு ஏ. ஆர். ஆசீர்வாதம் அடுத்த கட்டுரையில் விளக்குவார்.

தேசிய இனப் பிரச்னை ஒவ்வொரு நாட்டிலும் உக்கிரமடைந்துவரும் இன்று, சீன மக்கள் எப்படி தமது பிரச்னையை சுமுகமாகத் தீர்த்திருக்கிறார்கள் என்பது முக்கியமானது.

அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்றால் மூன்றில் இரண்டு பகுதி வாக்குகள் பெறவேண்டும்.

தேசிய மக்கள் காங்கிரஸ் அதன் முதல் கூட்டத்தில் ஒரு நிரந்தரக் கமிட்டியை தெரிவு செய்கிறது. மக்கள் காங்கிரஸின் சார்பாக செயலாற்றும் ஆட்சி ஸ்தாபனம் இதுவே. நிரந்தரக் கமிட்டி தனது வேலைகளை தேசிய மக்கள் காங்கிரஸுக்கு அறிக்கை செய்யும். நிரந்தரக் கமிட்டியின் செயல்களை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ தேசிய மக்கள் காங்கிரஸுக்கு அதிகாரமுண்டு.

நிரந்தரக் கமிட்டிக்கு உதவியாக தேசிய இனங்களின் கமிட்டி, மசோதாக்கமிட்டி, வரவு செலவுத் திட்டக் கமிட்டி போன்ற பல கமிட்டிகளை தேசிய மக்கள் காங்கிரஸ் நியமிக்கிறது.

சீனாவில் தேசிய மக்கள் காங்கிரஸ் அங்கத்தினர் யாரையும் தேசிய மக்கள் காங்கிரஸ் அல்லது அதன் நிரந்தரக் கமிட்டியின் அனுமதியின்றி கைது செய்யவோ - வழக்கு விசாரணை நடத்தவோமுடியாது இந்த உரிமை வேறெந்த நாட்டிலும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சீனாவில் ஒரு மக்கள் பிரதிநிதிக்கு பரிபூரண பேச்சுரிமை உண்டு. மக்கள் காங்கிரஸிலோ அல்லது வெளியேனுமோ தம் அபிப்பிராயத்தை வெளியிட முடியும். இலங்கையில் திரு. தஹநாயகா பாராளுமன்றத்தில் பேசுவதை வெளியிலே பேசிவிட்டால் கம்பி எண்ணும் நிலை ஏற்பட்டுவிடலாம். ஆனால் சீனாவில் பேச்சுரிமை பரிபூரணமாக வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகள்மீது கண்காணிப்பாக இருக்கிறார்கள். அவர்களை திருப்பி அழைக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு.

எனவே சீன மக்கள் பிரதிநிதிகளுக்கு நாம் தெரிவு செய்யும் அங்கத்தவர்களிலும் பார்க்க கூடிய சுதந்திரம் உண்டு. அதே நேரத்தில் அங்கு அவர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கவேண்டும்.

இவற்றிலிருந்து சீனாவில், ஜனநாயகம் மக்கள் நலன் அடிப்படையில் பிரமிக்கத்தக்க அளவு உயர்ந்தோங்கியுள்ளது என்பது ஸ்பட்சம்.

மேற்காட்டியபடி சீனாவிலுள்ள வியாபித்த ஆட்சி அமைப்பில், அங்குள்ள சட்டப்பிரயோக அமைப்பு சர்வ பிரதிநிதித்துவமும், பொறுப்பும் வாய்ந்ததாகும். மற்ற நாடுகளிலுள்ளதுபோல அல்லாது வேறு விதத்தில் சீனாவின் சட்டப் பிரயோக அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் சட்டப்பிரயோகசபை நியமிக்கப்படுகிறதே அல்லாமல் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுவதில்லை. பிரதமரின் சிபார்சின் பேரில் மந்திரி சபை அங்கத்தவர்களை இராணியேதான் நியமிக்க முடியும். ஆனால் சீனாவிலே அக்கிராசனரோ அல்லது பிரதமரோ தமது விருப்பப்படி யாரையும் நியமிக்க முடியாது. ஒவ்வொரு நியமனமும் தேசிய மக்கள் காங்கிரஸின் ஆமோதிப்பை பெற்றுக்கவேண்டும். இதிலிருந்து தேசிய மக்கள் காங்கிரஸிற்கு பிரமாண்டமான அதிகாரம் இருக்கிறது என்பதும், அது விசேஷமாக அளிக்கும் அதிகாரங்களுக்குமேல் அக்கிராசனருக்கோ, பிரதமருக்கோ எதுவும் கிடையாதென்பதும் தெளிவு. அதனாலதான் தேசிய மக்கள் காங்கிரஸ் கூடாத காலத்தில் அதன் சார்பாக செயலாற்றுவதற்காக ஒரு நிரந்தரக்கமிட்டியை அதுதெரிவு செய்கிறது.

சீனாவில் சட்டப்பிரயோக அமைப்பு சீனமக்கள் குடியரசின் ஆட்சிச்சபை. இதுவே ஆட்சியின் ஆக உயர்ந்த ஸ்தாபனம்.

ஆட்சிச்சபை, பிரதமர், உப பிரதமர்கள், அமைச்சர்கள், கமிஷன் தலைவர்கள், பொதுச் செயலாளர் முதலியோரைக் கொண்டது.

பிரதமர் நியமனத்தை, சீன மக்கள் குடியரசின் அக்கிராசனர் சிபார்சின் பேரில் தேசிய மக்கள் காங்கிரஸ் நிர்ணயிக்கிறது. எனவே சீனாவில் பிரதமராவதற்கு இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று அக்கிராசனர் சிபார்சு செய்யவேண்டும். இரண்டாவது தேசிய மக்கள் காங்கிரஸ் ஆமோதிக்கவேண்டும்.

இலங்கையோடு இதை ஒப்பிட்டுப் பார்ப்போம். கவர்னர் ஜெனரல் பிரதமரை நியமிக்கிறார். மந்திரி சபையை அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறார். பிரதமர் நியமிக்கப்பட்டதும் தன்னை ஆதரிக்கும்படி அவர் பேரம் பேசக்கூடிய நிலைக்கு வந்துவிடுகிறார். இதை இரண்டு வழிகளில் செய்யலாம். முக்கியமானவர்களுக்கு பதவிகள் தருவது ஒன்று. இரண்டாவது பயங்கரமான வழி. தனக்கு ஆதரவு தராவிட்டால் புதித்தேர்தல் நடத்துமாறு கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறபோவதாக பயமுறுத்தலாம். இந்த பயமுறுத்தல் வேலை செய்கிறது—ஏனென்றால் கூடிய அங்கத்தவர்கள் புதிய தேர்தலை விரும்பமாட்டார்கள். இந்தவழிகளில்தான் 1947ல் காலஞ் சென்ற டி. எஸ். சேனநாயகாவால் மந்திரி சபை அமைக்க முடிந்தது. 101 ஸ்தானங்களில் ஆக 43 ஸ்தானங்களைக் கொண்ட சிறுபான்மைக் கட்சியாகவே யு. என். பி. அன்று இருந்தது. திரு சுந்தரலிங்கத்திற்கும் திரு சிற்றம்பலத்திற்கும் மந்திரிப் பதவிகள் கொடுத்தும், புதிய தேர்தல் பூச்சாண்டியை காட்டி அங்கத்தவர்களை பயமுறுத்தியுமே அன்று அவரால் மந்திரிசபை அமைக்க முடிந்தது.

இந்த நிலை சீனாவில் இல்லை. அக்கிராசனர் தானாகவே பிரதமரை நியமிக்க முடியாது. அக்கிராசனரின் சிபார்சு பெருவாரி அங்கத்தவர்களுக்குப் பிடிக்காவிட்டால் நிச்சயமாக அதை அவர்கள் எதிர்ப்பார்கள்.

பிரதமர் தெரிந்தெடுக்கப்பட்டபிறகு ஆட்சி சபையின் ஏனைய அங்கத்தவர்களும், பிரதமரின் சிபார்சின் பேரில் தேசிய மக்கள் காங்கிரசால் நியமிக்கப்படுகிறார்கள். இதுவும் இலங்கையிலுள்ளதற்கு மாறுபட்டது. இங்கு பிரதமர் தனக்கு வேண்டியவர்களை பதவிகளுக்கு நியமிக்கலாம். பாராளுமன்றம் இவர்கள் நியமனத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை. எனவே இவர்கள் எவ்வளவு தூரம் வெறுக்கப்பட்டாலும் தொடர்ந்து பதவியிலிருக்கலாம். இதனால்தான் திரு டி. எஸ். உடைய காலத்திலும், திரு டட்லியுடைய காலத்திலும் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு பதவிவகிக்க முடிந்தது. ஆனால் சீனாவில் பிரதமர் மட்டுமல்ல ஒவ்வொரு நியமனமும் தேசிய மக்கள் காங்கிரஸின் அமோதிப்பை பெற்றுகவேண்டும்.

சீனமக்கள் அரசாங்கத்தின் ஆக உயர்ந்த அங்கம் என்ற ரீதியில் ஆட்சிசபை பல கடமைகளையும், அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

ஆட்சிச் சபையே ஆட்சியை நிர்வகிக்கிறது. தீர்மானங்கள் எடுக்கிறது-உத்தரவுகள் பிரப்பிக்கிறது. அரசியல் சட்டத்தின்பிரகாரம் அவை செயலாற்றப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கிறது. மந்திரிகளின் கமிஷன்களின் வேலைகளை மட்டுமல்ல நாடு பூராவுமுள்ள அர

(13-ம் பக்கம் பார்க்க)

வியாசகு வித்தரணன் எழுதிய
நாகரிக நிர்மலா
அல்லது
மலைக்குறத்தி மகள்
சீக்கிரம் வெளிவந்துவிடும்
வாசிக்கத் தவறுதீர்கள்!

ஓய்வு நேரங்களை பயன்படுத்தி மாதம் ரூ. 100முதல் ரூ. 300 வரை சம்பாதியுங்கள். மூலதனம் வேண்டியதில்லை. இலவச விபரங்களுக்கு எழுதவும். கிர்ஸன் நிட்டிங் வேர்க்ஸ், லுடியானா-10 (இந்தியா)

நரம்புச் சக்தியும்
இருதய பலமும்
ரெனி

நரம்புப் பலவீனம், மூளை பலவீனம், மறதி, மயக்கம், தூக்கமின்மை, மூலச்சூடு, இரத்தக் கொதிப்பு, திரேக வறட்சி, ஊறல், தடிப்பு, உஷ்ணம், முதுகுவலி, இடுப்பு வலி, உடம்பு கை கால் வலி, அசதி, பசியின்மை, வயிற்றுநோவு, நெஞ்சு நோவு, இருதயத் துடிப்பு, நாட்பட்ட வாய்வு ரோகங்களைத் தீர்த்து திரேக சக்தியை அதிகப்படுத்தும்.

விலை ரூ 5-85 சிறியது ரூ. 3-25
வி.பி.பி. தபால்செலவுவேறு

ரெவ்ரோ பேரி
வைத்தியசாலை,
201செட்டியார்தெரு, கொழும்பு.

வேல் தைலம்

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சமய சஞ்சீவி. தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக் கட்டு, சூலுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.

உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது.

புட்டி 1-க்கு ரூ. 1-25 தபால் செலவு வேறு.

இலங்கை ஏஜண்டுகள்:
எ. ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐலவாயுக் குண்டின் பயங்கர நாசங்கள்

நகரங்களை மட்டுமல்ல மானிலம் அத்தனையையும் சர்வ நிர்மூலமாக்கும் பேராபத்து

போர் தடுக்கும் பெரும் பணியில் நடு நிலைமை நாடுகள் முன்வர வேண்டும்

அறிவும்-மகிழ்ச்சியும் நம்மிடை இருக்க இறப்பில் இன்பம் காண்பதா?

இவ்வமயம் யான் பேசும் பொழுது ஒரு பிரித்தானியனாகவோ, ஓர் ஐரோப்பியனாகவோ, மேற்கு நாட்டின் குடியாட்சியின் உறுப்பினனாகவோ பேசவில்லை. ஆனல் மானில மக்களின் ஒரு உறுப்பினராகவே பேசுகின்றேன்.

இன்றைய உலகம் ஒரு பெரும் போர்க்களமாகவே விளங்குகிறது. யூதரும், அராபியரும் ஒருபக்கத்தில் போர் புரிகின்றனர். மற்றோர் பக்கத்தில் இந்தியரும், பாகிஸ்தானியரும் நம்மிடையே மோதுகின்றனர். அத்துடன் வெளையாகும் ஆபிரிக்கத்திற மனிதருக்குமிடையில் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இவையனைத்திற்கும் மேலாக பொதுவுடமை இயக்கத்திற்கும் அதை எதிர்க்கும் கட்சிக்கும் தொடர்ந்து பெரும்போர் நடைபெறுகின்றது.

அரசியல் அறிவு வாய்ந்த அனைவரும் மேற்குறிக்கப்பட்ட இயக்கங்கள் ஏதாவது ஒன்றில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர்களாய் விளங்குகிறார்கள். மானிட மக்களை பெருந் தீங்குகள் சூழ்ந்திருக்கும் இச்சூழ் நிலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியாகப் பிரிந்திராது வரலாற்றுப் பெருமைவாய்ந்த மானிட இனத்தை அழியாது காக்க முயற்சிக்க வேண்டும் ஆதலால் நானும் எல்லோர்க்கும் உரிய பொதுக் கருத்துக்களையே இங்கு கூறுவேன்.

எல்லோரையும் ஒரே பெரும் அளவு தீமைகள் சூழ்ந்திருப்பதால் எந்தப் படைக்கருவிகளைத் தாங்கி நம் எதிரிகளைத் தாக்கலாம் என்பதை விடுத்து எந்த முறையில் எல்லோர்க்கும் அழிவைத் தரும் படை இயக்கங்களைத் தவிர்த்து அமைதியுடனும் அன்புடனும் வாழலாம் என்பதற்குரிய வழிகளை ஆராய்தல் வேண்டும்.

நீர்க்காற்று (சலவாயு) குண்டினுல் ஏற்படும் கொடுமைகளை இன்று பொதுமக்களோ, அரசியல் வாதிகளோ நன்கு உணரவில்லை. சலவாயுக் குண்டு அணுக்குண்டைப் பார்க்கிலும் தீமை விளைவிக்கும் வலிமை படைத்தது என்பதை நாம் நன்கு அறிதல்வேண்டும். ஒரு அணுக்குண்டினுல் ஹிரோசிமாத் தீவை (Hiroshima) அழிக்க முடிந்தது. ஆனல் ஒரு நீர்க்காற்றுக் குண்டோ பெரும் நகரங்களாகிய இலண்டன், நியோர்க், மாஸ்கோ முதலியவற்றை அழிக்கும் தன்மை வாய்ந்தது.

சலவாயுக் குண்டுப் போரினுல் பெரும் நகரங்கள் அழியக் கூடும். எனினும் சலவாயுக் குண்டினுல் ஏற்படும் பெரும் அழிவுகளை எண்ணும் பொழுது நகரங்கள் அழிவதையிட்டு அவ்வளவு ஏக்கம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இலண்டனில், நியூயோர்க்கில் மாஸ்கோவில் உள்ளமக்கள் அனைவரும் அழிந்தாலும் ஒரு சில நூற்றாண்டுகளில் உலகம் இத்தாக்குதலில் இருந்து மீட்சிபெற முடியும்.

ஆனல் அண்மையில் பிக்கினியில் (Bikini) நடந்த சலவாயுக் குண்டுப் பரீட்சையில் இருந்து நாம் முன்பு

பிரிட்டிஷ் தத்துவஞானி பேட்ரண்ட் ரஸல்

எதிர்பார்த்ததிலும் பார்க்க மிகப் பரந்த இடங்களையே தாக்கும் வலிமை பெற்றது என்று அறியக்கிடக்கிறது. சிறந்த அறிவியல் அறிஞர் (Eminent Sicentist) கிரோசிமாவை அழித்த அணுக்குண்டிலும் பார்க்க 25,000 மடங்கு சலவாயுக் குண்டு வலிமைவாய்ந்தது எனக் கூறுகிறார்கள். இத்தகைய குண்டு நிலத்திற்கு அருகிலோ அன்றேல் நீருக்குக் கீழேயோ வெடிக்குமாயின் ரேடியக் கிளர்ச்சி (Radio-Active) அணுக்கள் (Particles) மேலே உள்ள காற்றுடன் இரண்டரக் கலந்துவிடும். அவை பின்பு பயங்கரத் (Deadly) தூசுக்களாகவும் மழையாகவும் நிலத்தை நாடிவரும். இத்தூசுகளை ஜப்பானிய மீன்பிடிகாரரைத் தாக்கி வருத்தியது.

ரேடியக் கிளர்ச்சித் துண்டுகள் (Radio active particles) எவ்வளவு தூரம் பரந்து மக்களைப் பாதிக்கும் என்பதை முடிவாகக் கூற முடியாவிடினும் சலவாயுக் குண்டுகளைக் கொண்டு போர்நடைபெறுமாயின் உலகம் முற்றுக அழியும் எனக் கருதுவதற்கு இடம் உண்டு என அறிவியல் அறிஞர் ஒருமித்து கூறுகின்றனர். இக்குண்டின் தாக்குதலால் ஒரு சிலர் உடனே உயிர் நீப்பர் என்றும் ஆனல் பலரோ சொற்களுக்கடங்கா நோய்களால் நெடுங்காலம் வருந்திப்படிப்படியாக அழிந்தொழிவர் எனவும் அச்சமுற இடம் உண்டு. ஆகவே நொந்து அழியாது உடனே இறப்பவர் நற்பேறு பெற்றவர் என்றே கருத வேண்டும்.

இன்று போர் மூளுமாயின் உலகமே அழிந்தொழியும் என்று யான் மேலே கூறியதற்கு சான்றுக சில அறிஞரின் கூற்றுக்களை இதன் கண் பெய்து காட்டுகிறேன். வான் படைப் (Airforce) போரில் மற்றவர்கள் பெருத அனுபவங்களைப் பெற்ற சேர் யோன் சிலீசர் (Sir John Sleassor) என்பவர் ''இன்று உலகப் போர் ஏற்படுமாயின் மானில மக்கள் தங்களைத் தாமே கொல்வதாய் முடியும்' என்று கூறியுள்ளார். இந்நிலையில் எந்தப்போர்க்கருவிகளைத் தடைசெய்தல் வேண்டும் என்று கூறுவதால் வரும் பயன் யாதும் இல்லை என்றும் ஆனல் போருக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றும் தொடர்ந்து கூறுகிறார்.

உடலியற் துறையில் பெரும் பேர் பெற்ற ஆங்கிலப் பேராசிரியர் அட்ரயன் (Adrian) அவர்களும் மேற் கூறப்பட்ட அறிஞரின் கூற்றை ஒட்டிக் கூறியுள்ளார். அவர் அண்மையில் ஒரு பிரித்தானிய கூட்டத்தில் (British Association) பேசும்பொழுது தொடர்ச்சியாக அணுக்குண்டுகள் வெடிக்குமாயின் அவை மக்களின் நரம்புகளைத் தாக்குவதுடன் அவர்களின் உயிருக்கே உலைவைப்பதாய் முடியும் என்று கூறியுள்ளார்.

வாள் படைத்தலைவர் சேர் பிலிப் ஜோபர்ட (Philip Jourbort) அவர்களும் சலவாயுக் குண்டை கண்டுபிடித்த பின்பும் போர் செய்தல் வேண்டும் என்று சிந்திப்பது நம்மை நாமே அழிப்பதற்கு வழிகோலும் சிந்தனையாகும் என்று கூறியுள்ளார்.

இன்னும் இவ்விதம் மற்றும் அறிஞர்களின் கூற்றுக்களை கூறிக்கொண்டே போகலாம். ஆனல் விரியும் என அஞ்சிவிடுத்தாம்.

மற்றும் நிபுணரின் கூற்றுக்களை நான் ஆராய்ந்ததில் இருந்து அவர்களின் கூற்றுக்கள் வெறும் வெற்றுரையென்றோ, தன்னலக் கூற்றென்றோ கருதுவதற்கிடமில்லை. அவர்களின் கூற்றுக்கள் அனைத்தும் அவர்களின் ஆராய்ச்சியிலேயே தங்கியிருக்கிறது. இவற்றைப்பற்றி நன்கறிந்தவர்களே அதிகக் கவலைக்குள்ளாகுகிறார்கள்.

இன்றைய சூழ் நிலையில் நம்மிடை ஓர் பிரச்னை எழுகிறது. அதுதான் நாம் போரை நிறுத்தவேண்டுமா அன்றேல் போர்செய்து நாம் அனைவரும் மண்ணுக்கு இரையாக வேண்டுமா என்பதுதான். முன்னையதை விரும்பினுல் நம் ஒவ்வொரு நாட்டின் ஆட்சி உரிமையையும் (soverignity) ககப்பாய் இருந்தாலும் கட்டுப்படுத்தியே யாகவேண்டும்.

இன்னும் மக்கள் பலர் போர் ஏற்பட்டால் தம்மையும், தம் பிள்ளைகளையும், தம் பேரப்பிள்ளைகளையும் தாக்கும் என்பதை அவர்கள் உணர மறுக்கிறார். அதனுல் அவர்கள் போர் நடாத்தப்படலாம் ஆனல் தற்காலப் போர்க் கருவிகளை நிறுத்தவேண்டும் என்று கருதுகிறார்கள். இவர்களின் எண்ணம் எனக்கு வியப்பினை அளிக்கிறது.

அமைதியான (சமாதான) காலத்தில் ஐலவாயுக் குண்டைக் கையாளக்கூடாது என்று என்ன உடன்படிக்கைகள் ஏற்பட்டபோதிலும்

(9-ம் பக்கம் பார்க்க)

அறிமுகப்படுத்துகிறோம்

நாட்டியக் கலைஞர் கைலாசபிள்ளை

--''தியாகி''

நாற்பத்தைந்து வயதை எட்டிப் பிடிப்பவர். சுமார் ஆறு குழந்தைகளுக்கு அப்பா, இப்படிப்பட்ட ஒருவர் தோற்றத்திலும், உற்சாகத்திலும் இருபத்தைந்து வயது கூட நிரம்பாத ஒரு கட்டுமஸ்தான வாலிபனைப்போல் காட்சியளிக்கிறார் என்றால், அவர் என்ன காயகல்பம் சாப்பிட்டவரா என்ற சந்தேகம் யாருக்குத்தான் ஏற்படாது?

இந்த நபரைப்பார்த்ததும் ''உங்கள் இளமையின் இரகசியம் என்ன?'' என்றுதான் முதன் முதலில் எனக்குக் கேட்கத் தோன்றிற்று. கேட்டேன். கிடைத்த பதில்: ''நாட்டியம்'' என்பதுதான்,

''நடனம் ஒரு ஜீவகலை என்பதுமட்டுமல்ல, அது சிறந்த தேகாப்பியாசமுமாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்ற ஒரு தேகாப்பியாசம் என்றாலும் பெண்களுக்கு நடனம் அளிக்கக் கூடிய உடல் வலிக்கும் உளவலிக்கும் ஒப்புவமையே கிடையாது'' என்று அவர் மேலும் கூறினர்.

இலங்கையின் தலை சிறந்த நடன ஆசிரியராக விளங்கும் திரு கைலாசபிள்ளை 4-2-1911 ல் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பருத்தியடைப்பு என்னும் கிராமத்தில், மருதப்பு என்பாருக்கும் வள்ளியம்மையாருக்கும் மகனுகப் பிறந்தவர். சிறு வயதிலேயே நாடகத்திலும் நடனத்திலும் ஆசையேற்பட்டது. அப்போதே கிராமத்தில் நடைபெற்ற கோவலன் நாடகத்தில் மாதவி வேஷம் போட்டு நடிக்கவும் ஆடவும் ஆரம்பித்து விட்டார். கிராமங்களில் நடைபெறும் ஆட்டக் கூடத்தில் இவருக்கு ரஸனை அதிகம். மட்டக்களப்பு சென்ட் அகுஸ்தீனர் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையில், பள்ளிக்கூட ஆசிரியராகப் பயிற்றப்படுகையில், மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்களைத் தவறவிடாமல் கண்டு களிப்பார்.

கண்டி கிறைஸ்ட் சேர்ச் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமை பார்க்கையில் இவருடைய நடனப் பித்து எல்லைய மீறிவிட்டது. அதுவரை சினிமாவில் வரும் நடனக் காட்சிகளை அப்படியே 'கொப்பி' அடித்து மாணவர்களுக்குப் பழக்கி கதம்ப நிகழ்ச்சிகள் நடத்தி வந்த அவர் ஒரு நாள் கோபிநாத்-தங்கமணியின் நாட்டியத்தைப்பார்க்க நேர்ந்தது. உடனே ''இனி மேல் ஒருகணம் தரியேன், இந்தியா செல்வேன்'' என்ற நிலைக்கு வந்து விட்டார். அங்குசென்று நாட்டியத்தை முறையாகப் பயில வேண்டும் என்பது அவர் ஆசை.

''நான் இந்தியாவுக்கு செல்வதற்கு ஊக்கமும், உற்சாகமும், ஓரளவு பண உதவியும் செய்த உபகாரி திரு கே. வி. செல்லத்துரை அவர்களை ஒரு போதும் மறக்க முடியாது. இன்று நான் ஒரு கலைஞனுக தோற்றுவதற்கு அவர்தான் காரணர்'' என்று நன்றி விஸ்வாசத்தோடு சொல்லுகிறார் திரு கைலாசபிள்ளை.

சென்னை ராமச்சந்திர நட்டுவனரும், சிதம்பரம் இரத்தின சபாபதி நட்டுவனரும், குற்றுலம் நாட்டியக் கலைக் கொண்டல் எஸ். கணேசம் பிள்ளையும் இவருடைய நடன கலா ஆசிரியர்கள்.

இவர் கொழும்பு பாத்திமா பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின், இப்பொழுது பல வருடங்களாக கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் நடன ஆசிரியராகவும் கடமைபார்த்து வருகிறார். வெள்ளவத்தை இசைக்கலை மன்றம், நாரம்பிட்டி கலைக் கோட்டம், நீர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் ஆகியவற்றிலும் இவரே நடன ஆசிரியராக விளங்குகிறார்.

இவர் ஒரு நடனக் கலைஞராய் இருப்பதோடு புரட்சிக கருத்துக்களை வெளியிடும் ஒரு நல்ல கவிஞராகவும், சைத்திரீகராகவும் இருக்கிறார். இவர் எழுதிய ''நாட்டிய நன்னூல்' என்ற நடனக்கலை நூல் விரைவில் வெளிவரவிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் நாட்டியக் கலைக்கு தரும் ஆதரவு போதாதென்பதும், இலங்கை சமூகம் நாட்டியத்தை ஒரு கலையாக மதிப்பிடாமல், வெறும் பொழுது போக்கு சாதனமாக மட்டுமே மதிக்கிறது என்பதும் [illegible]

ஜிம்காணு கிளப் ஆதரவில் நடைபெறும்

C. L. T. A. 50 சத சுவீப்

முடிவு மார்ச் 20ம் திகதி

இம்மாதத்தில் சுவீப் டிக்கட் இல்லையே என்ற கவலையைப் போக்க ஜிம்காணு கிளப் ஆதரவில் C. L. T. A. சங்கத்தாரால் நடத்தப்படும் 50 சத சுவீப் டிக்கட்டுகளை வாங்கி உங்கள் அதிர்ஷ்டத்தை பரிசோதியுங்கள். டிக்கட்டுகளை தபாலில் பெற ஒரு டிக்கட்டுக்கு 50 சத வீதம் தேவையான தொகைக்கு போஸ்ட் ஆடரும் சாதாரண தபாலுக்கு 10 சத முத்திரையும், ரெஜிஸ்டர் தபாலில் பெற விரும்பினுல் 35 சத முத்திரையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

டிக்கட்டுகள் 17ம் திகதி முதல் 20 திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

100 டிக்கட்டுக்கு 47-50 வீதம் முன்பணம் அனுப்பினுல் ரெஜிஸ்டர் தபால் செலவு இனமாக டிக்கட்டுகள் அனுப்பிவைக்கப்படும்.

வியாபாரிகள் 17-ம் திகதி முதல் 20-ம் திகதி வரை இந்த டிக்கட்டுகளை விற்பனை செய்யலாம்.

அடர்களுக்கு:

தேவகி ஸ்டோர்ஸ்,

சுவீப்-டிக்கட் ஏஜண்ட்

154, செக்கடித் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினையின் பயன்

தொடர் நவினர்:

...காலை ஒன்பது ...யாகி விட்டது. இரவு ...முழுவதும் அலுப்ப...டந்த அம்மா இருந்த இ... கண்ணைக் கசக்கி ...ங்களுக்கு வேண்டிய கா... ...னவை வாங்குவதற் கா... ...ரசாமி கடைக்குச் ...விட்டார். எனக்குப் ப... ...ற உணர்ச்சியே இ... இரவு முழுவதும் காத... ...வைத்தியப் பேரா...யர் அம்மாவைத் தனது கையாலே தட்டி யெழுப்பி "இனி உங்களு டைய பிள்ளைக்கு எந்தவித மான ஆபத்தும் இல்லை. தப்பிவிட்டார்" என்றார்.

"ஐயா என்னுடைய வயிற் றிலே பாலைவார்த்துவிட்டீர். முதலாவதாக அந்தக் கதிர் காமக் கந்தனுடைய அருள். இரண்டாவதாக உங்களு டைய அருள்" என அம்மா அவரைக் கும்பிட்டுக்கொ ண்டு சொன்னார்.

"யார் எதைச் செய்தா லும் ஆனெறழுதியதை அழித்தெழுத முடியாது. 'நோயாளி விதியாளியானால் பரிகாரி பேராளி', என்பது பழமொழி. நீங்கள் இரு வரும் சரியான நேரத்தில் பேராசிரியர் நாதனைக்காணு விட்டால் இன்னும் ஒரு பத்து நிமிடங்கள் பிந்தினால் இப்பொழுது ஆளை உயிரு டன் காணமுடியாது" என் றார் வைத்தியப் பேராசிரி யர்.

அவர் இப்படிச் சொல்லு கையில் "நல்லமாமி கிட்ட வாருங்கள். எனக்கு வயிறு எரிகின்றது" என நாதன் தெளிவாகப் பேசினார். புய லில் அகப்பட்ட கப்பலோ ட்டி ஈற்றில் நிலத்தைக் கண்டபோது அடையும் மகிழ்ச்சி எங்கள் எல்லோர் உள்ளத்திலும் பிறந்தது.

"இப்பொழுது நான் எங்கே இருக்கின்றேன்?" என்றார் நாதன்.

"நீங்கள் பெரியவைத்திய சாலையில் இருக்கின்றீர்கள்" என வைத்தியப் பேராசிரி யர் கந்தையா மறுமொழி சொன்னார்.

"எதற்காக?"

"உடலிலே நஞ்சுகலந்து விட்டது"

"என்னுடைய உடலி லேயோ?"

"ஓம்"

"சரிதான். இப்பொழுது தான் நினைவு வந்தது. என் னுடைய கைபிழைபாட்டில் நானே நஞ்சை அருந்திவிட் டேன் போலும்" என்று நாதன் கூறும்போதில், என் னுடைய உளத்தில் களிபேரு வகை ஊற்றுகள் ஆயிரம் பெருக்கெடுத்தன.

இப்படி நாதன் சொல்லும் பொழுது ஒரு பொலீசுப்புலி அந்தப் பக்கம் தலைகாட்டி யது. காட்டியது மட்டுமல் லாமல் பேராசிரியர் கந்தை யாவைப் பார்த்து "நோயா ளிக்கு அறிவு வந்துவிட்டது. சட்ட வைத்தியரையும் நீத வானையும் அழைப்பமோ?" எனக் கேட்டது.

பொலீசுக்காரனைக் கண்ட நாதன் "இவர் எப்படி இங்கே வந்தார்?" எனப் பேராசிரியர் கந்தையாவைக் கேட்டார்.

"நஞ்சு உண்டமையால் வழக்கம்போல அவர்கள் தொழிலுக்கு உள்ள ஐயப் பாடு பொலீசுக்காரருக்கு இருக்குமல்லவோ?" எனப் பேராசிரியர் கந்தையா சொன்னார்.

"தம்பிக்கு வருத்தம் கடு மையென நாங்கள் பட்ட பாடு ஒருபக்கம். குறுக்குக் கேள்விகளைக் கேட்டு இந்தப் பொலீசு நாய்கள் படுத்திய பாடு ஒருபக்கம்" என அம்மா சொன்னார்.

"அவர்கள் தங்கள் கட மையைச் செய்தார்கள்" என வைத்தியப் பேராசிரி யர் கந்தையா அம்மாவிடம் கூறினார்.

"சரி நீதவானைக் கூப்பிடுங் கள். என்னுடைய வாய்ப் பிறப்பைப் பதியவேண்டும். தற்செயலாக நான் செத் தால் இவர்களை வீணுகச் சட் டம் தொல்லைப்படுத்தும்" என நாதன் சொல்லும் போது அவருடைய கண்கள் மூடின.

"தம்பி! அப்படிச் சொல் லாதே" என்று அம்மா விம் மினார்.

நீதவானை வரச்சொல்லிப் பேராசிரியர் கந்தையா ஆள் அனுப்பிவிட்டார். நீதவான் வரச் சுமார் அரைமணி நேரம் சென்றது. அதற்கி டையில் நாதன் கண்ணை யர்ந்துவிட்டார். நீதவான் வந்து மேலும் அரைமணி நேரம் காத்து நின்றார்.

"சுருக்கமாக வாய்ப்பிறப் பை எடுக்க வேண்டும்" என கந்தையா நீதவானுக்குச் சொன்னார்.

நாதனுடைய கண்கள் திறந்தன. சுற்றும் முற்றும் பார்த்தார். "நல்லமாமி என்னுடைய வயிற்றைத் தடவுங்கள் எரிகின்றது" என நாதன் அம்மாவைப் பார்த்துச் சொன்னார். அம்மா தடவினார்.

"நீதவான் வந்து நிற்கின் றார். சுருக்கமாக இரண்டு வரியில் சொல்லுங்கள்" எனக் கந்தையா நாதனுக் குச் சொன்னார்.

"நான் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும பொ ழுது தற்செயலாக நஞ்சு எங்கோ என்னுடைய தேநீர் பேணியில் விழுந்துவிட்டது. கைபிழைபாடு. அவ்வளவும் தான். ஐயப்பாட்டிற்கு இட மில்லை" என நாதன் சுருக்க மாகச் சொன்னார். நீதவான் அவ்வளவையும் எழுதிக் கொண்டார்.

"தாருங்கள் கையெழுத் துப் போடுகின்றேன்" என நாதன் சொல்லி வழ மைபோலக் கையெழுத்துப் போடடார். நீதவான் சென்றுவிட்டார். பொலீசுப் புலி வாலைக் காலிற்குள்ளே மடித்து வைத்துக்கொண்டு ஓடியது.

"கந்தையா என்னால் வைத்தியசாலையில் இருக்க முடியாது. வீட்டிற்கு அனுப் புங்கள்" என நாதன் கந்தை யாவைப் பார்த்து மன்றாடி னார். கந்தையா எங்களைப் பார்த்தார். "வீட்டிற்குக் கொண்டுபோகலாம். மருந் துகளை அங்கு வைத்துக் கொடுக்கலாம். ஆனால் நீங் கள் தனிமையாக இருக்கக் கூடாது" என வைத்தியர் கந்தையா கேட்டார்.

"நாங்கள் பார்ப்போம்" என்று அம்மா, நான், குமார சாமி, ஆறுமுகம் எல்லோ ரும் ஒரே நேரத்தில் மறு மொழி சொன்னோம்.

"மருந்துகளைக் கொடுப் பதற்கு ஒரு தாதியை அனுப் புகின்றேன். மற்றவைகளை நீங்கள்கவனிக்கலாம். வைத் தியசாலையில் இருப்பதென் றால் நாதனுக்குச் சற்றே னும் பிடிக்காது" எனக் கந் தையா சொன்னார்.

சரியாகப் பகல் பன்னி ரண்டு மணிக்கு நாதன் வீட் டிற்கு எடுத்துச் செல்லப் பட்டார். அம்மாவினுடைய மகிழ்ச்சியைச் சொல்ல முடி யாது. ஆறுமுகம் கூத்தாடித் திரிந்தான். குமாரசாமி நிலத்திலே கால்படாமல் நடந்தார். நாதனுடைய படுக்கையருகில் இருப்பதற் காக குமாரசாமியும் எங்களு டன் தங்கிவிட்டார்.

நாதன் மருந்தை நேரத் திற்கு நேரம் குடித்தார். கந்தையா வந்து வந்து ஊசி ஏற்றினார். பழச்சாறுகளை நாதனுக்கு நாங்கள் பருக் கினோம். இரவு வந்தது எல் லோரையும் நித்திரை ஆட் கொண்டது ஆறுமுகம்மாத் திரம் இரவுமுழுவதும் இமை யாடிமை வெட்டாமல் இருந்தானும். அலுப்பினு லும், உளப் போராட்டத்தி னுலும் சோர்வடைந்த நான் மரக்கட்டைபோல் துயின் றெழுந்தேன்.

இரவிலும் பழைய கன வையே திரும்பவும் கண் டேன்.

"நீ கொலைகாரிதானே?" என்றது அந்த ஆவி.

"ஓம்"

"நீ கொலை செய்யவில் லையே!"

"செயலாற்செய்யவில்லை. உளத்தாற் செய்தேன். அது தான் வேற்றுமை."

"தற்செயலாக நடந்தது என்று ஏன் சொன்னேன் தெரியுமோ?" என அந்த ஆவி கேட்டது.

"எனக்குத் தெரியாது"

"உனக்குத் தெரியாதோ? நல்லாக எண்ணிப்பார்; தெரியவரும்."

"எனக்குத் தெரியாது."

"தெரியாத உனக்கு நான் என்ன சொல்வது" எனக் கூறி அந்த ஆவி மறைந்தது. அதனைக் கலைத்துப் பிடித்து மறுமொழியைக் கேட்க முயற்சித்தேன். நான் ஓடு வதிலும் பார்க்க இரண்டு மடங்கு கெதியாக அந்த ஆவி ஓடியது. கல்லுகளிலும் முள்ளுகளிலும், புதரிலும் புற்றிலும் ஓடியதினுல் என் னுடைய காலில் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அத னைக் கண்டு அந்த ஆவி நகைத்தது.

நான் நித்திரை விட்டு எழுந்ததும் நாதனுடைய அறைக்குப போனேன். அவர் உறங்கிக்கொண்டிருந் தார். கெட்ட கனவைக் கண்ட படியால் அவருடைய மூக் கிற்கு கிட்ட விரலைப் பிடித் தேன். மூச்சு வழக்கம்போல் வந்தது.

வாயிலில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தேன். கண்ட முகம் போல எனக்கு தெரிந்தது. ஆனால் அந்த மனிதன் என் னைப் பார்த்து 'வணக்கம்' என்றான்.

"வணக்கம்" என்றேன்.

"என்னைத் தெரியவில்லை யோ?"

"இல்லையே"

"நல்லாகப் பாருங்கள். நான்தான் பொலீசு அதி காரி வெற்றி வேலாயுதம். அன்று நடந்தவைகளுக்கு மன்னிக்கவேண்டும்."

"அதனால் ஒன்றுமில்லை" என நான் சொன்னேன்.

"பேராசிரியர் நாதனைப் பார்க்கலாமோ?"

"அவர் நித்திரையில் இருக் கின்றார். இப்பொழுது காண முடியாது" எனக் கட் டளையிடும் குரலிலே நான் சொன்னேன்.

"பின்னர் வருகின்றேன்" சட்டத்தின் பெயரால் வந் தீர்களோ? அல்லது தனிப் பட்ட முறையில் வந்தீர் களோ?" எனக் கேட்டு நையாண்டியாக நான் நகைத்தேன்.

"இரண்டும்தான்."

"ஆனால் இப்பொழுது காண முடியாது."

என்னைக் கொலைகாரி என மாலைசூட்ட முயன்ற அந்தக் கிழப் பொலிசுப் புலி ஓடி விட்டது. என்னிடம் பட்ட அவமானத்தை மறைப்பதற் காக அந்தப் புலி தன்னு டைய மீசையைக் கடித்துச் சப்பியது.

பொலீசுப் புலியுடன் வெட்டி வெட்டி நான் பேசி யது சரிதான்; ஆனால் என் னுடைய உள்ளத்தில் மீண் டும் அச்சம் குடிகொண்டது. அன்றிரவு வழக்கைப் பொருத்துவதற்கு இருந்த சான்றுகளையெல்லாம் இந் தப் பொலிசுக்காரன் நாத னிடம் சொன்னால் அவர் என்னைப்பற்றி என்ன எண் ணுவார்? அவன் சொல்வதை நம்புவாரோ அன்றி நான் சொல்லுவதைநம்புவாரோ? அவன் சொல்லுவதை நம்ப மாட்டார். ஏனெனில் தற் செயலாக நடந்தது என்று ஏற்கனவே நீதவானுக்குச் சொல்லிவிட்டார். ஆனால் நீதவானுக்கு நாதன் வாய்ப் பிறப்புச் சொல்லும்போது பொலீசாருடைய சான்று கள் ஒன்றும் அவருக்குத் தெரியாது. இப்பொழுது இந்த மடையன் வந்து எல் லாவற்றையும் சொன்னால் நாதன் தன்னுடைய எண் ணத்தை மாற்றிக்கொண் டால் என்ன செய்யலாம்? இந்தத் திகில் என்னை உள் ளூர வாட்டியது. ஒன்றும் செய்ய முடியாத நிலைக்கு வந்துவிட்டேன். விதி எப் படியோ அப்படியே எல் லாம் நடக்கும். கடவுளில் பழியைப் போட்டுவிட்டிருக் கலாம் என எண்ணினேன். கடவுளில் எப்படிப்பழியைப் போடலாம். பெறுதற்கரிய மக்கட்பிறப்பை அவர் எனக் குத் தந்தார். பகுத்தறிவை யும் தந்தார். அந்தப் பகுத் தறிவை இழந்து உண்ட வீட் டுக்கு இரண்டகம் செய்யும் முறையிலே நாதனைக் கொல்ல முயற்சித்தேன். அதன் பயன்தான் இது. இத னைக் கட்டாயமாக அநுப வித்தே தீரவேண்டும். நடப் பது நடக்கட்டும் என எண் ணினேன். வினை விதைத்த வன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப் பான்.

சாமிநாத ஐயர் நூற்றாண்டு விழா

டாக்டர் சாமிநாத ஐயர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த தின விழா நீர்வேலி ஸ்ரீ சுப்ரமணிய சன சமூக நிலையத்தில் சமீபத்தில் நடைபெற்றது. திரு சு. இராஜேந்திரக் குருக்கள் தலைமை வகித்தார்.

திரு வே. சி. அப்புத்துரை பேசும்போது, ஐயர் அவர் களின் ஞாபகார்த்தமாக சென்னை அடையாறில் இருப் பது போன்ற ஓர் நூல் நிலை யம் யாழ்ப்பாணத்தில் அவ சியம் ஸ்தாபிக்க வேண்டு மென்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் எந்த இடத்திற்குப் போனாலும் சில மூலைக் கடைகளில் வெளவால் போல் தொங்கும் மாதப் பத்திரிகை, வாரப் பத்திரிகைகளைப் பார்த்தால் முழுக்க முழுக்க இந்தியப் பத்திரிகைகளாக இருக்கக் காணலாம்.

—எம். ஆர். எஸ்.

இப்போது இந்த வெளவால் கூட்டத்தில் இலங்கைப் பத்திரிகைகளும் சேர்ந்து கொண்டுள்ளன. அண்மையில் நாலு, ஐந்து இதழ்கள் இலங்கையில் தோன்றியதை அறிந்து 'சந்தேகி' மிக மகிழ்ச்சியடைகிறான். அதோடு அச்சமும் அடைகிறான். அச்சந்தான் இன்று மிஞ்சியுள்ளது. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. கொழும்புத் தெருக்களில் போய்க்கொண்டிருந்தேன். ''சத்தாயாய், சத்தாயாய்'' (10 சதம்) என்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். திகைத்துவிட்டேன். பல திங்களாகத் திட்டமிட்டு, இலட்சக்கணக்கில் மூலதனமிட்டு, ஆயிரக்கணக்காக விளம்பரத்திற்குச் செலவழித்து, ஆரம்பித்த ஒரு ஆங்கில மாத இதழ் ஒரு ஆண்டு முடியமுன்னரே காளாஞ்சிகிவிட்டதைக் கண்டால் யார்தான் திகைப்படையமாட்டார்! ஒரு ரூபா விலையிட்ட இதழ் ஒன்று பத்து சதம் ரூபாவிற்குப் 12 என்று விலைப்பட்டால் எவர்தான் ஆச்சரியமடையமாட்டார். புத்தம் புதிய இதழ்கள், நல்ல தாளில் அழகாக அச்சிட்ட பத்திரிகைக்கு இக்கதியா? காரணத்தை ஆராய்ந்த போதுதான் ஆச்சரியம் சிறிது அடங்கியது. அதிலே புதுமை எதுவும் இல்லை. மேல்நாட்டு இதழ் ஒன்றை அப்படியே 'காப்பி' அடித்துப் போலியாக வெளிவருவதுதான் காரணம் என்று எண்ணினேன்.

எமது புதிய இதழ்களும் மழை காலத்தில் தோன்றி மடியும் புழுக்களாகவோ, பூண்டுகளாகவோ மாறிவிடுமோ என்ற அச்சம், அவ்விதழின் கதியைப் பார்த்த போது எனக்கு ஏற்பட்டதை எண்ணி நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். இலங்கையில் வியாபாரம் செய்வதற்காக மட்டும் என்று பல இதழ்கள் தமிழ் நாட்டில் அச்சடிக்கப்படுகின்றன. எமது இதழ்கள் புதிய அம்சங்களைப் பெருக்கி, புது வழி வகுத்து மேற்படி இதழ்களை ஒதுக்கி முன்னேற வேண்டும் என்பதே 'சந்தேகி'யின் அவா.

மதுபானமும், குதிரைப் பந்தயமும் ஒழிக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் யு. என். பி. கட்சி மகாநாட்டில் நிறைவேறியது!

—செய்தி

ஆளுங் கட்சியின் தீர்மானங்கள் சட்டமாகிவிடுவது வழமை. ஆகவே இதுவும் விரைவில் நிறைவேற்றப்படும் எனச் 'சந்தேகி' சந்தேகத்தோடு எதிர்பார்க்கிறான். இதுவும் குடித்துவிட்டு உளறிய உளறல்கள் பட்டியலில் சேர்ந்துவிடப்படாது. எமது அரசியல் தலைவர்கள் எல்லோரும் குடியர்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. கொழும்பிலே குடிக்கத் தெரியாதவன் அநாகரிகப் பேர்வழி என்பது முடிவு. இனிமேலாவது குடிவெறிப் பேச்சுகள் குறையலாம். நமது பிரதமர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழிகளெல்லாம் குடிவெறிப் பேச்சுகள். இலண்டனிலே தேயிலைக் குவளையில் புயல் கிளப்பிய பேச்சுக்களெல்லாம் மதுமயக்கப் பேச்சுக்கள். இச்சட்டம் அமுலாகிவிட்டால் பெரிய இடங்கள் பாடு திண்டாட்டந்தான். அவர்கள்தான் முதலில் மீறுவார்கள். பின்னர் அவர்கட்காக இச்சட்டத்தை நீக்கவேண்டி நேரிடலாம். கைலஞ்சச் சட்டமெல்லாம் இப்போது அமந்திருப்பதற்குக் காரணம் இதுதானே.

பாராளுமன்றப் பிரதிநிதிகளிடையே சில சில சொற்கள் வழங்குவது வழக்கம். ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் பட்டப் பெயர் வைத்திருக்கிறார்களாம். (வெள்ளையர் ஒருவர் இருந்து வெளியேறிய) ஒரு மாளிகைக்கு 'மூன்று பி.' (Three B.) என்பது பட்டப் பெயராம். மதுபானமும் குதிரைப் பந்தயமும் ஒழிக்கப்பட்டால் 'ஒரு பி' (One B) மாளிகை என்று பாராளுமன்றப் பிரதிநிதிகள் பெயரை மாற்றிவிடலாமாம். இந்த B மந்திரம் தெரியாதவர்கள் உங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

பிரான்சிலேகூட மதுஒழிப்பிற்கு மெண்டஸ் பிரான்ஸ் பிரச்சாரம்செய்தார். மாணவர்கள் மதுவருந்தப் பழகுகிறார்கள் என்பதைத் தடைசெய்வதற்காகப் பாடசாலைகளில் பால் பருகிப் பழகஆவன செய்தார். தாமும் சென்ற இடமெல்லாம் பால் பருகினார். வெள்ளை மாளிகையில் விருந்து நடந்த போதுகூட இவருக்குப் பாலே கொடுத்தனர். எமது ஆட்சியாளர்கள் இப்படிச் செய்வார்களா? தாட்டுப் புறங்களிலே பால் பருக்கி வளர்க்கவேண்டிய குழந்தைகளுக்குக் கள் பருக்கி வளர்க்கிறார்கள். எம் நாட்டுக் குழந்தைகளெல்லாம் போதிய உணவுச் சத்தின்றி வளர்கிறார்கள் என்று எமது அரசாங்க அறிக்கையே கூறுகிறது. மதுப்பண்ணை வைத்து நடத்தும் ஆட்சியாளர் பால் பண்ணைகளை ஏற்படுத்திப் பாலைப் பெருக்கப்படாதா?

இச்சட்டம் நிறுவ நேரும்போது மது இறக்கும் தொழிலாளர்களையும் ஆட்சி பீடம் மறந்துவிடப்படாது. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். மது தயாரிக்கும் தொழிற்சாலைகளைச் சர்க்கரை, வெல்லம் உற்பத்தியாக்கும் தொழிற் சாலைகளாக மாற்றவேண்டும்.

குதிரைப் பந்தய ஒழிப்பிற்கு கறுவாக்காட்டுப் பெண்கள் எதிர்ப்புக் கிளப்பலாமாம். பாவம்! அவர்கள் தமது அழகுகளையெல்லாம் பந்தயம் பேசும் இடம் இல்லாமல் போக நேரிடுமோ என்று அஞ்சுகிறார்களாம்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக உயர்ந்த வாழ்க்கைத் தரம் இலங்கையில்தான் விளங்குகிறதென்பதை யாராவது மறுக்க முடியுமா?

—யு. என். பி. மகாநாட்டில் சாவகச்சேரிப் பிரதிநிதி

சாவகச்சேரியிலே என்னுடைய வீடுதான் பெரிய வீடு என்பதை யாராவது மறுக்க முடியுமா? என்று பூநகரி மக்களைக் கேட்பதுபோலிருக்கிறது அவரின் கேள்வி. கடலில் வாழ்ந்த ஆமை ஒன்று சாவகச்சேரி கிணற்றுக்குள் வீழ்ந்ததாம். கிணற்றுக்குள் விருந்த தவளை 'எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்டதாம். கடலிலிருந்து என்று பதில் கூறியதாம் ஆமை. கடல் என்றால் இவ்வளவு இருக்குமா என்று அளந்து காட்டியதாம் தவளை.

சென்ற ஆகஸ்டு குடிசன மதிப்புப் கணக்கெடுப்புப் பகுதியாரின் அறிக்கையின் ஒரு பிரதி அவருக்குக் கிடைத்திருக்கலாம். அவர் படித்திருக்க மாட்டார். ஆண்டு ஒன்றிற்கு 64 சதம் வருமானம் உள்ள லட்சக்கணக்கான மக்கள் இலங்கையில் வாழ்கிறார்கள். பல லட்சம் வருமானம் உள்ள சில நூறுபேர் வாழ்கிறார்கள். ஏன் இந்த நிலை?

இன்று மக்கள் உலகத்தைப் பற்றிப் பேசுகிறார். இலங்கையின் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிடுவதானால் உலக நாடுகளோடு ஒப்பிடவேண்டும். கடைசியாக எடுத்த கணக்கின்படி ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் 500 ரூபா. மேல் நாடுகளிலே இஃது பல ஆயிரக்கணக்கான ரூபாய்களாக உள்ளது. மாற்றிக் கட்டுவதற்குச் சேலையில்லாத பல ஆயிரக்கணக்கான பெண்களை அவர் பகுதியிலேயே பார்க்கலாம். மண் குடிசைகளிலே வாழ்ந்து வாழ்வு பூராவும் வயலிலே வியர்வை சிந்தி வயிற்றோடு போராடிக் கொண்டிருக்கும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை எடுத்துக்கொண்டு உவமை பேசுவதைவிட்டு, கறுவாக்காட்டு மாளிகைகளிலே உல்லாச வாழ்வு வாழும் ஒரு சில நூறு குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தைப் பார்த்து உவமை பேசினால் அப்படித்தான் பேச முடியும். பாவம்! அவர் என்ன செய்வார்? ''சந்தேகி''

ஏகத்துவக் கொள்கையை நிலை நாட்டவே திக்கு நோக்கி வணக்கம்

'ஹஜ்ருல் அஸ்வத்'தை முஸ்லிம்கள் முத்தமிடுவது விக்கிரக வணக்கமாகாது

[அல்-ஹாஜ் வி. எம். சம்சுதீன்]

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உலக ஏகத்துவ ஆலயமான இந்த ஆலயத்தைப்பற்றி எனது மதிப்பிற்குரிய ஷெய்குல் இஸ்லாம் மௌலானா ஸையித் அபுல் அஃலா மௌதூதி பின்வருமாறு எழுதியுள்ளார்:-

''நபி இப்ரூஹீம் (ஆப்ரஹாம்) இறைவனை வணங்குவதற்காக மக்காவில் (இது பைபிளில் 'பக்கா' என்று வருகிறது). சிறிய வணக்கஸ்தலத்தைக் கட்டினார். அவருடைய தெய்வ பக்தியையும் மனப் பரிசுத்தத்தையும் கண்ட இறைவன் அவரைப் பாராட்டி அந்த ஸ்தலத்தை அவருடைய வீடாகச் செய்து கொள்ளும்படி கட்டளையிட்டான். மேலும் அவனைத் தொழ விருப்பங் கொண்டவர்கள் இந்த வீட்டை நோக்கித் தொழவேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் -அவன் உலகத்தில் எந்தப் பாகத்தில் இருப்பினும் சரியே—இயல்புள்ளவனாகஇருப்பின் குறைந்த பட்சம் ஆயுளில் ஒருமுறையாவது மக்கத்துக்குச் சென்று நபி இப்ரூஹிம் அவர்களால் புதுப்பிக்கப்பட்ட இப்பரிசுத்தப் பள்ளியை தரிசித்து வலஞ்சுற்றவேண்டும். இங்கு வருகிற எவனும் மனப் பரிசுத்தமுள்ளவனாகவும் மனே இச்சைகளைக் களைந்தெறிந்தவனாகவும், காம இச்சையை விட்டவனாகவும், இறைவனிடம் எல்லோரும் சமமே என்ற மனோதத்துவமுள்ளவனாகவும் இருக்கவேண்டும்''

நான் தலைப்பில் குறிப்பிட்ட குர்ஆன் கருத்துக்களும் இறை ஒத்துக்கொண்டபடி நபி இப்ராஹீம் (ஆப்ரஹாம்) அவர்களைப் பின்பற்றி இஸ்ரவேலர்களின் சந்ததியிலுதித்த எல்லாத் தீர்க்கத்தரிசிகளும் அதாவது இயேசுபெருமான் மோசே, தாவீது போன்ற எல்லாத் தீர்க்கத்தரிசிகளும் மக்கத்திலுள்ள இப்பரிசுத்தப் பள்ளியைத் தரிசித்து வலஞ்சுற்றி ஆப்ரஹாமைப் போல் பரிசுத்தவான்களாக விளங்கினார்கள் என்பது இஸ்லாத்தின் நம்பிக்கை.

''இஸ்லாம்'' என்பது நபி இப்ராஹீம் அவர்கள் மார்க்கந்தான் என்பது குர்ஆனின் போதனையாகும். ''நபி இப்ராஹீம் அவர்களைவிடச் சிறந்த சன்மார்க்கன் யார்? நபி இப்ராஹீம் அவர்கள்தான் முதலில் ஏகதெய்வ வணக்கத்தை உலகில் பிரசாரம் செய்ய முன்வந்தவர். அவர் விக்கிரஹ வணக்கத்தை வெறுத்ததையும், அவரின் பிதா விக்கிரஹங்களைச் செய்து விற்றுச் சீவித்ததையும் அவர் வெறுத்தவர். ''நான் இறைவன்பால் சிரியாவைவிட்டுச் செல்கின்றேன்'' என்று கூறியதாகப் பைபிள் கூறுகிறது. நபி இப்ராஹீம் (ஆப்ரஹாம்) ஏகத்துவ வணக்கத்தைக் கூறியதற்காக அக்கால மக்களால் தீயில் தள்ளப்பட்டார். அவர் தீயினின்றும் வெளிப்பட்டுவிட்டார். தீ குளிர்ந்து விட்டது என்று குர்ஆன் கூறுகிறது. இதைப்பற்றி சிறந்த மேதாவியான மௌலானா ரூமீ தன்னுடைய ''மஸ்னவி ஷரீப்'' என்ற ஞானக்கடலில் ''மனிதனே! இப்ராஹீமை ஏன் தீச்சூடவில்லை என்பதை நீ சிந்திக்க வேண்டாமா? அவர் இறைவன்மீது கொண்ட நம்பிக்கையால் அவரது இரேகத்தின் குளிர் தீயைக் குளிரச் செய்துவிட்டது'' என்று எழுதியுள்ளார்..

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குமுன் தோன்றிய தீர்க்கத்தரிசிகளைப் பின்பற்றி பரிசுத்தப் பள்ளியாகிய பைத்துல்லாவை வலஞ்சுற்றினார்கள். தங்களுடைய ஞானபிதாவாகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி மக்கத்துக்கு ஹஜ் யாத்திரை செய்யும் முஸ்லிம்களும் பைத்துல்லாவை வலஞ்சுற்றி புனித ஏகத்துவ வணக்கத்தைப் புதுப்பிக்கின்றார்கள்.

அந்தப் பரிசுத்தப் பள்ளியில் பதிக்கப்பட்டிருக்கும் ''ஹஜ்ருல் அஸ்வத்'' என்னும் கறுப்புக்கல்லை ஏன் முஸ்லிம்கள் முத்தமிடவேண்டும். இதும் ஒரு விக்கிரஹ வணக்கமாயிற்றே? என்று முஸ்லிமல்லாதார் கேட்கின்றனர். ஏன்? ஆரிய சமாஜிகளும் தங்கள் நூல்களில் இதைப் பற்றி எழுதியுள்ளார்கள்.

''இந்தக் கறுப்புக்கல் கடவுள் பூசைக்குரியதல்ல'' இதைப் பற்றி பைபிளில் மத்தேயு எழுதிய சுவிசேஷம் 21: 42ல் இயேசுபெருமான் கூறியதாக ''தேவனது ராஜ்யத்துக்குரிய மூலைக்கல் தலைக்கல்லாய் விளங்கலாயிற்று: இன்னும் வீடுகட்டுகிறவர்கள் தள்ளிய கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று''

இதிலிருந்து முஸ்லிம்கள் நம்புவதுபோல் இக்கல்லும் முதல் மனிதராகிய ஆதம் நபி காலத்திலிருந்து இருந்திருக்க வேண்டும். இக்கல் ஏகத்துவ வணக்கத்தைக் குறிப்பதாகயிருக்கலாம். எப்படியிருப்பினும் அக்

(10-ம் பக்கம் பார்க்க)

சங்கப் பலகை

''தமிழகம்''

ஆசிரியர்: செ. இராசதுரை, விலை: (?) வெளியிடுவோர்: (?) கிடைக்குமிடம்: தமிழ்ப்பண்ணை, மட்டக்களப்பு.

'தங்கத் திருவிடம், தரணியின் முதலிடம் வீரத்தின் விளை நிலம், வித்தையின் பிறப்பிட'மாகிய தமிழகத்தின் தீரத்தைப் பரப்பும் நோக்கோடு 'தமிழகம்' என்ற இதழ் சிறந்த எழுத்தாளர் செ. இராசதுரையை ஆசிரியராகக்கொண்டு வெளிவருகிறது. தெள்ளுத் தமிழில், மோனைதுணைத் தமிழில் இவ்விதழ் வெளியாகிறது. ஒரே நடையில் எழுதப்பட்ட கவிதையின் பிறப்பிடத்தைப்பற்றிய கட்டுரையும், அந்தப் பொங்கல் என்று வருமோ? என்ற கட்டுரையும் மிகவும் சிறந்து விளங்குகின்றன. இலக்கியச் சோலையில் ஐங்குறுநூறுப் பாடலின் விளக்கமும், 'பச்சைக் கதவு' என்ற 'ஒ கென்றி'யின் சிறுகதை மொழிபெயர்ப்பும் மட்டக்களப்பு அரசியலும், சுத்தானந்த பாரதியாரின் பாடல் ஒன்றும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. நல்ல தாளில் தெளிவான அச்சில் பிழைகள் இன்றி 8 பக்கங்களைக் கொண்ட இவ்விதழ் வெளிவந்துள்ளமை போற்றத்தக்கது.

''ஆனந்தன்''

ஆசிரியர்கள்: வரதர், புதுமைலோலன் விலை: 10 சதம். ஆண்டுக் கட்டணம்: ரூ. 5. கிடைக்குமிடம் ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

புத்தக உருவத்தில் மாத இதழாக வெளிவந்த இவ்விதழ் இன்று 'மறுமலர்ச்சி' ஆசிரியர் இருவரைக் கொண்டு வார இதழாக வெளிவருகிறது. முதல் இதழிலேயே இலங்கையின் பிரபல அரசியல் தலைவர் திருவாளர்கள் அ. வயித்திலிங்கம், புகழ்பெற்ற எழுத்தாளர் சோ. சிவபாதசுந்தரம் ஆகியோர் எழுதியுள்ளனர். 'யாழ்ப்பாணம் செல்வேன்' என்ற மஹாகவியின் பாடல் சுவைத்துச் சுவைத்து நயக்கத்தக்கது. 'மருதமரத்து முனி' என்ற டானியலின் சிறு கதையும், டி. கே. சண்முகத்தின் பேட்டியும் மற்றிரு சிறந்த அம்சங்களாகும்.

—கிரன்

வரப்பெற்றோம்

''கிராமோதயம்''

ஆசிரியர்கள்: அ. பாலகிருஷ்ணன், ச. ஜெகந்நாதன். விலை: ஒரு அணா.

''போர் முரசு''

ஆசிரியர்: பிரா கோவி. ஜெயசிங்கம். விலை: 10 சதம் கிடைக்குமிடம்: 12 சென் அந்தோனி வீதி, மட்டக்களப்பு.

''அண்ணா''

ஆசிரியர்கள்: கே. எஸ். எம். கலாநேசன், என். கதிரவன் விலை: 10 சதம் கிடைக்குமிடம்: 22 டயஸ் [illegible] கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

SWATANTHIRAN

1955 மார்ச் மாதம் 13ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

ஆந்திரா தரும் பாடம்

ஆந்திராவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொம்யூனிஸ்ட்டுகள் படுதோல்வி அடைந்துவிட்டார்கள். ஆந்திரா இந்தியாவில் கொம்யூனிஸ்ட்டுகளின் கோட்டை என்று நம்பப்பட்டது. அப்படிப்பட்ட அரங்கிலே கொம்யூனிஸ்ட்டுகள் மண் கவ்வியதைக் கண்டு அகில உலகமே ஆச்சரியம் அடைந்திருக்கிறது. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள பத்திரிகைகள் கூட இந்த மனோபாவத்தைப் பிரதிபலித்திருக்கின்றன. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

கொம்யூனிஸ்டுகள் தோல்வியடைந்ததற்கு கூறப்படும் காரணங்கள் என்ன?

1. கொம்யூனிஸம் பசியும் பட்டினியும் உள்ள வயிற்றில்தான் பிறந்து வளரக்கூடியது. மழை பொழிந்து நாடு செழிப்புற்று பஞ்சமும், இலஞ்சமும், கட்டுப்பாடுகளும் நீங்கிவிட்டதால் கொம்யூனிஸ்டுகள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

2, காந்தீய தத்துவம் மக்களிடையே நிலைத்துவிட்டது. மதுவிலக்கை மக்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறார்கள். மதுவிலக்கு கொள்கையை கொம்யூனிஸ்டுகள் எதிர்த்ததால் படுதோல்வியடைந்தார்கள்.

3. ஆவடியில் கோலாகலமாக நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடு அயலிலுள்ள ஆந்திரப் பொதுமக்களிடையே காங்கிரஸின் செல்வாக்கையும் பலத்தையும் பிரமாதமாகக் காட்டிவிட்டது. அதனால் கொம்யூனிஸ்டுகள் செல்வாக்கு இழந்துவிட்டார்கள்.

4. கொம்யூனிஸ தத்துவத்தைவிட ஆவடியில் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டுள்ள சோஸலிஸ திட்டத்தைப் பொதுமக்கள் வரவேற்கிறார்கள். அதனால் கொம்யூனிஸ்டுகள் புறமுதுகிட வேண்டியேற்பட்டது.

கொம்யூனிஸ்டுகளின் தோல்விக்கும் காங்கிரஸின் அபரிமிதமான வெற்றிக்கும் மேற்கண்ட நான்கு காரணங்களிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் இவற்றை எல்லாம்விட இன்னுமொரு முக்கிய காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்தை இது வரை யாரும் எடுத்துச் சொல்லவில்லை; எந்தப் பத்திரிகையும் எழுதவில்லை.

அதாவது இந்தப் பொதுத் தேர்தலுக்கு முந்திய பொதுத் தேர்தல் நடைபெற்றபோது அந்திரா மாகாணம் தனி மாகாணமாகப் பிரியவில்லை. ஆந்திரா மொழிவாரி அடிப்படையில் தனி மாகாணமாகப் பிரிய வேண்டும் என்ற ஆசையும், கிளர்ச்சியும் ஆந்திரப் பொதுமக்களிடையே அப்போது நன்றாக வேரூன்றியிருந்தது. இந்த நியாயப்பூர்வமான கோரிக்கையை ஆட்சிக் கட்சியான காங்கிரஸ் சட்சி மறுத்து வந்ததன் காரணமாக அந்திர மக்களிடையே மனக்கசப்பு வளர்ந்திருந்தது. எனவே அந்தப் பொதுத் தேர்தலில் அந்திர மக்கள் காங்கிரஸை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை. எதிர்க் கட்சிகளின் பால் அனுதாபம் காட்டினார்கள். இதனால் கொம்யூனிஸ்டுகள் போதியள் தானங்களைக் கைப்பற்ற முடிந்தது.

ஆந்திரப் பிரிவினையை காங்கிரஸ் ஒப்புக்கொண்டு மாகாணமும் தனியாகப் பிரிக்கப்பட்ட பின், ஆந்திர மக்களிடையே காங்கிரஸின் மதிப்பு வளரலாயிற்று. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்த மகத்தான வெற்றியின் இரகசியம் இதுதான்.

ஆந்திராவின் போக்கிலிருந்து இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களும், இலங்கை அரசாங்கமும் அரிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைய சிங்கள அரசாங்கத்தின்கீழ் தங்கள் உரிமைகள் பறிபோகின்றன என்பதை இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்கள் யாவரும் நன்கு உணருகிறார்கள். ஆனால் அதைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்பதை அறியாதவர்கள்போலத் தவிக்கின்றார்கள். அதைத் தடுத்துநிறுத்தி, தங்கள் கோரிக்கைகளைப் பெறுவதற்கு ஏற்ற மார்க்கம், சில ஒத்துழைப்புத் தலைவர்கள் செய்யும் சுயநல உபதேசத்தின்படி, அரசாங்கத்தை ஆதரித்து நிற்பதல்ல. ஆந்திரப் பொதுமக்கள் கடந்த பொதுத் தேர்தலில் செய்து காட்டியதுபோல், அரசாங்கத்தை எதிர்த்து எதிர்க் கட்சிகளுக்கு தங்கள் வாக்குரிமைகளை அளிக்க வேண்டும். தமிழ்ப் பேசும் பொதுமக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கவில்லையென்ற நிலைமை வெளிப்பட்டால், அவர்களுடைய உரிமைகளை வழங்க அரசாங்கம் ஒருபோதும் பின்நிற்காது. தங்களுக்கென ஒரு தமிழ் ராஜ்யம் வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் நிராகரிக்க முடியாது. இது தமிழ்ப் பேசும் மக்கள் அறிய வேண்டிய பாடம்.

இனி, சிங்கள அரசாங்கம் அறிய வேண்டிய பாடம் தமிழ்ப் பேசும் மக்கள் தங்களுக்கு சுயநிர்ணய உரிமை, மொழிவாரி மாகாண ஆட்சி கோருகிறார்கள் என்றால் அதைக் கொடுத்துவிட வேண்டும் என்பது. கொம்யூனிஸம் போன்ற பயங்கர அரசியல் இயக்கங்கள் இந்த நாட்டில் தலையெடுக்கவிடக்கூடாது என்று இன்றைய அரசாங்கம் விரும்புகிறது. இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமானால் தமிழ் மக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் அவர்களுடைய மனதில் கசப்பு வளர்ந்து அவர்களுடைய ஆதரவு, ஆந்திராவில் ஏற்சனவே நடைபெற்றதுபோல், கம்யூனிஸ்டு இயல் இயக்கங்களின் பக்கம் திரும்பிவிடுவதற்கு இடமுண்டு.

நாட்டின் பொருளாதாரத்தையே நாசமாக்கிவிட்டார் சேர் ஜோன்

தானறியச் சொற்சிலம்பினால் தேயிலை வியாபாரம் சிதறடிக்கப்பட்டது

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

இலங்கையின் இன்றைய பொருளாதாரம் தேயிலையின்மேல் கட்டப்பட்ட ஒரு கண்ணாடி மாளிகை என்று சொல்வது மிகப் பொருத்தமாகும். இத்தகைய ஒரு நொய்தான பொருளாதாரத்தை ஒன்றரை நூற்றாண்டுக் காலம் இங்கு அரசியல் அதிபதிகளாய் விளங்கிய வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்திவிட்டுச் சென்று விட்டார்கள். வர்த்தகர்களாய் இந்த நாட்டிற்குவந்து படிப்படியாக ஆதிக்கத்தை நிலைநாட்டிய வெள்ளைக்காரர், நாட்டிற்கு ஜீவநாடியானவிவசாயத்தையோ, மற்றும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தொழில் வகைகளையோ அபிவிருத்தி செய்யவில்லை. வெளிநாடுகளில் தாங்கள் வியாபாரம் செய்து பொருளீட்டக்கூடிய பொருள் என்ன என்பதிலேயே நோட்டம் செலுத்தி, தேயிலையை ஏற்றதாகக் கொண்டார்கள்.

இதன் காரணமாக தமிழ் மன்னர்கள், சிங்கள மன்னர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் அவர்கள் மேற்கொண்ட குளங்கள், வயல்கள், என்ற விவசாய அபிவிருத்தி வேலைகள் யாவற்றையும் புறக்கணித்துவிட்டு இலங்கையைத் தேயிலைக் காடாக்கினார்கள். புராண, இதிகாச, சரித்திரப் பெருமைபெற்று சுயதேவையைப் பூர்த்திசெய்யும் ஒரு தனி நாடாக விளங்கிய இலங்கையை, உலகப் படத்திலே லிப்டன்ஸின் தேயிலைத் தோட்டமாக வர்ணம் பூசி வைத்தார்கள்.

எதிர்காலத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சமாந்தரைப் பிரதேசங்களை விருத்தி செய்து ஆங்குள்ள குளங்களையும் கால்வாய்களையும் புனர் நிர்மாணம் செய்யும்வரை, இலங்கை, வெள்ளைக்காரர் விட்டுச் சென்ற இந்தக் கண்ணாடி மாளிகைப் பொருளாதாரத்தையே கட்டிக்காத்து வாழவேண்டியிருக்கிறது.

அபரிமிதமான வருவாயைத் தரக்கூடிய இந்த தேயிலைத் தொழில் இங்கு பெருமளவில் செய்யப்பட்ட போதிலும், உற்பத்தியாகும் தேயிலையின் பெரும்பகுதிய வெளி நாட்டிலேயே விற்பனவு செய்கிறோம். அரிசி, கோதுமை, தானியம் போன்ற ஒரு உணவுப்பொருளல்ல தேயிலை. அது நமக்கு ஒருசாதாரணகுடிபானம். ஆனால் இங்கிலாந்துபோன்ற குளிர் பிரதேசங்களில் தேயிலை அவசியமானஒரு உணவு. தேயிலையவெளிநாடுகளில்விற்காவிட்டாலும், உள்நாட்டு மக்கள் சாப்பிட்டு நிம்மதியாய் இருக்கலாம் என்று சொல்ல முடியாது. மேலும் உற்பத்தியாகும் தேயிலை உள்நாட்டின் தேவைக்கு அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் வெளிநாட்டாரின் தயவில்தான் இலங்கையின் தேயிலை வியாபாரமும், இலங்கையின் பொருளாதாரமும் தங்கியிருக்கிறது. எனவே நமது தேயிலையை விரும்பி வாங்கும் வெளிநாடுகளுடன் நாம் நமது வியாபார நல்லுறவை மிகவும் அவதானத்தோடு பாதுகாக்கவேண்டியது அவசியம்.

கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் கல்லெறியக் கூடாதென்பது பழமொழி. அதற்கொப்ப கண்ணாடி மாளிகை போன்ற ஒரு பொருளாதாரத்தையுடைய நாம் உலகை மொழிகளை என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்கற்களாலான நமது கண்ணாடி மாளிகைக்கே ஆபத்தைத் தேடிக்கொள்ளலாகாது.

நம்மிடம் தேயிலை கொள்வனவு செய்யும் தேசங்களில் இங்கிலாந்து ஒரு பெரும் தேசமாக விளங்குகிறது. அங்குள்ள வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து நம்முடைய தேயிலையை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் அந்தக் காரியத்தைத் தருமத்திற்காகச் செய்யவில்லை. இங்கிலாந்திலுள்ள குடும்பப் பெண்களுக்கு எப்படியாவது தேனீர்ப் பானம் வழங்கிவிட வேண்டும் என்ற ஆர்வத்தாலோ, அன்றி இலங்கையின் பொருளாதாரம் சீரழிந்து போகவிடக் கூடாது என்ற அனுதாபத்தாலோ அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. ஏதோ முதல் போட்டு வியாபாரம் செய்கிறோம் நல்ல ஆதாயம் கிடைக்க வேண்டும் என்ற ஆசையினால்தான் அப்படிச் செய்கிறார்கள்.

இலங்கைத் தேயிலை இல்லையென்றால் அவர்கள் வேறிடத்து தேயிலைகளைத் தருவித்து விற்பார்கள். அதுவுமில்லையென்றால் தேயிலை என்ற பேச்சையே விட்டுவிட்டு வேறு ஏதாவது காப்பி போன்ற பானப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள். அதற்கு வேண்டிய அறிவும், பணப் பலமும், அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்குண்டு. அதுமட்டுமல்ல, வேண்டும்போது கட்டுப்பாடாக எந்தப் பொருளையும் நிராகரித்துவிட்டு வாழ்க்கை நடத்தக்கூடிய ஒழுங்கு கைவரப்பெற்ற பிரிட்டிஷ் மக்களின் அனுதாபமும் அவர்களுக்குண்டு. யுத்த காலத்தில் கறுப்புச் சந்தைக்கு பணம் கொடுக்காமல் வாரத்திற்கு ஒரு முட்டையும் ஒரு அவுன்ஸ் வெண்ணெயும் பங்கீடாக வாங்கிக் கொண்டு வாழ்க்கை நடத்திய குபேரர்களைக்கொண்ட நாடு இங்கிலாந்து.

இப்படிப்பட்ட ஒரு இடத்திற்குச் சென்று முன்பின் யோசனையின்றி தேயிலை விலையைப்பற்றி முட்டாள்தனமாக உளறிவைத்தார் நமது மதிப்புக்குரிய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை. யானை தன் கையாலே தன் தலைமேலே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது போன்ற இந்த உளறலினால் இன்று பயங்கரமான பொருளாதாரத் தாக்கம் இலங்கைக்கு ஏற்பட்டுவிட்டது.

இலங்கையில் தேயிலையின் உற்பத்தி விலை என்ன, அதற்கு தமது அரசாங்கம் விதிக்கும் சுங்கசுங்கையான ஏற்றுமதி வரி என்ன, கப்பல் சத்தமென்ன, இங்கிலாந்தில் விதிக்கப்படும் தீர்வைகள் என்ன, வர்த்தகர்கள் அடையும் ஆதாயம் என்ன என்பனவற்றையெல்லாம் தீர்க்கமாக ஆராய்ந்து அறியாமல், வெள்ளைக்கார வீட்டுப் பெண்களும், நாரீமணிகளும் தேனீர்ப் பானம் அருந்த முடியாமல் தேயிலையின் விலை உயர்வினால் தவிக்கிறார்கள் என்று கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார் நமது கொத்தலாவலை மாத்தயா.

பணத்தில் புரளும் இங்கிலாந்திலுள்ள வெள்ளைப் பெண்களுக்காக பச்சாத்தாபப்படும் நமது பிரதமரின் அரசாங்கம் இலங்கையிலுள்ள பிக்சைக்காரப் பெண்மணிகளுக்கு செய்வதென்ன? வயிற்றை நிரப்ப ஒரு கவளம் சோறு கிடைக்காத காரணத்தினால் இங்குள்ள ஏழைகள் தேனீரை வார்த்தாவது வயிற்றுக் கொதியைத் தீர்க்க ஆசைப்படுகிறார்கள். ஐந்து சதத்திற்கு தேயிலை வாங்கினால் அவர்கள் அறுபது சதம் கொடுத்து சீனி வாங்க வேண்டியிருக்கிறது. இந்த சீனி இலங்கை அரசாங்கத்தின் ஏகபோக இறக்குமதி உரிமைக்குட்பட்டது. வேறு எந்த தனி வியாபாரியும் சீனியை இறக்குமதி செய்ய முடியாது. சுமார் 35 சதத்திற்கு இறக்குமதி செய்யும் ஒரு ரூத்தல் சீனியை இலங்கை அரசாங்கம் 60 சதத்திற்கு ஏழை எளியவருக்கு விற்று பகல் கொள்ளையடிக்கிறது. இந்த நிலையில் குழந்தைக்குக் கொடுக்கும் பாலுக்குக்கூட சீனி போட முடியாமல் தவிக்கும் இங்குள்ள ஏழைக் குடும்பப் பெண்களின் கவலை சேர் ஜோனுக்குத் தெரியவில்லை; இங்கிலாந்திலுள்ள குடும்பப் பெண்களுக்காக இவர் கவலைப்படுகிறார்!

கடந்த சில வாரங்களாக உச்ச நிலையிலிருந்த தேயிலை விலை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகிறது. ஒரு மாதத்திற்குள் சரிபாதி விலைக்கு மேல் இறங்கிவிட்டது. இதற்கு காரணஸ்தர் சேர் ஜோன் கொத்தலாவலை தான். தேயிலை விலை இப்படி வீழ்ச்சியடைந்துகொண்டே போனால் இலங்கையின் பொருளாதாரம் எத்தகைய அனர்த்தத்திற்குள்ளாகுமோ தெரியாது.

சில வாரங்களுக்குமுன் தேயிலை விலை அதிகரித்துக் கொண்டு போவதைக் கண்டதும் தேயிலை உற்பத்தியாளர்கள் பலர் அதிக விலை கொடுத்து தேயிலைக் கொழுந்துகளை பெருமளவில் வாங்கி பாடம் பண்ணினார்கள். அப்படிப் பதப்படுத்திய தேயிலை இப்போதுதான் ஏற்றுமதிக்கு ஏற்றதாயிற்று. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் தேயிலை விலை வீழ்ச்சியடைய ஆரம்பித்து விட்டது. இதனால் ஒவ்வொரு நாள் ஏலத்திலும் உற்பத்தியாளர்கள் 40 ஆயிரம் 50 ஆயிரம் என்று நஷ்டமடைந்து வருகிறார்கள். இப்படி அவர்களை நஷ்டவாளிகளாக்கியது பொன்முட்டையிடும் வாத்தை ஒரே தினத்தில் வெட்டிக் கொன்றது போன்றதாகும். பெருநஷ்டம் இப்படித் தொடர்ந்து ஏற்பட்டால் தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யவும், உயர்தர தேயிலையை உற்பத்தி செய்யவும் அவர்களுக்கு உற்சாகந்தானிருக்குமா? இருந்தாலும் பணவசதிதான் கிடைக்குமா?

நாவைக் காவாத காரணத்தினால் நாட்டின் பொருளாதாரத்தையே நாசமாக்கிவிட்டார் நமது பிரதமர். தானறியாச் சொற்சிலம்பினால் தேயிலை வியாபாரத்தைச் சிதறடித்துவிட்டார். தேயிலைத் தொழிலுக்குத் தீமூட்டிவிட்டார். இப்படி பிறிதொரு நாட்டின் பிரதமர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டால் மக்கள் அவரைச் சும்மாவிட்டிருக்கமாட்டார்கள். கொதித்தெழும்பி அரசாங்கத்தை அதிர்ச்சியடையச் செய்திருப்பார்கள். மானமுள்ள மந்திரியாய் இருந்தால் அவரும் ராஜினாமாச் செய்திருப்பார்.

ஆனால் இலங்கையில்.....?

ஈழத்திலுள்ள தமிழரெல்லாரும் ஒன்றுபட வேண்டும்

இனத்தால் ஒன்றுபட்ட தமிழினம் மானத்தோடு வாழ வழி வகுப்போம்

யாழ்ப்பாணப் பகுதியில் மலைநாட்டுத் தமிழர் தலைவர்களின் முழக்கம்

'இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எல்லாம் அவர்கள் நாட்டின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் தமிழர்களே. இனத்தால்-மொழியால், கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட தமிழினம் ஐக்கியமாக வேண்டும். அப்பொழுதான் இந்த நாட்டிலே தமிழ்ப் பெருமக்களின் கலை-கலாச்சாரத்தை வளர்ப்பது மட்டுமல்ல பொதுவான நலவுரிமைகளையும் பாதுகாத்து நிற்க முடியும். அதனால்தான் மலைநாட்டுத் தமிழ் மக்களும், யாழ்ப்பாணத்து தமிழ் மக்களும் ஒன்றுபட்டு ஓரின மக்களாக வாழவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்'' என்று சமீபத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து பல பொதுக்கூட்டங்களில் பேசிய இலங்கை ஜனநாயக காங்கிரஸின் தலைவர் திரு எஸ். தொண்டமான் நீர்வேலி பரமேஸ்வரி சன சமூக நிலைய அத்திவாரக் கல்நாட்டு வைபவத்தில் பேசியபோது கூறினர்.

''தாழ்த்தப்பட்டவர்கள் சகிப்புத்தன்மையுடனிருந்து அவர்களை அடக்கி ஆளுவோரிடம் அன்பு செலுத்தி அவர்களது இதயத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்பதுதான் நான் அவர்களுக்குச் சொல்லக்கூடிய புத்திமதியாகும்.''

மேல்ஜாதி வகுப்பினர் சாதிப் பாகுபாட்டு வழக்கத்துக்கு மிகப் பழையகாலம் முதலே அடிமைப்பட்டிருந்ததால் அதிலிருந்து விடுபடுவது அவர்களுக்குக் கஷ்டமாகத் தோன்றுவதாயும், ஆனால் தாழ்த்தப்பட்டோர் தாங்கள் எதிர்த்து முன்னேறுவதுமூலம் சாதி வழக்கத்தைப்பற்றிய நினைவை மக்களிடமிருந்து அகற்றிவிடலாமென்று எண்ணக் கூடாதென்றும் திரு தொண்டமான் கூறினர்.

கூட்டத்துக்கு முதலியார் அருணசலம் தலைமைவகித்தார். திரு தொண்டமான் மேலும் பேசியதாவது:—

சாதி வேற்றுமையைக் கண்டித்துப் பலர் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அதை அனுஷ்டிக்கத் தயங்குகிறார்கள். இப்படியான பிரசாரத்தையும் அனுஷ்டானத்தையும் மேற்கொள்வோர் துரதிர்ஷ்டவசமாக அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள். இந்தியாவில் சாதி வேற்றுமை பாராட்டுவதற்கு சட்டத் தடை போடப்பட்டிருக்கிறது. சாதி வேற்றுமைப் பூச்சாண்டிபற்றி மக்களுக்கு மெஞ்ஞானம் ஏற்படவேண்டும்'' என்றார்.

திரு கே. ஜி. எஸ். நாயர் பேசுகையில் சர் பொன்னம்பலம் ராமநாதன்போன்ற பெரியவர்களைத் தோற்றுவித்துப் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தில் சாதி வேற்றுமை நிலவுவது வருந்தத்தக்கதென்று குறிப்பிட்டார். சாதிப் பிரிவினையை ஒழித்துவிட்டாலே யாழ்ப்பாணத்துக்குப் பெருமை என்றார்.

திரு கே. ராஜலிங்கம் பேசுகையில் உலகில் எல்லா நாடுகளும் எல்லா மக்களுக்கும் சமத்துவமளித்து முன்னேறிக்கொண்டு போகையில் யாழ்ப்பாணம் இன்னமும் பன்னிரண்டரை லட்சம் ஹரிஜனங்களுக்கு சமூகத்தில் அவர்களுக்குரிய உரிமையை மறுப்பது அவமானம் தரும் விஷயம் என்றார்.

ஆலய மசோதாமீது பேசுகையில் இரண்டாவது பார்லிமெண்ட் முடிவடையும் காலம் சமீபித்துவிட்ட போதிலும் ஆலய பிரவேசம் அமுலாவதற்கான [illegible] இன்னும் தென்படவில்லை என்றார்.

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் எதற்கும் அஞ்சாது அதன் உரிமைப் போராட்டங்களை அகிம்சா வழியில் நடத்தி வரவே செய்யும் என்றார்.

யாழ்ப்பாண நகர மண்டபத்தில்

யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமான் பேசினர்.

ஆரம்பத்தில் திரு தொண்டமானும், அவரது கோஷ்டியினரும் நாவலர் பாடசாலை சந்தியிலிருந்து மேளவாத்தியங்கள், வாணவேடிக்கைகள் சகிதம் நகரமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர்வலம் காங்கேசன்துறை ரஸ்தா, ஆஸ்பத்திரி ரஸ்தா, மணிக்கூடு ரஸ்தா, பிரண்ட் வீதி வழியாகச் சென்றது. வழிநெடுகிலும் திரு தொண்டமானுக்கும், கோஷ்டியினருக்கும் மாலைகள் விழுந்த வண்ணமிருந்தன. ஊர்வலம் நகரமண்டபம் போய்ச் சேர்ந்ததும் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. டாக்டர் எம். ஓ. சாக்கோ கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் இதுவரை பிரஜாவுரிமை சம்பந்தமாக பாரபட்சம் காண்பிக்கப்பட்டிருப்பவர்களுக்காக மட்டுமே போராடிவந்திருக்கிறதென்றும், அது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கடந்த பதினைந்து வருடகாலத்திலும் அதன் முழு பலத்தையும் பிரயோகித்து சேவை செய்துவந்திருக்கிறதென்றும், இன்று அது ஒரு சக்திவாய்ந்த ஸ்தாபனமாகத் திகழ்கிறதென்றும் திரு தொண்டமான் கூறினர்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:'இலங்கை ஜனநாயக காங்கிரஸ் அதன் வேலைகளை இத்துடன் நிறுத்திக்கொள்ளப்போவதில்லை. நாட்டின் இதர மக்களுக்கும் சேவை செய்வதற்கான அடுத்த கட்டத்தில் அது இப்போழுதான் பிரவேசித்துக்கொண்டிருக்கிறது நாட்டின் செல்வத்தை விருத்தி செய்வதற்கும், நீதியும் நேர்மையும் நிலவுவதற்கும் மக்களின் கட்சியொன்றை அமைத்து அதை மக்களின் ஆதரவி[illegible]

இன்று இலங்கையில் ஒரு லட்சத்துக்குமேற்பட்ட அங்கத்தினர்களின் ஆதரவில் இயங்கிவரும் ஒரேயொரு கட்சி இலங்கை ஜனநாயக கட்சிதான். காங்கிரஸின் அங்கத்தினர்களே இந்த நாட்டுச் செல்வத்தின் உண்மையான உற்பத்தியாளர்களென்றும், தேசிய வருமானத்தில் 75 சதவீதமானவை அவர்களையே சார்ந்ததென்றும் காங்கிரஸ் உரிமை பாராட்டமுடியும். அரசாங்கம் அவசரப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கு பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளாததே காரணமாகும். ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வித சாதி, குலபேதமுமின்றி காங்கிரஸில் சேரவேண்டும். இவ்வாறு செய்வதால் ஒரு பலம் பொருந்திய பொது



திரு. எஸ். தொண்டமான்

ஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்தமுடியும்.'

திரு. தொண்டமான் மேலும் பேசுகையில் பிரஜாவுரிமைசட்டமும், இந்தியா-இலங்கை ஒப்பந்தமும் எந்த முறையில் நிர்வகிக்கப்படவேண்டுமோ அந்த முறையில் நிர்வகிக்கப்படவில்லையென்று கூறினர்.

தமிழரசுக் கட்சித் தலைவர் பேச்சு

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், கோப்பாய் எம். பியுமான திரு. சி. வன்னியசிங்கம் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

'டில்லி ஒப்பந்தம் கையெழுத்தான போதிலும் பிரஜாவுரிமை மனுக்கள் அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படுகின்றன. தொழில் நுட்பக் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டமனுக்களை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக அளித்த வாக்குறுதியை அரசாங்கம் இன்னும்நிறைவேற்றவில்லை. பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்படுவோர் நாடற்றவர்களாகிவிடுகின்றனர். இவ்வாறு நாடற்றவர்களாவோர் தங்களை இந்தியர்களெனப் பதிவுசெய்து கொள்வது முட்டாள்தனம். ஏனெனில் அவ்வாறு பதிவு செய்து கொண்ட அடுத்த நிமிடத்திலேயே அவர்களுக்கு வேலியேற்ற நோட்டீஸ் பிறப்பிக்கப்படும் என்று கூறினர்.

ஜலவாயுக் குண்டின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போர்க் காலத்தில் இவ்வுடன்படிக்கைகள் எல்லாம் புறத்தே தள்ளப்பட்டு ஒவ்வொரு நாடும் இக்குண்டுகளையே உற்பத்தி செய்ய முனையும். ஏனெனில் ஒரு நாடு நீர்க்காற்றுக் குண்டுகளை உற்பத்திசெய்து கொண்டிருக்கும்பொழுது மற்ற நாடும் இத்துறையில் முனைந்து நிற்காவிடில் உற்பத்தி செய்யும் இந்நாட்டிற்கு இரையாக நேரிடும்.

இரும்புத்திரைக்கு இரு புறத்திலும் அரசியற் தடைகள் பல இருப்பதால் வரப்போகும்போரினால் ஏற்படும் கேடுகளை வற்புறுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடும் எக்காரணம்கொண்டும் போர் செய்யமாட்டோம் என்று கூறினாலும் ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளை அஞ்சியே வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடும் தற்பாதுகாப்பிற்காக மற்றைய நாடு தன்னைத் தாக்க முயற்சிக்கிறது என்று அடிக்கடி கூறவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒவ்வொரு நாடும் விட்டுக் கொடுக்கும் உளப்பாங்கை விரும்பக்கூடும் எனினும் ஏற்கத்தக்க முறையில் கூற அஞ்சுகின்றன.

இத்தகையநிலை முற்காலப் போர்முறையுடன் பெரிதும் ஒத்திருக்கிறது. முற்காலத்தில் போர்புரிந்தவர்கள் சாவுக்கஞ்சி தமக்கு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்த விரும்பினர்கள். எனினும் தாம் விட்டுக் கொடுக்க முயன்றால் தம்மைக் கோழைகளென்று மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்று கருதி அவ்விதம் செய்ய விரும்பவில்லை. அத்தகைய சூழ்நிலையில் அவ்விருசாராரின் நண்பர்களே ஒருவித ஒற்றுமையை ஏற்படுத்தினர்கள். இத்தன்மையையே இன்று எங்கும் காண்கின்றோம்.

போரை நிறுத்தும் ஒரு உடன்படிக்கை இன்று ஏற்படுத்துவதாயின் அது நடுநிலைமை நாடுகளின் நல்முயற்சிகளாலேயே நிறைவேற்ற முடியும். அவைகள்தான் போரினால் ஏற்படும் கொடுமைகளை தெளிதுஎடுத்துரைத்து மக்களை நல்வழியிற் செலுத்த முடியும். சுருங்கிய நோக்குக்கொண்டாகுதல் நடுநிலைமை நாடுகள் போரை நிறுத்தி மக்களைக் காக்க முடியுமென்றால் அதைத் தயங்காது செய்தல் வேண்டும்.

(12-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவற்றை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கு முன்னமேயே எந்தக் கோரிக்கையும் வளங்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறதென்றும் சமீபத்தில் ஒரு செய்தி வெளியானது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

நாட்டிலே பொதுமக்களினதும், விசேஷமாக மத்தியதர வர்க்கத்தினதும் வாழ்க்கைத்தரம் வரவர படுமோசமாகிக் கொண்டிருப்பதாகவும், பொருளாதார நெருக்கடியின் பழுவை மக்கள் தலையில் திணிப்பதை எதிர்த்து சகல பகுதி மக்களுடனும் சேர்ந்து அரசாங்க ஊழியர்களும் போராடலாம் என்றும் அரசாங்கம் பயப்படுவதாகத் தெரிகிறது.

பிரதினமும் வியாதியால் வருந்துவோர்களே!

43வருட அனுபவம்வாய்ந்த நான்குதலைமுறை பரம்பரை வைத்தியர், ஆயுர்வேத டாக்டர் A. S. டேனியல் அவர்களை நேரில் காணுங்கள்



(தந்தவியாதிக்கு பாவிக்கப்பட்டு புகழ்பெற்றுள்ளது)

1. வச்சிர தந்த கல்நார் பல்பொடி விலை சதம் 75.

(எந்தவிதமான பல்வலியையும் ஒரு வேளையில் சுகம் கொடுப்பது)

2. பல் வலி சொட்டு மருந்து விலை சதம் 75.

பாலர்களுக்கு வரும் மாந்தம், கரப்பநீர், பிரவிகனம், தெற்கத்திகளை, வலிப்பு, செவ்வாப்பு, காய்ச்சல் இவைகளை சுகப்படுத்தி பாலர்களை போஷிக்கச் சிறந்த குளிகை இவை.

மகா கோரோசனை குளிகை (100) ரூ. 4-00
குளிகை (50) ரூ. 2-00
குளிகை (25) ரூ. 1-00

உங்கள் சரீர சுகத்தை பாழ்படுத்தும் எந்தவிதமான நாள்பட்ட வியாதிகளிருந்தாலும், பல மருந்துகள் பாவித்தும், ஊசிகள் போட்டும் சுகமின்றி வருந்துவீர்களானால், நேரில் வியாதி தெரிந்து தக்க மருந்துகள் பெற்று சுகமடைய இன்றே எம்மை நேரில் கண்டு பரீட்சித்து தகுந்த மருந்துகளை உத்தரவாதத்துடன் பெறுங்கள்.

விபரங்களுக்கு:-

மலையாள மெடிக்கல் ஹால்,
179, செட்டியார் தெரு, கொழும்பு-11.

S. R. A. மெடிக்கல் ஹால் மருந்துகள் மலையாள மெடிக்கல் ஹாலில் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 12



பிரவேசக் கட்டணம்சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50

மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ. 1-00 செலுத்தினுல் இந்த மூன்றுவது விடையை இனமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சீ.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00

முதலாவது பரிசு ரூ. 600-00

இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 16-3-55 பி. ப. 5 மணி

சரியான விடை 20-3-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 27-3-55 ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 2-4-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. கிறிஸ்தோதயம்—தைப் பொங்கல் விழாக்களை முன்னிட்டு நடைபெற்ற சுதந்திரன் விசேஷ குறுக்கெழுத்துப் போட்டிகள் இரண்டிலும் சேர்ந்தாற்போல் இரண்டாவது பரிசு பெற்ற ஒருவருக்கு இது விசேஷ பரிசாக வழங்கப்படுகிறது.
3. சோவியத் நாட்டில் இது இல்லாதவர்களே கிடையாதாம்
5. காம்பு
6. வைத்தியர்களின் ஏடு
7. அறிவின்மை
9. அந்தக்காலத்தில் தமிழ் மொழி இந்த நாடுவரை பரவியிருந்ததாக சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்
10. எந்த நல்ல காரியத்திற்கும் இதுபுரியும் சிலரும் இருக்கிறார்கள்.
12. வல்லவனுடைய இது மணலிலும் ஆடுமாம்
13. இது என்றால் குழந்தைகளுக்கு கொண்டாட்டம்தான்
16. பிரேதத்தை அடக்கம் செய்வதைவிட..... செய்வது மேல் என்று இந்துக்கள் நம்புகிறார்கள்.
17. ஐந்தும் மூன்றும் அடுக்காய் இருந்தால் அறியாத பெண்ணும் இது சமைப்பாள் என்பது பழமொழி
18. இலங்கை முழுவதற்கும் இந்த மொழியையே அரசகரும மொழியாக்கிவிட வேண்டும் என்ற கொள்கையுடையாரும் சிலர் இருக்கிறார்கள்.
19. இதன் காயையும் சிலர் விரும்பி உண்கிறார்கள்.
20. பெண்களுடைய மொழியை இதன் மொழிக்கு ஒப்பிடுவர் புலவர்

மேலிருந்து கீழ்

1. இது பிடித்தவர்களுடைய மூலை சரியாக வேலை செய்யாது.
2. இதுபண்ணுகிற வேலை தான் எல்லாம் என்பார் சோதிடர்
3. தேங்காயை.....யாமல் பால் எடுக்க முடியுமா?
4. இது உள்ள கவிஞர்களை யாரும் போற்றுவர்.
5. ஒருவித ஆடை
6. இந்த ஐந்துவைக் கண்டால் குழந்தைகள் குதூகலமடைவர்
7. கடையேழு வள்ளல்களில் ஒருவன்.
8. பாடகர்களுக்கு பக்க சுருதியாக உதவும் ஒரு நரம்புக் கருவி.
11. இதனுள் முதலில் பிரவேசிக்க யாரும் அஞ்சுவது இயற்கைதான்.
12. இந்தக்கால இரவுகுளிர் நிறைந்ததாய் இருக்கும்.
14. தண்ணீர் வைக்கும் ஒரு பாத்திரம்.
15. மீன் போடும் கூடை
16. இலை
17. விஷ்ணுவின் பத்தாவது அவதாரம்
18. இதை அளவிற்கு மிஞ்சி அலங்காரம் செய்து கொள்வதில் பெண்களுக்கு ஆசை அதிகம்.

'சுதந்திரன்'

சந்தா விபரம்

வருட சந்தா ரூபா 7-50

ஆறு மாத சந்தா ரூபா 4-00

விபரங்களுக்கு எழுதவும்:-

சர்குலேஷன் மானேஜர்,

'சுதந்திரன்'

194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகளின் சுருக்கம்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

2. போட்டிக்குரிய கட்டணம் இலங்கைப் போஸ்டல் ஆடர், இந்திய மணிஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

3. சம்பந்தப்பட்ட ஒரு போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூபா 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சுதந்திரன் மனேஜருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டிவிடை அனுப்ப வேண்டிய விலாசம்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி

தபால்பெட்டி இலக்கம் 1183

சுதந்திரன் காரியாலயம், 194ஏ, தட்டாதெரு, கொழும்பு—12.

ஏகத்துவக் கொள்கையை..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லை நபிநள் நாயகம் (ஸல்) அவர்கள் முத்தமிட்டதைப் பின்பற்றியே முஸ்லிம்களும் முத்தமிடுகின்றார்கள். எனினும் அக்கல்லை முத்தமிடுவது கூடாதுபோலுல் சயிக்கினை செய்யலாம் இதை முத்தமிடுவது கடவுள் பூஜை அல்லவென்றும், அன்பின் பெருக்கால் (அக்கல் சுவர்க்கலோகக்கல் என்பதற்காக) நபிகள் நாயகம் முத்தமிட்டிருக்க வேண்டுமென்றும் ஒருவன்—தன் காதலியை முத்தமிடுவதற்கும்—குழந்தையை முத்தமிடுவதற்குமுள்ள பேதாபேதம் இதில் இருக்கிறதென்றும் மௌலானு செய்யித் சுலைமான் நதவி எழுதியுள்ளார்.

இப்னு உமர் இக்கல் வெறுங் கருப்புக்கல் என்றும் அதுவிக்கிரஹ வணக்கத்துக்கு உரியதல்லவென்றும், பின்வருமாறு கூறியிருப்பதாக ஹதீதில் வருகிறது. ''இக்கல் வெறுங்கல் என்பதை நான் அறிவேன். இதற்கு இறைவன் சாக்ஷி. அக்கல் தீமையும் இழைக்க முடியாது; நன்மையும் செய்ய முடியாது என்பதையும் நான் அறிவேன். இறைவனின் திருத்தூதர் நாயகம் (ஸல்) அவர்கள் முத்தமிட்டதை நான் பார்த்திராவிடில் நான் முத்தியிடமாட்டேன்''

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இக்கல்லை ஏன் முத்தமிட்டார்கள் என்பதற்கு இன்னும் சரியான ஆதாரங்கள் எனக்கு கிடைக்கவில்லை. இதைப் பற்றி முஸ்லிம் அறிஞர்கள் இக்கட்டுரையைப் படிப்பவர்கள் எழுதினுல் நலம். ''சுனத்து'' என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது செயல். நபிகள் நாயகம் அவர்கள் அக்கறுப்புக்கல்லை முத்தமிட்டதற்கு ஏதும் தகுந்த காரணம் இருக்கத்தான் வேண்டும். அவர்கள் செய்ததைப்பற்றி நானும் மக்கத்தில் இருக்கும்போது அக்கல்லை முத்தமிட்டேன்.

அடுத்த கட்டுரையில் ஹஜ் யாத்திரை, இஸ்லாமிய சகோதரத்துவம், பலியிடுதல், பலியிட்ட வஸ்துவை உண்ணல் ஆகிய விஷயங்களை எழுதுவேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை:

காலிரோட்

பொ. தம்பிராசன்

அன்று ஞாயிற்றுக் கிழமை. பத்திரிகையில் மூழ்கிக் கிடந்தேன். என் மனைவி இடுப்பை வளைத்து அங்கும் இங்கும் ஓடி ஆடி வேலைசெய்து கொண்டிருந்தாள். எங்கள் ஒரே மகள் கண்மணி ''அம்மா மெத்தப் பசிக்கிறதே'' என்ற பாட்டை இழுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கென்ன பசிக்காத வேளையிலும் பாடிக்கொண்டிருப்பாள்.

''காப்பி வேண்டுமா?''—கேட்டபடி அருகில் வந்தாள் என் அகிலா.

''அவசியம் தேவை'' என்றேன் நான்.

ஒரு குறும்புப் புன்னகையோடு அவசர அவசரமாக அடுப்பங்கரையை நோக்கிச் சென்றாள். காலையில்குளித்து விட்டு தலை ஈரத்தைக்கூட நன்றாய் எடுக்கவில்லை கூந்தலை அள்ளித் தலைப்பிலே ஒரு முடிப்பு மட்டும் போட்டிருந்தாள். அவ்வளவு அவசரம்; பறந்து பறந்து வேலை செய்வதைப் பார்க்கும் போது அனுதாபப்பட்டேன். வேறு என்னதான் செய்ய முடியும்!

சிறிது நேரத்தில் காப்பியை எடுத்து வந்தாள். தந்து விட்டுப் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டாள்.

''மாலையில் சினிமாவிற்குப் போகலாமா?'' என்றாள்.

''உனக்குப் பிடிக்கும் சீரியல் படமொன்றும் ஓடவில்லையே'' என்றேன் கிண்டலாகா.

அவள் ஒரு செல்லக்கோபத்தோடு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அப்படிப்பட்ட சமயங்களில்தான் அவளின் உண்மை அழகை நான் அள்ளிப் பருகுவதுண்டு இந்த இரகசியத்தை என் மனதிற்குள்ளேயே வைத்திருந்தேன். அவளிடம் ஏன் சொல்லி போர்தொடுக்க வேண்டும்.

''இன்று கடற்கரைக்குச் செல்வோம்''—என்றேன். ஒப்புக்கொண்டாள்.

மாலை 5 மணிக்குக் கடற்கரைக்குச் சென்றோம். அலைகள் மோதிக்கொண்டிருந்தன. வீட்டிலே வெந்து புழுங்கிய உடலுக்கு குளிர்மையான கடற்காற்று இன்பமளித்தது.

சூரியன் மறைந்தான். இருள் ஒளியை விழுங்கிக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட நேரங்களில்தான் என் காதலி அகிலாவை அணைத்துக்கொண்டு நான் உலாவுவது வழக்கம். பழைய இன்ப நினைவுகள் உள்ளத்தைமகிழ்வித்தன. அதே அகிலாதான இப்போது என் மனைவியாக மாறியுள்ளாள். ஆனால் ஒதுங்கி நடந்து கொள்கிறாள். கண்மணியோடு மட்டும் கைகோர்த்து நடக்கிறாள். ஆமாம்; உண்மையான காதலின்பம் திருமணத்திற்கு முன்னர்தான் என்று எண்ணிக் கொண்டேன். இதுதான் உலகம்!

மணலில் உலாவிக்கொண்டே சென்றோம். எதிரே என் நண்பன் சங்கரும் மனைவியும் வந்துகொண்டிருந்தனர். அண்மையில் வந்ததும் என்னை அணைத்துக்கொண்டான். அவன் மனைவி கண்மணியைத் தூக்கிக்கொண்டாள். குழந்தையோடு மழலையும், வீட்டுக் கதைகளையும் பேசிக்கொண்டே இருவரும் தனியே உலாவிக் கொண்டிருந்தனர். நாம் இருவரும் மணலில் உட்கார்ந்தோம், நலம் விசாரித்தோம்.

எதிர்த்துவந்த இரு பெண்கள்மேல் என் கவனம் சென்றது. வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். ''உரித்து வைத்தாற் போல்'' என்று கூறுவார்களே அப்படியே இருவரும் இருந்தனர். சோகைபடர்ந்த முகத்தில் ஒரு வரட்டுச் சிரிப்பை என் நண்பன்மேல் வீசிவிட்டு நடந்தாள் அவர்களில் ஒருத்தி.

''டேய் உன் மனைவி பார்க்கிறாள்'' என்றான் என் நண்பன்.

''உன்னை உன் மனைவி பார்க்கவில்லையா?'' என்றேன் நான்.

''உன்னோடு ஒப்பிடும் போது அதுகள் அவலட்சணங்கள் என்று கூறிவிட்டால் என் மனைவின் மனம் குளிர்ந்துவிடும்'' என்றான் நண்பன்.

''யாரப்பா அவர்கள். உனக்குத் தெரிந்தவர்கள் போல் தெரிகிறது'' என்று அவனை விசாரித்தேன்.

''ஆமாம் அவர்களைப் பார்த்தால் இரட்டைப்பிள்ளைகள் என்றுதான் சொல்வார்கள். ஆனால் ஒரு ஆண்டு வித்தியாசம். வரட்டுப்புன்னகை செய்தாளே அவள்தான் தங்கை ஆனந்தி. மற்றவள் அவள் அக்கா சாந்தி'' என்றான் அலட்சியமாக.

''அவர்கள் பரம்பரையே உனக்குத் தெரியும்போலிருக்கிறது'' என்றேன் நான்.

''அது ஒரு கண்கலங்கும் கதை'' என்றான்.

மங்கிய ஒளியில் அவர்கள் மறையவில்லை. அவர்கள் பின்னலோடும் 'நைலோன்' சேலையோடும் கடற்காற்று விளையாடிக் கொண்டிருந்தது. சாதாரண பெண்களுக்கு வேண்டிய உயரத்தை விடச் சற்று உயரமாக இருந்தார்கள். பெண்களுக்கு வேண்டிய உடற்கட்டிலும் சிறிது ஒல்லியாக இருந்தார்கள். ஆயினும் திடீர் பார்வைக்கு அவர்கள் அதிர்ச்சி தரும் அழகிகளாகவே தோன்றினர்.

''எங்கே உன் சிந்தனை அங்கேயே போய்விட்டதோ'' என்றான் சங்கர்.

''இல்லையில்லை. அந்தக் கதையைச் சொல்லு'' என்று அவசரப்படுத்தினேன். அகிலாவும் மனைவும் கண்மணியோடு தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். நண்பன் கதையை ஆரம்பித்தான்.

★

வெள்ளவத்தையில் காலி ரோட்டோடு உள்ள எங்கள் கல்லூரியை உனக்குத் தெரியுந்தானே. அங்கேதான் இளையவள்—ஆனந்தி காரியதரிசியாகவும் 'டைபிஸ்'டாகவும் இருக்கிறாள்; தாய் தந்தையர் யாழ்ப்பாணத்திலுள்ளனர்; சாதாரண குடும்பம்; அப்போது அவள் தமக்கையை நான் அறியேன். ஆனந்தி மூலமாக மட்டும் அறிந்திருந்தேன். குடும்பத்தில் கஷ்டமிருந்தபோதிலும் அவளைச் சர்வகலாசாலைப் படிப்பிற்கு அனுப்பினர். அதனால் ஆனந்தி மேலே படிக்க முடியவில்லை. குடும்பத்திற்கு உதவும் பொருட்டு டைபிஸ்டாகச் சேர்ந்தவள், அக்கா பட்டம் பெற்று யாழ்ப்பாணத்தில் ஆசிரியையான போதும் உழைப்பை விட்டுவிடவில்லை. தனியாகவேறு பரீட்சைகளுக்குப் படித்துக் கொண்டிருந்தாள். விடுமுறையின்போது அவள் சகோதரி கொழும்பிற்கு வருவது வழக்கம். ஒருமுறை எனக்கு அறிமுகம் செய்து வைப்பதாகவும் சொல்லியிருந்தாள்.

ஆனந்தி கொள்ளுப்பிட்டியில் ஒரு குடும்பத்தினரோடு தங்கி இருந்தாள். தினமும் பஸ்ஸில் கல்லூரிக்கு வருவாள். யாவரோடும் சகஜமாய்ப் பழகுவதுபோலவே என்னோடும் பழகி வந்தாள்.

ஒருநாள் யாழ்ப்பாணத்திற்கு விடுமுறையில் போய் திரும்பி வந்திருந்தாள் ஆனந்தி. வேலைகள் குவிந்திருந்தன. என்னிடம் ஓடி வந்தாள். யாராவது 'டைப்பிங்' தெரிந்த மாணவனைக் கொண்டு கொஞ்ச வேலை செய்து தரும்படி வேண்டினாள். மேல்வகுப்பில் படித்துக்கொண்டிருந்த என் நண்பனை அனுப்பினேன்.

''நான்கு மணி நேரம் கைகள் நோவ அவளுக்கு உதவி செய்தேன். வெளியேறும்போது 'தாங்யூ' என்றோ சொல்லை மட்டும் உதிர்த்துவிட்டாள். எனக்கு ஆத்திரம் வந்தது. அவள் மேலல்ல—அந்தச் சொல்லின்மேல்'' என்று மறுநாள் சந்திரன் என்னிடம் கூறினான்.

''ஒரு புன்னகையாவது தரவில்லையா?'' என்றேன்.

''அதற்கு என்ன குறைவு. நான் நிமிர்ந்தபோதெல்லாம் புன்னகையைத்தான் வீசிக்கொண்டிருந்தாள்'' என்றான்.

''காப்பி தரவில்லையா?'' என்றேன்.

''அது மட்டுமென்ன, சிகரெட் கூடக் கிடைத்தது'' என்றான்.

''அவள் உள்ளத்தில் இரக்கம்கூடத் தோன்றியிருக்கலாம். மிகவும் ஆபத்து. கவனமாக நடந்துகொள். படிப்பு நேரத்தை வீணுக்கி விடாதே'' என்று நான் அன்று எச்சரித்தேன்.

சந்திரனும் ஆனந்தியும் நெருங்கிப் பழகுவதை நான் அறிந்து வந்தேன். மற்றும் பலரும் இதை அறித்திருந்தனர். அவளுடைய புன்னகையில்தான் அவன் முகத்தில் மலர்ச்சி தோன்றுவதை நான் அறிந்து வந்தேன். இடையிடையே அவர்களிடை ஊடல்களும் ஏற்பட்டு வந்தன. அந்நாட்களில் அவன் பேயறைந்தவன்போல் திரிவான். தங்களிடை நடைபெறும் சிறு சம்பவங்களையெல்லாம் என்னிடம் சொல்லிவந்தான். நான் கேலி செய்துவந்தேன். 'என் ஆனந்தி' என்று அவன் உரிமையோடு பேசிவந்தான். பல மாதங்கள் கடந்தன. ஒருநாள்.

பம்பலப்பிட்டியில் பஸ்ஸிற்காக தூங்கிக்கொண்டிருந்தேன். காலிரோட்டின் இரைச்சலுத்தானே இலங்கையில் எங்கும் கேட்க முடியாதே. கார்கள், பஸ்கள், மோட்டார் சைக்கிள்கள் இவற்றின் இரைச்சல்களையெல்லாம் விழுங்கும் இரண்டு தட்டு பஸ்களின் சத்தம்—எல்லாம் அவசரம், அவசரம். பஸ்கள் யாவும் நிறைந்தபடி ஓடிக்கொண்டிருந்தன.

காலிரோட்டின் மறுகரையில் சந்திரனைக் கண்டேன். தெருவைக் கடந்து வருவதற்கு 5 நிமிடங்கள்வரை சென்றன. அவன் முகத்திலே ஈயாடவில்லை. தன் நினைவு இழந்திருந்தான். ஊடல் படலம் நடந்துகொண்டிருப்பதை நான் உடனே உணர்ந்துகொண்டேன். அவனிடம் விசாரித்தேன். ஏதோ சிறு தகராறு. சில நாட்களாகக் கதைப்பதேயில்லை என்று சொன்னான். எப்போது உங்கள் ஊடல் முடிவடையும் என்று கேட்டேன்.

''நாளை மறுநாள் 'ரோமியோ அன் ஜூலியட்' சினிமா ஆரம்பமாகிறதே. அதற்குள் ஒற்றுமையாகித்தானே தீரவேண்டும்'' என்றான் ஒரு பெருமைச் சிரிப்போடு. இரண்டு தட்டு பஸ் ஒன்று வந்து நின்றது. சந்திரன் பின்னால் நான் ஏறினேன். உள்ளே நுழைந்தவன் திடீரென மகிழ்ச்சி ததும்ப என்னைப் பார்த்தான். முன் 'சீட்டி'ல் ஆனந்தி இருப்பதைக் காண்பித்தான். அவளருகே ஓர் இளைஞன். யாரோ பிரியாணி என எண்ணிக்கொண்டேன். அவள் திரும்பியே பார்க்கவில்லை. இருவரும் அவர்கட்குப் பின்னே ஒரு சீட் தள்ளி உட்கார்ந்தோம்.

இறங்கும்பொழுது அவளைத் திடுக்கிட வைக்க வேண்டும் என அவன் என் காதுக்குள் சொன்னான். பத்திரிகையை விரித்து முகத்தை மறைத்துக் கொண்டான்.

அந்த இளைஞன் அவளோடு பேசிக் கொண்டிருந்தான். சில சொற்கள் எம் காதுகளில் வீழ்ந்தன. சந்திரனின் முகமெல்லாம் வியர்த்து விட்டது. அவன் இருதயம் எரிமலையைப்போல் எரிந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். அவன் கையைப் பற்றினேன்; வியர்வை! என் இருதயம் பனிக்கட்டியைப் போல் உறைந்துவிட்டது.

இதுதான் இவன் காதலா! என்று எண்ணினேன். கடவுள்மேல் பக்தர்கள் நம்பிக்கை வைப்பதுபோல் அவன் ஆனந்திமேல் வைத்திருந்தான். பொற்கொல்லர்கள் பொன்னைப் பயன்படுத்துவதுபோல் இவர்கள் காதலைப் பயன்படுத்துகிறார்களா என்று எண்ணினேன்.

''சரியாக ஆறு மணிக்குத் தியேட்டருக்கு வந்துவிட வேண்டும்'' என்ற அந்த இளைஞனின் வற்புறுத்தும் குரல் இருவர் செவிகளிலும் ஒலித்தது.

நாம் இறங்க வேண்டிய இடம் நெருங்கி வந்தது. இரு பஸ் ஸ்டாண்டுகளுக்கு நடுவே எமது கல்லூரி இருக்கிறது. முதல் வரும் நிலையத்திலேயே இறங்கிவிடுவதாக நான் தீர்மானித்தேன். அடுத்த நிலையத்தில்தான் ஆனந்தி வழமையாக இறங்குவாள் சில வேளைகளில் அந்நிலையத்திற்கு அருகே இருக்கும் புத்தகக் கடைக்குச் சென்று ஏதாவது புத்தகம், பத்திரிகைகள் வாங்கி வருவாள்.

அறிவை இழந்து உணர்ச்சி வெறியில் இருந்த சந்திரனைக் கையில் இழுத்தபடி முதல் நிலையத்திலேயே இறங்கினேன். அந்நேரத்தில் அவன் சிந்தனையில் எவ்விதபுத்திமதியும் ஏறாது என்பதை உணர்ந்தேன்.

பஸ் அடுத்த நிலையத்தில் நிற்பதற்கிடையில் கல்லூரிக்கு எதிரே வந்துவிட்டோம். காலிரோட்டைக் கடப்பதற்காகக் காலை முன் வைத்தேன். பஸ்களும், கார்களும் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. ஒரு சிறு இடைவெளி வந்ததும் 'வா'ப்பா என்று அவன் கையை இழுத்துவிட்டுப் பாதித் தெருவை நான் கடந்துவிட்டேன்,

''கிறீச்'' என்ற பிரேக் சத்தம் கேட்டதும், இருதயம் வெடித்துவிட்டதைப் போல் உணர்ந்தேன்; திரும்பினேன். சந்திரன் சிலை போல நின்றுகொண்டிருந்தான். அவன் முகத்தில் எவ்விதமாற்றமும் இல்லை. என்னுடல் பதறிக்கொண்டிருந்தது. 'ரைய'ரைத் தேய்த்தபடியே ஓரத்தில் ஒதுங்கி நின்ற காரின் சாரதி, எரிந்து விடுபவன் போல் பார்த்தான்.

பின்னே வந்த கார்களும், பஸ்களும், 'ஹோன்' அடித்தவண்ணம் தங்கிக்கொண்டன. தெருவில் சென்றவர்கள், கடைகளில் உள்ளவர்களின் கவனமெல்லாம் ஆவலோடு அவ்விடத்தையே நோக்கிக்கொண்டிருந்தன. கல்லூரியில் உள்ளவர்களெல்லோரும் மேல்மாடியன்னலருகே ஓடிவந்து எம்மைப் பார்த்தனர்.

உணர்ச்சியற்ற சந்திரனின் பார்வை கல்லூரி மாடிமீது சென்றது. அங்கே ஆனந்தி—அவளின் ஏக்கமும் புன்னகையும் தவழும் முகம்—அவன் சந்தேகம் தீர்ந்தது. உணர்வு பெற்றான்! உயிர்பெற்றான்! முகம் மலர்ந்தது. யாவற்றையும் மறந்தான்! அவளிடம் ஓடிச் சென்று தவறுக எண்ணியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என எண்ணினான். ஆத்திரத்தோடு அறிவிழந்து பாதி ரோட்டைக் கடந்த அவன் மகிழ்ச்சி ததும்பும் முகத்தோடு மறு பாதியைக் கடக்க ஓடினான்.

''கிறீச்''—ஐயோ! என்று மேலேயிருந்து ஒரு குரல்—மறுபுறமிருந்து வந்த ஒரு இரண்டு தட்டு பஸ் அவனைச் சிதற அடித்துவிட்டது.

(யாவும் கற்பனை)

மறதிக்கு மருந்து!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போக நானும் ஒரு சாமான் வாங்குவதை மறந்துபோக வீட்டுக்குத் திரும்பியதும் மனைவியை பத்ரகாளி ரூபத்தில் பார்க்க நேர, இவைகளையெல்லாம் நினைத்தாலே இன்னும் குலைநடுக்கம் ஏற்படுகிறது.

மறதியை ஒழிக்கும் நவீன மருந்தாக நோட்டுப் புத்தகங்களில் குறித்துக் கொள்ளும் முறையே அனைவராலும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. ஞாபகமறதிக்குச் சிறந்த மருந்தான இந்த முறை எத்தனையோ 'டயரி' வியாபாரிகளுக்கு பிழைப்பூட்டி வருகிறது. ஆனால் வருடா வருடம் இந்த டயரிகளையே வாங்குவதற்கு மறந்துபோய் விடுவோர் எத்தனை பேரோ!

அடடே, ஆபீஸுக்குச் செல்லவிருந்த நான் அதை முற்றாய் மறந்து ''மறதி'' யைப் பற்றிக் கட்டுரை எழுதிக்கொண்டிருக்கிறேன் பாருங்கள். கட்டுரை எழுதிய அவசரத்தில் கடிகாரத்தைப் பார்க்கக்கூட மறதியாகிவிட்டது..... என்ன உங்களுக்குமா மறதி? மார்க்கெட்டுக்குப் போகவேண்டிய நீங்கள் அதை மறந்து ஏன் இந்தக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

எஸ். பி. எஸ். பதமருந்து

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய மிகச் சிறந்த சஞ்சீவி

தலைவலி, ஜலதோஷம், அஜீர்ணம், வயிற்றோட்டம், வயிற்றுவலி, பசியின்மை, இழுப்பு, ஜன்னி, எல்லாவித வாதரோகங்கள், ஜுரம் இருமல் முதலிய சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

உபயோக விபரம் மருந்துடன் வைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1-00 தபால் செலவு வேறு

இலங்கை சோல் ஏஜெண்டுகள்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34ம் நிர். செட்டியார்தெரு, கொழும்பு-11.
போன்: 6084.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆபாசம் பரப்பும் படங்கள் தடை செய்யப்பட வேண்டும்

இந்தியப்படவிவாத அரங்கில் பாரதப்பிரதமரின் முழக்கம்

சங்கீத நாடகக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்திய சினிமா விவாத அரங்கு சென்ற மாதம் 27ந் தேதி ஆரம்பமாகியது. புதுடில்லி தேசிய பூதபௌதீக ஆராய்ச்சிக் கூட ஆடிடோரியத்தில் ஆரம்பித்த இந்த அரங்கில் பாரதத்தின் தலைசிறந்த கலைஞர்கள், நடிக—நடிகைகள், எழுத்தாளர்கள், படத்தயாரிப்பாளர்கள் எல்லாரும் கலந்துகொண்டார்கள்.

அதோ அரங்கின் வெற்றிக்கு உயிர்க் கோணமாக இருந்த தேவிகாராணி உயிரோட்டம்போல ஓடி அடி வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இதோ உலகப்புகழ் கொட்டும் பிரசித்த நடிக—நடிகைகளான ஸ்ரீமதி துர்காகோஷ், ஸ்ரீமதி நர்கிஸ், ஸ்ரீ பிரிதிவிராஜ், ஸ்ரீ ராஜ்கபூர் முதலானோர்கள் வீற்றிருக்கிறார்கள். பாரதத்தின் தலைசிறந்த நடிகமேதை உதயசங்கர் அங்கு அந்தக் ''கூத்தாடி'' போல நிறைந்து நின்றார். பாட்டுக்கொரு பாடகரான பக்கஜ் மல்லிக் அங்கு இசை தவழ இருந்தார். இந்தியாவின் இணையற்றமுற்போக்கு எழுத்தாளர் அப்பாஸும் அங்கு காணப்பட்டார். வாஸன், சர்க்கார் போன்ற உற்பத்தியாளர்களும் இருந்தார்கள். ஆடிடோரிய மேடைமீது இந்திய உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும், அன்னிய நாடுகளின் ராஜ்ய பிரதிநிதிகளும் நிறைந்திருந்தார்கள்.

இந்தியப் பிரதமர் அரங்கிற்கு வந்ததும் ஒரேகோலாகலம், மலர்கள் சூட்டி வரவேற்றார்கள்.

இவ்விவாத அரங்கை பண்டிட்ஜி ஆரம்பித்துவைத்துப் பேசும்போது அவர் குறிப்பிட்டதாவது:—

''இந்தியாவில் சினிமா தொழிலில் ஈடுபட்டவர்கள் சேர்ந்து தமது பொதுப் பிரச்னைகளைப்பற்றி சிந்திப்பதற்காகவும். விவாதிப்பதற்காகவும் மேடை அமைத்திருப்பது இதுவே முதல் தடவை. இந்த ஆக்கப்பணி கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

''இப்படியான பரஸ்பர விவாதத்தினுல் படத்தொழில் சம்பந்தமான பலப் பிரச்னைகளைத் தீர்க்க வழி உண்டாகும். சினிமாப்படத் தொழில் பிறர் உதவியின்றி பிரமிக்கத்தக்க வளர்ச்சி அடைந்திருப்பதுகண்டுநான் மகிழ்ச்சி அடைகிறேன்.

''புத்தகங்கள், பத்திரிகைகள் இவைகளைவிட சினிமாப் படங்களில் மக்கள் மனதில் பதிந்து அவர்கள் சிந்தனையைத் தூண்டும் சக்திகூட உண்டு. எனவே இந்த பிரமாண்டமான சாதனம் மக்களிடையே ஒழுக்கத்தை உருவாக்குவதற்கு பயன்பட வேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கம் அக்கரைகாட்ட வேண்டியது அவசியம்''

அணுக்குண்டு உதாரணம்

பிலிம் தணிக்கை பற்றிப் பேசும்போது தொடர்ந்து பண்டிதநேரு கூறியதாவது:

''உதாரணமாக அணுக்குண்டை மலிவாகவும் இலகுவாகவும் உற்பத்தி செய்யும் நிலை ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது தனிப்பட்ட நபர் சுதந்திரத்தின் பேரால் நாம் ஒவ்வொருவரையும் தமது பையில் அணுக்குண்டொன்றை எடுத்துக்கொண்டு போகும்படி அனுமதிக்கலாமா?

''தனிப்பட்ட நபரின்சுதந்திரத்தை நாம் கட்டுப்படுத்தக் கூடாதுதான். என்றாலும் சில இடங்களில் தனி நபர்களின் சுதந்திரத்தில் நாம் தலையிடத்தான் வேண்டும். ஆபாசத் தடல்களை தடுக்க வேண்டும்.

''பயங்கரமான படங்களையும், கொலை செய்வதில் திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும்படியான உணர்ச்சிகளை ஊட்டும்படங்களைத் தடுக்கவேண்டும். இந்தமாதிரியான படங்களை எந்த அரசாங்கமும், சமூகமும் அனுமதிக்க முடியாது'' என்று நேரு ஆவேசமாகப் பேசி முடித்தார்.

பிரதம நிதியரசர் ராஜமன்னர் எல்லாரையும் வரவேற்றார். அவர் பேசும்போது ''இவ்விவாத அரங்கு படத்தொழிலில் முக்கிய



திருப்புமுனையாக சிலரைக்கொண்டு, படத்தொழிலில் சில அம்சங்களைபற்றி விவாதிப்பதற்கான பொது அரங்கமாகும். படத்தொழில் இந்தியாவில் பெரிய தொழில். 5வது பெரிய தொழிலாக உயர்ந்துள்ளது. கோடிக்கணக்கான மக்களின் பொழுது போக்குச் சாதனமான இது நல்ல வழிகளில் நாட்டிற்கு பிரயோசனப்படவேண்டும்'' என்றார்.

முதல் நாள் முடிவில் ஜனாதிபதி படத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலருக்கு விருந்தளித்தார்.

மகாநாட்டின் இரண்டாவது நாள் கூட்டத்தில் பிரபல சினிமா தயாரிப்பாளரான திருவாசன் படத்தொழிலின் வளர்ச்சிக்கு பல முக்கிய யோசனைகளை முன் வைத்துப் பேசினார்.

புதுடில்லியிலே நடைபெற்ற இந்த விவாத அரங்கு இந்தியா சினிமா உலகுக்கு ஒரு அபாய அறிவிப்பாகவும் சுடுகாட்டுப் பாதையிலிட்டுப்போகும் அபாயங்களை ஸ்பட்சமாகவெளியாக்கியும் உள்ளது. மேல் நாடுகளிலிருந்து—குறிப்பாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் கொலை, காமவெறி, காமிக் படங்கள் நாட்டு மக்களிடையே கீழ்த்தரமான உணர்ச்சிகளை பரப்புவதுடன், பட உலகத்திலும் தனது நாசகாரமான செல்வாக்கை திணிக்க ஆரம்பித்துள்ளது

இந்தியப் படங்களின் போக்கு ஹாலிவூட் பாணியில் காம விகாரத்திற்கும், கொலை, கொள்ளை, சோரம் முதலிய கீழ்த்தரமான உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் கொள்ளை லாபம் அடிக்க



முடியும் என்பது படமுதலாளிகளின் கனவு.

இந்த நிலையில் இந்தியப் பிரதமர் நேருவின் எச்சரிக்கை ஒரு புதிய தெம்பு தருவதாக உள்ளது. ''தனி நபர் சுதந்திரத்தின் பேரால் ஒவ்வொருவரும் அணுக்குண்டை வைத்துக் கொண்டிருக்கலாமா?'' என்று அறைந்து கேட்டுள்ளார்.

லாபவேட்டையை நோக்காகக்கொண்டு ஒரு சில நபர்கள் கீழ்த்தரமானபடங்களைத் தயாரிப்பது சமூகத்தை எதிர்த்த பயங்கரக் குற்றமாகக் கருதப்படவேண்டும். சினிமா உலகத்திலும் கூட மக்களின் அரசியல், சமூக கண்ணோட்ட உரிமைகளில் தலையிடாமல் சினிமாவின் சுயேச்சையான வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவக் கூடிய காலத்தில் கீழ்த்தரமான உணர்ச்சிகளை பரப்பும் படங்கள்மீது ஈவிரக்க மற்ற கட்டுப்பாட்டை அரசாங்கம் கொண்டு வரவேண்டும் அத்துடன் மேல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கீழ்த்தரப் படங்களையும் தயவுதாட்சண்யமின்றி தடைப்படுத்தவேண்டும்.

புதுடில்லியில் நடந்த இந்நியவிவாத அரங்கு இத்துறையில் இந்தியாவில் ஒரு திருப்பு முனையை அமைத்தால் அதன் மூலம் பாரதக் கலைகள்—மக்கள் பண்புகள் மேலும் உயர, செழித்தோங்க உதவலாம்.

—'நேஜஸ்

விமர்சனம்

மேனகா

துப்பறியும் நாவலுக்குள்ள கருவூலத்தை வைத்துக்கொண்டு புதிரைப்போட்டு புதிரை அவிழ்க்கும் பொழுதுபோக்கு நோக்குடன் கதைச் சம்பவங்களை கோத்துப்பின்னி வெளிவந்துள்ள படம் மேனகா. இது இப்போது ஸிலோன் என்டர்டைன்மன் ஸ்தாபனத்தாரால் கொழும்பு செண்ட்ரல் தியேட்டரில் திரையிடப்படுகிறது.

ஒரு மூர்க்க அக்காவுக்கு 'தோப்புக்கரணம்' போடும் தம்பி. அவனது மனைவிதான் மேனகா. கொழுத்த ஜமீன்தார் வீட்டுப்பெண்ணை தம்பிக்கு கல்யாணம் செய்து சொத்து சுகங்களை அபகரிக்கத்திட்டமிடும்அக்கா சதிகாரனெருவனுடன்சேர்ந்து மேனகாவை கணவனிடமிருந்து பிரிக்கிறாள். பின்அவளை 'ஒழித்து' விடுவதற்காக வேறு ஒரு சதி. வீட்டிற்கு மீண்டும் வரச்செய்கிறார்கள். வக்கீலான தம்பி வெளியூர் போன சமயம் மேனகாவை ஒரு தூர்த்தனிடம் 'கூண்டுக்கிளி'யாக்குகிறார்கள். தன் கற்பைக்காத்துமேனகா போராடுகிறாள். அந்த காமுகனின் மனைவி தக்க சமயத்தில் மேனகாவை காப்பாற்றுகிறாள்.

புருஷனிடம் மேனகா பற்றி அபச்சார பழி சுமத்துகிறாள் அக்கா. நம்பிய கணவன் பித்தனாகிறான். காரில் மேனகா போவதைப் பார்த்து பின் தொடர்கிறான். கார் விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். மேனகாவே தோழியின் உதவியுடன் அவனுக்கு நேர்ஸாக சேவை செய்கிறாள். மேனகாவின் தந்தையும் சதிக்கு இலக்காகி பைத்தியக்காரராகிறார்.

போலீஸ் ஒற்றர் பலவேடங்களில் வந்துஉண்மையை அறிகிறார்.

டாக்டராக வேடம்போட்டிருப்பது மேனகாவே என்பதை அக்கா அறிந்ததும் கொலை செய்ய ஏற்பாடுநடக்கிறது. கொலைகார வேடத்தில் வந்த போலீஸ் உளவாளி மேனகாவை காப்பாற்றிவிடுகிறார். இறுதியில் உண்மை வெளிச்சமாகிறது: அக்காவும் சதிகாரனும்விலங்குமாட்டப்படுகிறார்கள். இதுதான் கதை.

பாராட்டக்கூடிய புதுமை ஒன்றும் கதையில் இல்லை என்றாலும், கணவனுக்கு லட்சணம் கூறும் பத்தினியின் நடனக்கருத்தும், தன் கணவன் காமுகனாகும் அதை எதிர்த்த புதுமைப் பெண்ணுக்குள்ள புரட்சி மனப்பான்மையுடன் கணவனை நல்லவனாக்கவில்லனின் மனைவி போராடுவதும் புதுமையானவை.

படத்திற்குரியவிறுவிறுப்பு இல்லாது கதை சப்பென்று ஓடிக்கொண்டிருந்தாலும் ஒரு நல்ல 'மாற்று' என்று கூறலாம்.

தமிழ் நாட்டின் பிரபல நடிக, நடிகைகள் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள் என்றபோதிலும் யாருடைய நடிப்பும் மெச்சத்தக்கஅளவு சோபிக்கிறது என்று கூறிவிடமுடியாது.

துப்பறியும் கதையும், நிறைய நடனங்கள், பாட்டுக்கள் கொண்ட படம் ஒன்றைப் பார்க்கத்துடிக்கும் ரசிகர்களுக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

—என்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜலவாயுக் குண்டின்..

நான் ஒரு நடுநிலைமை அரசாங்கத்தின் தலைவனாய் இருப்பின் என் நாட்டில் மக்கள் தொடர்ந்து வாழ்வதற்குரிய வழிவகைகளைத் தேடுவதே என் தலையாய கடமை என கருதுவேன் இதனை அடைவதற்கு இரும்புத் திரைக்கு எதிர்ப்பக்கங்களில் உள்ள நாடுகளுக்கிடையில் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்பது கூறுமலே விளங்கும்.

போரை நிறுத்துவதற்காக மேற்கு நாட்டை முற்றுக அடிமைப்படுத்துவதை யான் விரும்பாவிடினும் நான் மனிதன் என்ற முறையில் போரைத் தடுத்து எல்லா நாடுகளுக்குமிடையில் கூடியளவு ஒற்றுமையை நிலைநிறுத்த விழைகிறேன்.

இந்த உலக அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று கருதுகிறேன்.

விரும்பினால் அதை நடுநிலைமை நாடுகளால்தான் நன்கு நிறைவேற்ற முடியும் என்பது என் நம்பிக்கை. ஒன்று அல்லது பல நடுநிலைமை நாடுகள் ஒன்றுகூடி ஒரு நடுநிலைமை வகிக்கும் நிபுணர் குழுவைத் தெரிவு செய்ய வேண்டும். இந் நிபுணர் குழு நீர்க்காற்றுக் குண்டுப் போரினால் ஏற்படும் கொடுமைகளை நன்கு ஆராய்ந்து அவ்வறிக்கையை வல்லரசு அரசாங்கருக்குக் கொடுத்து அவர்களின் கருத்துக்களை அறிதல் வேண்டும் இவ்விதம் செய்யின் எல்லா வல்லரசுகளும் போரினால் ஏற்படும் தீமைகளை நன்கு உணர்ந்து அதைத் தடுக்க முயற்சிப்பார்கள் என்று

பெரிய வாள் உலகத்திலும் சிறிய அணுவுலகத்திலும் நம்மால் அறிய முடியாது என்று எண்ணியிருந்த பல மறைபொருட்களை மனிதன் தெளிவுபடுத்தியுள்ளான். மற்றும் மனித இனம் கட்டாயம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்கு அவர்கள் கலை, இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் அடைந்த முன்னேற்றமே சான்று பகர்ந்து நிற்கின்றன. இத்தகைய துறைகளில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்த மனித குலம் தம்முள் சில விஷயங்களுக்காகப் பிளவுபட்டு தம்மைத்தாமே அழிப்பது அறிவுடமையாகுமா? தொடர்ச்சியானமுன்னேற்றமும் மகிழ்ச்சியும் அறிவும் தம்மிடையே இருக்க இறப்பினில் இன்பம் காண்பதா?

இறுதியாக மனிதன் என்ற முறையில் மனிதராகிய உங்களுக்கு ஒன்று கூற விழைகிறேன். அதுதான் மனித இனத்தை மதியுங்கள்; மற்றவற்றை மறவுங்கள். அவ்விதம் செய்வீர்களாயின் புது இன்ப உலகை அடைவீர்கள். அன்றேல் பூமியிற் புதைந்து மண்ணெடு மண்ணாய் மறைவது திண்ணம்.

(பி. பி. ஸி. ரேடியோவில் சமீபத்தில் தத்துவ ஞானி பேட்ரம் ரஸல் பேசிய பேச்சின் சுருக்கம் இது)

—தமிழாக்கம் 'ஈழவேந்தர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விமர்சனம்

-அந்த நாள்-
ஒரு அற்புதமான படம்

"அந்த நாள்" தமிழ்ப்பட உலகில் ஒரு புதுமையான படம், அற்புதமான படம். பத்திரிகைக் காட்சியைப் பார்த்துவிட்டு வெளியேறிய தும் கூடப் படம் பார்த்த ரேடியோ சிலோனைச் சேர்ந்த ஒரு பெண்மணிமிடம் "படம் எப்படி?" என்று கேட்டேன். 'இந்தப் படத்தைப் பார்த்த பிறகுதான் தமிழ்ப் படத்திற்கும் ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது' என்றார் அவர். அவருடைய கூற்றை நான் அப்படியே ஆமோதிக்க வேண்டியதாயிற்று.

சலனப் படம் பேச ஆரம்பித்ததும் Talk—பேசுதல் என்ற ஆங்கிலச் சொல்லை அப்படையாக வைத்து Talkies என்று அதற்குப் பெயரிட்டார்கள்மேல் நாட்டார். தமிழ சலனப்படம் பேச ஆரம்பிக்கவில்லை. பாடுவதற்கு ஆரம்பித்து விட்டது! "காதைக்கவருங்கர்ணமிர்தகீதங்கள் 52 கொண்ட அரிச்சந்திரா" என்று படங்களை விளம்பரம் செய்வது அந்தக்காலத்துவழக்கமாயிற்று. "டாக்" என்பது "டாக்கி" ஆனால் பாட்டு என்பதிலிருந்து "பாட்டி" பிறக்க வேண்டுமல்லவா? பழங்காலத் தமிழ்ப் படங்கள் எல்லாம், கிருஷ்ண லீலா முதல் பக்த மீரா வரையில், 'பாட்டி' களாகவே இருந்தன.

இதை தொடர்ந்து நாட்டியம் என்ற ஒரு தொற்று நோய் தமிழ்ப் படங்களைப் பீடித்தது. எடுத்ததெற்கெல்லாம் நடனம்தான். அடுப்படியிலிருந்து கதாநாயகி காப்பி கொண்டுவருவது முதல் ரேடியோப் பெட்டியைத் தூசு துடைப்பதுவரை சகலமும் நடனத்தோடுதான் நடைபெற்றன!

பாட்டும் நடனமும் இல்லாமல் இரண்டே கால்மணி நேரம் பொதுமக்களை மந்திரத்தால் கட்டுண்டதுபோல் கதையின் சுவாரஸ்யத்தினால் கட்டிவைக்கலாம் என்பதை நிரூபித்த முதல்படம் 'அந்த நாள்'. இப்படத்தில் கதையை சொல்வதற்குகையாண்டிருக்கும் உத்திகளும், ட்ரீட்மெண்ட், எடிட்டிங் முதலிய கலையம்சங்களும், சில்ஹவுட் முதலிய படப்பிடிப்புகளும், பின்னணி ஒலிப்பதிவு டெக்னிக்குகளும் பிரமாதம், பிரமாதம், பிரமாதம்!

ஒரு சில குறைபாடுகள் இருந்த போதிலும், இப்படம் நடிகர் பாலச்சந்தரை ஒரு ஏ கிளாஸ் டைரக்டராக்கி விட்டதென்பதற்கு ஐயமேயில்லை.

"அது சரி, 'அந்த நாள்' படத்தின் கதையென்ன?" என்று ஒரு நேயர் அவசரப்பட்டுக் கேட்பது காதில் விழுகிறது. இதற்குப் பதில்: "சொல்லமாட்டேன்" என்பது தான்.

ஏனென்றால் இது ஒரு துப்பறியும் கதை. கொலை நடக்கிறது. கொலை செய்தவர் யார் என்ற சந்தேகம் வளர்ந்து வளர்ந்து ஒரு வட்டமாகி விடுகிறது. இந்த 'சஸ்பென்ஸ்' நிலையில் படம் பார்ப்பவர்கள் தவியாய்த் தவிக்கிறார்கள். அப்படித் தவிக்க வேண்டும் என்பது தான் கதாசிரியரின்-டைரக்டரின் ஆசை. யார் கொலையாளி என்பதை இங்கு சொல்லி அவர் ஆசையில் மண்ணைவாரிப் போட நான் விரும்பவில்லை. கதையைச் சொல்லிப் படத்தின் சுவாரஸ்யத்தையும் குறைக்க விரும்பவில்லை.

நான் சொல்லக் கூடியதெல்லாம் இதுதான்: ஒரு உயர்தரமான தமிழ்ப்படத்தை-மிஸ் மாலினிக்கு அடுத்தபடியாக வந்த ஒரு உன்னதமான தமிழ்ப் படத்தை-பார்க்க விரும்புபவர்கள் யாவரும் குடும்பசகிதம்சென்று 'அந்த நாளை' ஒருமுறையாவது தவறாமல் பாருங்கள் என்பதுதான்.

"தியாகி"

அறுபது கோடி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அமைப்புக்களின் வேலைகளையும் நிர்வகிக்கிறது. தேசிய பொருளாதாரத் திட்டத்தை நடைமுறையிலாற்றுவதுடன் வரவுசெலவுத் திட்டத்தையும் வகுக்க வேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தை அது நிர்வகிக்கிறது. நாட்டின் கலாச்சார, கல்வி சுகாதார வேலைகளை வழி காட்டி நடத்துகிறது. சீனாவிலுள் தேசிய இனங்களின் பிரச்னைகளையும், வெளி நாட்டுச் சீனர்களின் பிரச்னைகளையும் அது தீர்க்கிறது. தேசிய இனங்களின் சுயாட்சிப் பிரதேசங்களை, ஸ்தல ஸ்தாபனங்களின் சுற்றளவை எல்லாம் அது தீர்மானிக்கிறது. தேசியப் பாதுகாப்பையும், வெளிநாட்டு விவகாரங்களையும் அது கவனிக்கிறது.

எனவே சீன அரசியல் திட்டமும், அரசியல் அமைப்பும் மேற்கத்தைய ஜனநாயகத்தின் உயர்ந்த அம்சங்களை கொண்டிருந்த போதிலும், முதலாளித்துவ ஜனநாயகத்தின் முரண்பாடுகளையும், தகராறுன அம்சங்களையும் தவிர்த்துள்ளது.

பாரத தேசிய இளைஞர் சங்கம்

இலங்கை பாரத தேசிய இளைஞர் சங்கத்தின் சார்பில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மண்டபத்தில் சென்ற 6-3-55 ல் திரு ஜே. ஏ. கால்பட் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சாத்தான் குளம் தொகுதி உபதேர்தலில் வெற்றி பெற்ற திரு செல்வராஜை பலர் பாராட்டிப் பேசினர்கள். பின் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தமிழ் நாட்டு காந்தி மதுரை திரு வைத்தியநாத ஐயரின் மரணத்திற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

மன்னிப்பு

14-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். இத்தகைய பண்பு எமக்கு உண்டானதும் மன்னிக்கும் குணம் தானாகவே, இயற்கையாகவே உண்டாகிவிடும்.

தமிழர்களாகிய எமக்கு மன்னிக்கும் பண்பு இல்லை என்றுதான் சொல்லவேண்டும் அப்படிச் செய்வது மானக்கேடு எனக் கருதுகிறோம். மனிதனே மனிதன் மன்னிப்பது மானக்கேடா? எங்களிடம் இருக்கும் ஏதாவது சொத்துகள் அழிந்து ஒழிந்துவிடுமா? அப்படி ஒன்றும் நடக்காது. அவ்வித மான பொறுமையுடன் மன்னிப்பது பெருமையாகவிருக்கும். இதைத்தவிர வேறொன்றும் நடவாது. இது திண்ணம். இச்சமயத்தில் மேல் நாட்டாரைச் சற்றுக் கவனிப்போம். அவர்களுக்கு மன்னிப்புப் பண்பும், நன்றி செலுத்தும் குணமும் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அவர்கள் உலகில் உயர்ந்தவராக இருப்பதற்கு இவைகள் காரணமாக இருக்கலாம். இதைப் பல பெரியோர்கள் உண்மையெனக் கொண்டிருக்கிறார்கள். இதை நாமும் ஏற்றுக்கொள்ளாது இருக்க முடியாது.

உலகில் வாழும் மாந்தரோ எல்லாரும் தவறுகள் செய்யாது வாழ்பவர்களல்லர். தவறுவது மனிதன் இயற்கையான சுபாவம். ஒருவன் தவறியதற்கு அவனின் மேலதிகாரி மன்னிக்க மறுத்தாலுஞ்சரி, அவனின் குற்றங்குறைகளை எவரும் மன்னிக்க மாட்டார்கள். இது பலரின் அனுபவம்.

ஆகவே மாணவர்களாகிய நாம் இவ்விளவயதிருந்தே மன்னிக்கும் பண்பு வாய்ந்தவர்களாக வளர முயல்வோமாக. இம்முயற்சி வெற்றி பெறுக.

வெற்றிகரமான 4வது வாரம்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10மணி, பி.ப. 2மணி, மாலை 6, இரவு 9-30மணி

மாளிகைப் பிரபுவிற்கும் மண்குடிசை மடந்தைக்கும் ஏற்பட்ட காதலைச் சித்தரிக்கும் சிறந்த சமூகக் கதை.

எடிஜூனியர், டிஸ்னி ரஞ்சனி

முதலியோர் நடிக்கும்

சிலோன் தியேட்டர்ஸாரின் மகத்தான வெளியீடான

சுராங்கனி (சிங்களம்)

வெற்றிகரமான 4-வது வாரம்!

செல்லமஹால்

காலை 10-00, பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30

வீ. நாகையா, பி. கே. சரஸ்வதி, பாஷ்யா, மனோகர், வித்யாவதி, நம்பியார் நடித்த

நண்பன்

சென்ட்ரல் (கொழும்பு) - ராணி (யாழ்ப்பாணம்) போகம்பரை (கண்டி)

இன்று காலை 10-00 மணிக்கும், மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்
நாளை மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்

வடுவூராரின் திகில் நிறைந்த அதியற்புதமான துப்பறியும் நாவல்!

அவள் வீட்டிலிருந்து வெளியேறும்போது அவன் என்ன நினைத்தான்?

அவன் உள்ளத்தில் சந்தேகப் புயல் கடுமையாக வீசிற்று.

அந்தப் பயங்கர உண்மை என்ன?

கே. ஆர். ராமசாமி, லலிதா, ராகினி, சாரங்கபாணி, ராமச்சந்திரன் நடித்த



கஸ்தூரி பிலிம்ஸ்

மேனகா

நடனம்: பத்மினி & குசலகுமாரி

டைரக்ஷன்: சுப்பராமன்

சங்கீதம்: பாண்டுரங்கன்

எல்லா இலவசச் சலுகைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எல்லோரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய

"ரேகை சாஸ்திரம்"

விளக்கப் படங்களுடன் கூடியது

விலை சதம் 50

சம்சாரம் எப்படி பந்தப்படுகிறது, காதல் எவ்வகையில் கனிரசம் தருகிறது என்பதை சுவாரஸ்யத்துடன் விளக்கமாக "சிரஞ்சீவி" தருகிறார்.

"சம்சார பந்தம்"

விலை ரூ. 1-00

"ரூம் நி. 21"

"சிரஞ்சீவி" எழுதிய புரட்சிகரமான காதல் நவீனம்

விலை ரூ. 1-00

போஸ்டல் ஆடர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நவலட்சுமிபுத்தகசாலை

136, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமண்டல அதிசயங்கள்

இன்று விஞ்ஞானம் எண்ணிப் பார்க்கும்போது வியப்பளிக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறது; முன்னேறிக்கொண்டும் வருகிறது. இன்றைய மக்கள் சகலரினதும் நாட்டமும் சந்திரமண்டலத்திலும் செவ்வாய் மண்டலத்திலுமே லயித்திருக்கின்றது. விஞ்ஞானிகளும் சந்திரமண்டலத்தை அடைய எத்தனிக்கிறார்கள். ஆகவே நாமும் அதைப்பற்றிச் சிறிது அறிந்திருப்பது நல்லதல்லவா?

பூமியிலிருந்து 2,38,000 மைல் தூரத்திலுள்ளது சந்திரமண்டலம். அது மிகச் சிறியதாகத் தோன்றுவதற்குக் காரணம் அதிக தூரத்தில் இருப்பதுதான். மணிக்கு 500 மைல் செல்லக் கூடிய ஒரு சாதாரண விமானம் சந்திரமண்டலத்தை அடைவதற்கு பதினைறரை நாட்கள் பிடிக்கும். பௌர்ணமி தினத்தன்று சந்திரன் வழக்கத்தைவிடச் சற்று பெரிதாகத் தோன்றுகிறது. அது பூமிக்குச் சிறிது கிட்ட வந்து விடுவதுதான் அதற்குக் காரணம். ஒளிப்பிரகாசமாக விளங்கும் சந்திரனிற் கறை காணப்படுகின்றது. ஆனல் எமக்குக் கறைபோல் தோன்றுவது பெரும் பெரும் மலைகள்தாம்.

சந்திர மண்டலத்தில் காற்றே இல்லை. ஆகவே அங்கு மனிதரோ, பிராணியோ, அல்லது எந்த உயிருள்ள ஜீவன்தானும் வசிக்க இயலாது. தாவரங்கள் வளர்வதற்கும் காற்று வேண்டுமே. எனவே அங்கு தாவரங்களும் வளர்வதில்லை, ஒலி காற்றின் மூலமாகத்தான் பரவுகிறது சந்திரனிற் காற்று இல்லாத படியால் எவ்வித ஒலியும் கேட்பதில்லை. எங்கும் ஒரே நிசப்தம்தான் குடிகொண்டிருக்கும். அங்கு வளரும் செடி, ஓடும் ஆறு, நெடுங்கடல், பெய்யும் மழை ஒன்றையுமே காண முடியாது. பெரிய பெரிய மலைகளும், கற்பாறைகளும், பயங்கரமான பள்ளத்தாக்குகளும், புற்பூண்டுகள் வளராத சமதரைகளுமே அங்கிருக்கின்றன. வலையம்போன்ற— நடுவிலே இடைவெளியுள்ள மலைகள் அங்கு அநேகம். சிலவற்றின் விட்டமே (Diameter) 120 மைல்களாம்! எங்கும் வரண்டு புழுதி படர்ந்திருக்கும். காற்றிருக்கவேண்டுமே புழுதியைப் போக்குவதற்கு. சந்திர மண்டலம் பகற்காலங்களில் சகாரா வனந்தரத்தைக் காட்டிலும் பன்மடங்கு வெப்பம் கூடிய தாய் இருக்கும். நாம் சந்திர மண்டலத்திற்கு அண்மையில் ''ராக்கட்டிலோ'' (Rocket) அல்லது வேறெவ்விதமான விமானத்திலோ சென்று பார்த்தால் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் தீபங்களைப் போன்று அங்குள்ள மலைகள் கடும் சூட்டினல் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஆனல் இரவிலோ எங்குமில்லாத குளிர் அங்கு வந்தடைகிறது. அதாவது வடதுருவத்திலுள்ள கடுங்குளிரிலும் பார்க்க எத்தனையோ மடங்கு கூடிய குளிருள்ளதாய் இருக்கிறது சந்திரமண்டலம்.

சந்திரன் இரவில் எங்களுக்கு இன்பமான ஒளியைத் தருகிறது. அதன் தண்ணொளியிலே மயங்காதார் யார் உளர்? ஆனல் அந்த ஒளி அதன் சொந்தமானதன்று; சூரிய ஒளியின் பிரதிபலிப்பேயாகும். பூமியும் சந்திரனைப்போல் சூரியனின் ஒளியைப்பிரதிபலிக்கிறது. நாம் சந்திரமண்டலத்தில்இருந்து பூமியை நோக்கினல் அது சந்திரனைக்காட்டிலும் அதிக பிரகாசமாக ஒளி வீசுவதை பார்க்கலாம்.

சந்திர மண்டலத்தில் எகிறிப் பாய்ந்தால் 20 யாருக்கு அப்பால்போய் நாம் விழுவோம். மேலும் பூமியில் 80 ரூத்தல் நிறையுள்ளவன் சந்திரமண்டலத்தில் 15 ரூத்தல் நிறையுள்ளவனாக இருப்பான். இதற்கு ஆகர்ண சக்திதான் (Force of Gravity) காரணம். அங்குள்ள ஆகர்ண சக்தி பூமியைக் காட்டிலும் எவ்வளவோ குறைவானது. அப்படி மிகக் குறைவாக இருப்பதே நிறைகுறைவதற்கும் அதிக தூரம் பாய்வதற்கும் காரணமாக இருக்கின்றது.

க. சபாரத்தினம்

மாவீரன் நெப்போலியன்

27-2-55 சுதந்திரனில் பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றித் தெரிந்து கொண்டோம். அப்புரட்சி நெப்போலியன் எனும் வீரனைத் தந்தது. நெப்போலியன் கோசிக்கா நாட்டிற் பிறந்தவன். அவனைப்பற்றி அவனுடைய துணிவைப் பற்றி எத்தனையோ கதைகள் உண்டு. அம்மாபெரும் வீரனின் இளம் வாழ்க்கையைப் பற்றியும் பல கதைகள் உண்டு.

ஒருநாள் நடுச்சாம வேளையில் நெப்போலியனின் தாய் தன் மகனைப் படுக்கையிற் காணாது தவித்தாள். உடனே எங்குந் தேடினுள். நெப்போலியன் ஓர் குளக்கரையில் ஆனந்தமாக இருந்தான். தாய் மகனைக் கண்டவுடன் ''தம்பி உனக்குப் பயமில்லையா'' எனக் கேட்டாள். எதிர்காலத்தில் மாபெரும் தளபதியாகப்போக இருக்கும் இள நெப்போலியன் ''பயமென்றுல் என்னம்மா'' எனக் கேட்டான். இத்தகையவர் எங்கள் நாட்டில் எத்தனைபேர் உளர்? சிறுவரும் பெரியவரும் பேய்க்கும் திருடனுக்கும் பயப்படுகின்றனர். ஏன் இந்தப்பயம் கொள்கின்றீர்கள்?

நெப்போலியன் ஓர் ஏழையின் மகனைப் பிறந்தாலும் எங்கள் நாட்டில் இருப்பது போல் ''எனக்கெழுதின விதி இதுதான்'' என அவன் வீணில் இருக்கவில்லை. ''முயற்சி திருவினையாக்கும்'' என்பதற்கொப்ப முயற்சி செய்தான். 'நானும் ஒருகாலம் மனிதரால் மதிக்கப்படுவேன்' எனும் நோக்கத்துடன் தன் முயற்சியை விடாது உழைத்தான். முயற்சியின் பலனல் படையிற் சாதாரண அங்கத்தவனாக இருந்த நெப்போலியன் உலகத்தையேஅதிரச்செய்த மாபெரும் படைத்தளபதியானன்.

படையெழுச்சியில் அவனின் திறமையை யாராலும் அளவிட முடியாது. அவனின் புத்திக் கூர்மையைக் குறிக்கும் கதையொன்றுளது. நெப்போலியனின் குதிரையின் லாடங்களைப் பின்பற்றி அவற்றின் அடையாளங்களைக்கொண்டு பகைவர் பின்துரத்தி வருவதுண்டு. இதையறிந்த நெப்போலியன் தன் பக்கம் சேர்ந்த குதிரைகளின் லாடங்களை மறுபக்கமாகத் திருப்பி அடித்துக் கொண்டான்.

சண்டையில் வெற்றி மன்னிக்கும் குணம் சுலபமாக எவருக்கும் அமையாது. இப்பொறுமையைக் கூட கல்வியினலோ, வேறெந்தவிதமான புறசெயல்களால் பெற்றுவிடலாம் என்று நினைக்கக்கூடாது;

''சங்கிலியன்''

சாத்தியமானதில்லை. வேறெவ்வாறு அவ்விதமான பண்பை நாம் பெற்றுக் கொள்ளலாம்? எமது நெஞ்சத்தை நாம் பண்படுத்திக் கொள்ளல்வேண்டும். அப்பொழுதுதான் அச்சாதனை சாதிக்கலாம். பொறுமை அவசியம் என மேலே சுட்டிக்காட்டினேன். பொறுமை எதனையும் பாதிக்கும் என்ற நெஞ்சுறுதி எமக்கும் வேண்

(13-ம் பக்கம் பார்க்க)

மன்னிப்பு

மன்னிக்கும் பண்பு மனிதனுக்கு இருக்கவேண்டும். அது அவனிடம் இல்லையானல் அவன் மனிதனுகக் கருதப்படமாட்டான். அவனுக்கு அறிவு இருந்து பயன் இல்லை. விலங்கினத்திற்கும் மக்கட் குலத்திற்கும் வேற்றுமை இருக்காது. நெஞ்சம் இருந்தும் அது இல்லாதுபோல் நடக்கிறார்கள் சிலர். நெஞ்சத்தின் பெருமையை அவர்கள் அறியவில்லையென்றே சொல்லலாம்.

மனம் இருந்தால் மட்டும் போதாது. கல்வி கற்றல் குறைகள் எல்லாம் நிறைவேறிவிடும் என்று கருதக் கூடாது. கல்வியால் மன்னிக்கும் பண்பு வந்துவிடும் என எண்ணலாகாது. அதற்குப் பொறுமை வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் உரிமைக்கு வித்திட்ட மேரி

முற்காலத்தில், சர்வாதிகாரம் தாண்டவமாடிய காலத்தில், பெண் உரிமை என்றுல் பரிகசிப்பார்கள். பெண்களை உணர்ச்சியற்ற ஜீவனென, விட்டில் பூச்சியென மதித்தார்கள்.

''வீட்டினில் பெண்களைப்
பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர்
தலை கவிழ்ந்தார்''

என்ற நிலைமை வர எத்தனையோ நூற்றுண்டுகள் சென்றன. பலரின் உயரிய சேவைகள் தேவைப்பட்டது.

முதல் முதலில் 1792-ம் ஆண்டில் ''பெண்களின் உரிமையை நிலைநாட்டல்'' என்ற நூலை எழுதி உலகப் பெருமை அடைந்தார் மேரி வுல்ஸ்டன் கிராப்ட். அவரின் துணிகரமான முயற்சி பெண்ணுரிமைக்கு வித்திட்டது.

உலகில் பெண்கள் பல துறைகளில் பிரசித்தியடைந்தார்கள். உலகப் புகழ் பெற்ற கிரேக்க கவிதா சிரோன்மணியான சப்போ என்ற பெண்ணும், 9ம் நூற்றுண்டில் நாடகங்கள் எழுதிய கிரோஸ்விதா என்ற பெண்ணும், விற்ரூறியா கொலோனு என்ற பெண்ணும் உலகிற்கு பற்பல சேவைகள் செய்து குன்றின் மேலிட்ட தீபமாகத் திகழ்கிறார்கள். ஆனல் பெண்கள் உரிமைக்காகச் சேவை செய்ய முன்வந்த முதல்வர் மேரியே.

இவருக்கு முப்பது வருடங்களுக்கு முன் 'ஆண்களின் உரிமை'க்கு வித்திட்டார் பிரெஞ்சுப் பேரறிஞர் ரூசோ தன் 'சோஷியல் கொன்ருக்ட்' என்னும் நூல் மூலம். அந்நூலில்: 'பெண்களின் கல்வி, ஆண்களுக்கு அநேகமாக உதவியாக இருக்கவேண்டும். ஆண்களுக்கு அன்பு நல்கவும்,

கரம்பனூர் கருணு

சிறுவர்களாக இருக்கும் பொழுது கல்வி போதிக்கவும், வளர்ந்த பின்பு அறிவுரை பகரவும், துயரம் ஆற்றவும், ஆண்களின் வாழ்க்கை வளம் பெறுவதற்கும் உற்ற துணையாக இருக்க வேண்டும்'' என்று கூறுகின்றூர். இதுதான் ரூசோகண்ட பெண்ணுரிமை!

மேரி லண்டனிலுள்ள கொக்ஸ்டனில் 1759-ம் ஆண்டு பிறந்தார். அவர் தன் குடும்பத்தில், உற்றூர் உறவினரின் வாழ்க்கையிலேயே பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டார். சிறு வயதில் தகப்பன் தாய் சண்டை பிடித்தால், மனஸ்தாபப்பட்டால் கண்ணீர் சொரிந்து விலக்குப் பிடிப்பார். அவரின் தங்கை எலிசா கொடுமை செய்யும் கணவனை மணந்தார். மேரியே தங்கையின் உரிமைக்காக வாதாடி அவளின் வாழ்வை வளம் பெறச் செய்தார். 'மகளிர் கல்வியைப்பற்றிய சிந்தனைகள்' என்பதே அவரின் முதல் நூல்.

மேரி பாரிஸிலுள்ள இம்லே என்பவரைக் காதலித்தார். காதல் கைகூடாமல் போகவே பிரபல ஆங்கிலச் சீர்திருத்தவாதி வில்லியம் கொட்வினை மணந்தார். அவரின் மகள் பிரபல கவிஞன் ஷெல்லியை மணந்தார்.

இவர் இவ்வாறு பெண் உரிமைக்கு வித்திட்டதாலேயே இன்று ஆணுடன் சரிசமனக பழகுகிறோம். இப்சன் எழுதிய நாடகம் ஒன்று ஐரோப்பாவையே 'கிடுகிடு'க்க வைத்தது. பெண்களைப்பற்றிச் சிந்திக்க வைத்தது. அவரின் 'பொம்மையின் வீடு' ஓர் புரட்சியையே உண்டுபண்ணி வைத்துவிட்டது எனலாம். அந்நூலில் ஓர் பெண்ணைக் கணவன் உணர்ச்சியற்ற பொம்மையாக நடத்துகிறன். பொறுமையே பெண்ணின் லக்ஷணமானபடியால் பொறுத்துப் பார்க்கிறுள்; விமோசனம் பிறக்கவில்லை. கணவனை எதிர்த்துப் பிரிந்து தனி வாழ்வு நடத்தி வளமுடன் வாழ்கிறுள். இதில் ஆண்களுக்கு, அவர்களின் முறையற்ற செயல்களுக்கு சாட்டை கொடுக்கிறுர் இப்சன்.

ஆங்கிலப் பேரறிஞரான பெர்னட்ஷா தனது நாடகங்களில் பெண்களுக்கு பெண்கள் உரிமைக்கு, சமத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறுர் அவரின் நாடகங்கள் யாவற்றிலும் பெண்மையின் பொலிவே வியாபித்திருப்பதைக் காணலாம்.

இவை யாவும் மேரி இட்ட வித்து வளர்ந்து மரமாகி அது நல்கியவைதாம். பெண்கள் உலகம் கருத்துக்கருலுலமும், அறிவுப் பெட்டகமான மேரியை என்றென் மறவாது என்பது யதார்த்தம்!

கழகச் செய்திகள்

உகுவளையில் பெற்றூர் தின விழா

உக்குவளை அரசினர் திரேஷ்ட உயர்தர பாடசாலை பெற்றூர் தின விழா சென்ற மாதம் 22ம் 23ம் திகதிகளில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதலாம் நாள் மத்திய மாகாணப் பகுதி வித்தியாதரிசி திரு அ. சரவணமுத்து தலைமைதாங்கினர். மாணவர்கள் பாடசாலைக் கீதமும் வரவேற்புக் கீதமும் இசைத்தனர். தலைமையாசிரியர் திரு ஏ. எஸ். நல்லையா வரவேற்புரை நிகழ்த்தினர். பாடசாலையின் சென்ற ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. திரு பி. எஸ். வைத்தியலிங்கம் (மாத்தளை வித்தியாதரிசி) தலைவர் அவர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சி குறித்து தலைமையாசிரியரையும் உதவியாசிரியர்களையும் வெகுவாகப் பாராட்டினர்கள். மாணவர்களின் நிகழ்ச்சிகள் மிகவும் உயர்ந்த தரமுடையனவாக இருந்தன. தனதிகாரி திரு செ. ஏரம்பசர்மா ஆசிரியர் வரவு செலவுக் கணக்கை வாசித்தார். காரியதரிசி ஜனப் ச. சயீதும் தலைமையாசிரியரும் நன்றியுரை கூறினர். இரண்டாம் நாள் பெண்களுக்காக மாத்திரம் மாணவர் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முஸ்லிம் பெண்களுக்காக விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. திருமதி சொர்ணம்பாள் நல்லையா ஆசிரியை ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

விள்பொளை புஹாரிக் கமிட்டி

விள்பொளை ஜும்மா பள்ளிவாசலில் 23-2-55 துவக்கம் அல்ஹாஜ் ஏ. ஏ. மரிக்கார் காதியினதும் இன்னும் பலரதும் முயற்சியால் ஸஹீஹ் புஹாரி என்னும் கிரந்தத்தை ஓத ஆரம்பித்து வைத்தார்கள். இக்கிரந்தத்தை ஒரு மாத காலம்வரை ஒவ்வொரு நாளும் காலை 6 மணிமுதல் 9 மணிவரை ஓதி மார்ச் மாதம் 24ம் திகதி காலை 9 மணியளவில் தமாம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வைபவத்தை ஆரம்பித்து வைத்து புஹாரிக் கமிட்டித் தலைவர் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்கள்.

தமிழர் நல வளர்ச்சிக் கழகம்

அங்குலானைத் தமிழர் நல வளர்ச்சிக் கழகத்தின் செயற் குழுவின் மூன்றுவது கூட்டம் சென்ற 27-2-55ல் துணைத் தலைவர் திரு ந. விசயசிங்கம் தலைமையின் கீழ் தொடங்கியது. சென்ற கூட்ட அறிக்கை செயலாளராலும் பொருளாளரால் வரவு செலவு கணக்கும் முறையே வாசிக்கப்பட்டுச் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கழகச் செயலாளர் திரு க. அமரசிங்கம் கழக அமைப்பு விதிகளின் தமிழ் மொழிபெயர்ப்பைச் சபையில் சமர்ப்பித்தார். 11-45க்கு அங்குலானையிலிருந்து செல்ல வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கட்கும் ஏனைய பிரயாணிகட்கும் புகையிரதமில்லாததால் ஏற்படும் கஷ்டத்தை நீக்கப் புகையிரதக்கால அட்டவணையில் திருத்தம் செய்யுமாறு புகையிரத அதிகாரியைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கிண்ணிய மஜ்மஉல் உலமா சங்கக் கூட்டம்

கிண்ணியா நத்வத்துல் புஹாரிய்யாவில் மஜ்மஉல் உலமா சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 21-2-55ல் ஜனப் எம். எம். கனிபா ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி ஜனப் டி. ஏ. எம். இஸ்ஹாக் தனது வருடாந்த அறிக்கையோடு 18-4-54ல் நடைபெற்ற 28ம் வருட புஹாரிக் கந்தூரி வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தார். அதன்பின் 1955ம் ஆண்டுக்கான 29ம் வருட புஹாரிக் கந்தூரி நிருவாக சபை மஜ்மஉல் உலமா சங்கத்திலிருந்தும், பொது மக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டது. நிருவாக சபை உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:—

தலைவர்: ஜனப் எம். எம். ஹனிபா ஹாஜியார், உபதலைவர்: ஜனப் எம். அப்துல் லெத்தீபு விதானியார், காரியதரிசி: ஜனப் டி. ஏ. எம். இஸ்ஹாக் ஆசிரியர், உபகாரியதரிசி ஜனப் எம் அப்துல் மஜீது விதானியார், தனதிகாரி: ஜனப் கே. அப்துல் மஜீதுஹாஜியார். இத்தோடு நிருவாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கபூரியா தப்லீக் ஜமாஅத்

கபூரியா தப்லீக் ஜமா அத்தின் பொதுக்கூட்டம் மஹறகம கபூரியா கலாசாலையில் 24-2-55ல் கூடிற்று கூட்டத்திற்கு கல்னூரிய திபரும் ஜமாஅத் தலைவருமாகிய மௌலானு மௌலவி முஹம்மது ஷம்சுத்தீன் (பாகவி) தலைமை வகித்தார்கள். ஜனப் எம். எச். எம். அமீனுல் கிருஅத் ஓதப்பட்டது.

தலைவர் உரைக்குப்பின் காரியதரிசி மௌலவி ரூஹுல்ஹக், பொக்கிஷாதிபர் மௌலவி வி. எஸ். எஸ். புகாரி ஆகியோர் தங்கள் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். மௌலவி முஹம்மது கஸ்ஸாலி (அப்ஸல் உலமா) மௌலவி எம். ஐ. எம். பளீல் (கபூரி) மாணவர்கள்: என். எம். செய்யிது முஹம்மது. எம். ஐ. எம். சித்தீக், எம். எஸ். அபூதாஹிர், எஸ். எம். இஸ்ஸுத்தீன், ஒ. எம். முபாறக், ஒ. எம். புகாரி, டி. கே. எம். மீரான் முஹியுத்தீன், எம். எச். எம். அமீன், ஏ. கே. உத்மான். எம். எஸ். எம். ஹனபி, எஸ். எம். இப்ரூஹீம், எஸ். ஏ. எம். ஹாஷிம் எஸ். எம். ஹபீபுல்லா, எம். ஏ. ரூஹுல்லாஹ் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஜனப் முஹம்மது சுபைர், ஏ. எம். சலீம், எம். எஸ். அபூதாஹிர் ஆகியோர் அரபிக்கீதம் பல இசைத்தனர்.

மூதூர் இந்து வாலிப சங்கம்

மூதூர் இந்து வாலிபர் சங்க அங்குரார்ப்பண விழா சென்ற 28-2-55ல் மூதூர் ஸ்ரீ சித்தி வினயகர் ஆலயத்தில் திரளான இந்து அபிமானிகள் சமுகத்தில் விசேஷ பூசையுடன்தொடங்கிற்று. பிரிவு காரியாதிகாரி திரு நவரத்தினராசா தலைமை தாங்கினர்.

பின்னர் சங்கத்திற்கு தலைவராக தெரிவுசெய்யப்பட்ட திரு ஒப்பிலாமணி தன்னைத் தலைவராக்கியதற்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். திரு வே. திருஷ்ணபிள்ளையும் திரு வ. திருநாவுக்கரசும் பேசினர்கள். பின்வருவோர் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்: திரு வி. ஆர். நவரத்தினராசா, தலைவர்: திரு ஒப்பிலாமணி, உபதலைவர்: திரு க. வயிரமுத்து, காரியதரிசி: திரு எஸ். சபாரத்தினம், உபகாரியதரிசி: திரு ஐ. அரசரத்தினம், தனதிகாரி: திரு செ. சின்னராசா, கணக்குப் பரிசோதகர்: திரு வே. கிருஷ்ணபிள்ளை, நிருவாகசபை அங்கத்தவர்கள்: திரு கே. தங்கராசா, திரு கே. சி. அம்பலவாணர், திரு வ. திருநாவுக்கரசு, திரு கி. லிங்கரெத்தினம், திரு வே. வயிரமுத்து, திரு கே. காளிராசா.

கிந்தோட்டை இஸ்லாமிய சமூகசேவா சங்கம்

கிந்தோட்டை இஸ்லாமிய சமூக சேவா சங்கத்தின் 4ம் ஆண்டு விழா சமீபத்தில் ஜனப் எம். ஜே. எம். ஹம்மாத் தலைமையின்கீழ் நடைபெற்றது. புதுவருட உத்தியோகஸ்தர் தேர்தலில் ஜனப் எம். ஜே. எம். ஹம்மாத், ஜனப் எம். எஸ். எம். சித்தீக் ஆகியோர் தலைவர்களாகவும் ஜனப்களான எம். எஸ். எம். தீன், ஏ. ஆர். எம். சமது, ஏ. எம். எம். ஸாலீம், எம். ஐ. எம். சக்கூர் ஆகியோர் காரியதரிசிகளாகவும் ஜனப்களான எம். ஏ. சி. எம். ஜிப்ரி ஆசிரியர், எம். எம். அபுல்ஹஸன், எம். ஏ. சி. எம். அகமது தாவுசா ஆகியோர் தனதிகாரிகளாகவும், ஜனப் ஏ. எம். பி. முகம்மது ஆசிரியர் கணக்குப் பரிசோதகராகவும், ஜனப்களான எம். எம். அன்லர், எம். எம். எல். எம். மஹ்றூபு, ஏ. எச். எம். நூர், எம். ஏ. சி. எம். ஹுசைன், எம். எஸ். எஸ். ஹுஸைன், (ஆசிரியர்) எம். எச். எம். மூர்தலா (ஆசிரியர்) ஆகியோர் நிர்வாகசபை உத்தியோகஸ்தர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:— முன்வரும் ஏப்ரல் மாதம் கிந்தோட்டையில் ஓர் இலவச நூல் நிலயம் திறக்குதல், சங்கத்தின் தபால்களைப் போட ஓர் தபால்பெட்டி செய்துவைத்தல், இஸ்லாமிய கீதங்கள் என்றோர் புத்தகம் வெளியிடல்.

வெள்ளி விழா

அளவெட்டி சதாநந்த வித்தியாசாலை வெள்ளி விழாக் கொண்டாட்டம் வைகாசி மாதத்தில் கொண்டாட இருப்பதால் அதை முன்னிட்டு சென்ற 24-2-55 மேற்படி வித்தியாசாலையில் ஓர் காரிய நிர்வாக சபைக் கூட்டம் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு அ. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் அதன் ஞாபகார்த்தமாக ஓர் மலர் வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியைக்குப் பிரியாவிடை

தேற்றுத்தீவு ரோ. க. மி. பாடசாலையில் ஐந்து ஆண்டுகளாக அருந் தொண்டாற்றிய திருமதி ரி. ஜீ. செபமாலை மேரி ஆசிரியை மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் கல்வி பயில்வதற்குச் செல்வதையிட்டு மேற்படி பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் சென்ற 25-2-55ல் அன்னருக்குப் பாடசாலை தலைமை ஆசிரியர் கே. ரி. சதாசிவம் தலைமையில் பிரிவுபசாரக் கூட்டம் ஆரம்பமானது.

தலைவருரையில் அவ் ஆசிரியையின் கடமைகளைப்பற்றியும் தொண்டுகளைப்பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினர். பின் ஞாபகார்த்தப் பொருள் செல்வன் தெய்வனையகத்தால் வளங்கப்பட்டதும் ஆசிரியர்கள் திருமதி ராஜகோபால், ஆறுமுகம் சிவஞானம் பிரிந்து செல்லும் ஆசிரியை திருமதி டி. ஜி செபமாலை மேரி முதலியோர் சொற்பொழிவாற்றியதும் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

திரிகோணமலைப் பகுதி கால்நடைக் காட்சி

திரிகோணமலைப் பகுதி மூன்றுவது ஆண்டு கால்நடைக் காட்சி 24-2-55ல் தம்பலகாமத்தில் மூதூர்ப் பிரதிநிதி ஜனப் எம் ஈ. எச். முகம்மதலியால் திறந்து வைக்கப்பட்டது

இக்காட்சியை பொதுமக்களின் உதவியோடு கிருஷிகப் பகுதி நடத்தியது. இந்த வைபவத்திற்கு கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய், திரிகோணமலை முதலிய பகுதிகளிலுள்ள மக்கள் தங்கள் கால்நடைகளை ஆர்வத்துடன் காட்சிக்குக் கொண்டு வந்திருந்தனர்.

சிறந்த கால்நடைகளுக்குரிய பரிசுகளை ஜனப் எம். ஈ. எச். முகம்மதலியால் வழங்கப்பட்டது.

கிருஷிகப் பகுதி அதிபர் திரு எஸ். சங்கரப்பிள்ளையும், கிருஷிகப் பிரசாரப் பகுதி எம். ஜெயரத்தினமும் சொற்பொழிவாற்றினர்.

சின்னப் பொரளை இ. தி. மு. க. கிளை

சின்னப் பொரளை இ. தி. மு. க. கிளையின் ஆதரவில் சென்ற 27-2-55 தேர்தல் கூட்டமொன்று கழகப் பணிமனையில் நடைபெற்றது அவ்வமயம் கீழ்க் கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:- ச. ச. செல்லத்துரை துணை செயலாளர்: ச. ராமையா பொருளாளர்: அ. அருள்பிரகாசம் துணை பொருளாளர்: நா. கிருஷ்ணன். செயற் குழு வினர்களாக திருவாளர்கள் ம. ச. அருணாசலம், ரா. ராசையா, ந. கோகிலன், அ. ச. ந. ஆங்கிலா, ச. பி. முத்து, க. நா. முத்துமணி, ச. பிராஞ்சிஸ், ரா. முருகேசு, க. சுப்பிரமணியம், ச. நா. ராஜா, ம. மாயழகன் முதலியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் மத்திய குழு பிரதிநிதிகளாய் ப. சுப்பிரமணியம். மு. ச. வேலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படட்னர்.

பசறைத் தமிழ் ஞானோதயச் சங்கம்

பசறை அரசினர் மத்திய கல்லூரி, தமிழ் ஞானோதயச் சங்கத்தின் நாலாம் கூட்டம் 25-2-55ல் அதன் தலைவர் ஜனப். எஸ். எஸ். சரீப்தீன் தலைமையின் கீழ் கூடிற்று.

அதன் பின், செல்வன். எஸ். எஸ். அலாவுதீன், 'ஜனநாயகம்' என்பது பற்றியும், செல்வி ஏ. பூபதி, 'விஞ்ஞானம்' எனபது பற்றியும் பேசினர். செல்வன். எம். முத்துவேலாலும், செல்வி. மகேஸ்வரியாலும் சொற்பொழிவுகளாற்றப்பட்டன.

அதிபர் அனுமதி அளித்தால், 'புதுமை முரசு' ஆசிரியர் திரு. ஏ. தங்கராசனை வரவேற்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பதுளை தமிழாசிரியர் சங்கம்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கம் பதுளைக்கிளையின் வருடாந்தக் கூட்டம் 26-2-55ல் பண்டாரவளை சென்ற் யோசேப் கல்லூரிமண்டபத்தில் கிளைத் தலைவர் திரு. எஸ். கந்தையா தலைமையில் ஆரம்பமாயது.

சென்ற வருட அறிக்கை, வரவு செலவு, வரும் வருடச் செலவு மதிப்பு அங்கீகரிக்கப்பட்டன.

தாய்ச் சங்கத்திலிருந்து விசேஷமாய் வந்த கௌரவ பொதுத் தனதிகாரி திரு. கே. எஸ். கந்தவம் சங்கத்தின் இப்போதைய நிலையையும், அது சாதித்தவைகளையும், சாதிக்கவேண்டியவைகளையும், தொழிற் சங்கத்தின் சக்தியையும், தமிழர் ஆசிரியர்களின் ஒற்றுமையையும் சாங்கோபசாங்கமாய் விஸ்தரித்தார்கள்.

இதன் பின்னர் புது வருடத்திற்கு டிக்வெல அ. த. பாடசாலைத் தலைமையாசிரியர் திரு எஸ். கந்தையா தலைவராகவும் அப்புத்தளை அ. த. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ். வேலுப்பிள்ளை காரியதரிசியாகவும் பதுளை அரசினர் தமிழ்ப் பாடசாலை உதவியாசிரியர் திரு எஸ். மாணிக்கம் தனதிகாரியாகவும், மற்றும் பலரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மலச்சிக்கலுக்கும் மூலவியாதிக்கும்

ரிஷி லேகியம்

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்

இதனைச் சாப்பிடுவதால் 9 வகையான மூலரோகங்களும் அதற்கு காரணமான மலச் சிக்கல்கள், அவற்றால் ஏற்படும் உபாதைகளும் பூரணமாக தீர்ந்துபோகும். மூலமுளைகள், இரத்தம், சீழ், பவுந்திரம், உள்மூலம், வெளிமூலம், தீராத மலச்சிக்கல், மூலச்சூட்டினால் உண்டாகும் உபாதைகள், தேகமெலிவு, கை கால் தேக எரிவு, கடுப்புகள், வாய்வு ரோகங்கள், இரத்த அசுத்தத்தால் உண்டாகும் தோலிப்பற்றிய வியாதிகள், சூதக ரோகங்கள், யாவும் தீரும். கேட்டாக் இனமாக கொடுக்கப்படும்.

30நாள் மருந்து ரூ. 5 50 15நாள் மருந்து ரூ. 3-00
தபால் செலவு சதம் 85.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு:

சோல் ஏஜண்டு:-
எஸ். சுப்பிரமணியம் அன் கோ.,
55, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான 2வது வாரம்!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்] மற்றுமொரு
பிரமாண்டமான வெளியீடு!

காமினி (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) குயின்லன் (நுககொடை) வெம்பிளி (கண்டி)

இன்னும் பல திரைகளில்

இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

★ அசோகா

மிஸ் புஷ்பாஜனெட், சுமதிபிபிலே,
மிஸ் பிரேமகாந்தி, ஆனந்த வீரக்கூன்
முலியோர் நடித்தது.

மகத்தான 2வது வாரம்!

சினிமாஸ் லிமிட்டெட் ஸதாபனத்தாரின் மகத்தான மற்றுமோர் புதுமை வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம் & திருகோணமலை)

தமிழ்ச் சினிமாவில் புதுமையிலையே என அங்கலாய்த்த அபிமானிகளுக்கு ஏ. வி. எம்.மின் அன்பளிப்பு!

நடனமோ,சங்கீதமோ இல்லாத முதல் தமிழ் படம்!

தமிழ்ப் பட உலகில் புதியதோர் சகாப்தத்தை ஏ. வி. எம். அமைத்துள்ளார்கள்!

சுதந்திர நாட்டைக் காட்டிக் கொடுக்க முயலும் கணவனு தாய் நாடா ஒரு பெண்ணின் வாழ்வில் முக்கியமானது?

இந்தச் சிக்கலான வினவிற்கு பதில் திரையில் காணுங்கள்.



"அந்த நாள்"

சிவாஜி கணேசன், பண்டரிபாய்,
சூர்யகலா, ஜாவார் சீதாராமன் நடித்தது.
டைரக்ஷன்: "பெண்" படப் புகழ் பாலசந்தர்.

மைலன் (கொழும்பு)

வெற்றிகரமான 4வது மாதம்!

எம். ஆர். ராதா, ஸ்ரீ ரஞ்சனி நடிக்கும்

ரத்தக் கண்ணீர்

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1955 மார்ச் 13ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org